# வெளிச்சம்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

## சிறுகதைச் சிறப்பிதழ்



மாநகர சபை
யாழ்ப்பாணம்

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!!

கையிருப்பில் குறைவான நாடாக்களே உள்ளன
ஏமாற்றத்தை தவிர்க்க இன்றே வாங்குங்கள்

# நல்லை முருகன் பாடல்கள்

(பாடல் ஒலிப்பதிவு நாடா)

பக்திரசம் சொட்டச் சொட்ட நல்லை முருகன் மேல்

**கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய பாடல்கள்**
**ஈழத்தின் இசையரசு கண்ணனின் இசையில்**
**இசைக்கலைமணி வர்ணராமேஸ்வரன் பாடியுள்ளார்**

அழகிய மூவர்ண அட்டையுடன்
**இனிமையும், சுவையும், கருத்தும் இணைந்த இசையமுதம்**
**'நல்லை முருகன் பாடல்கள்'**
**பாடல்களைக் கேட்டுப் பரவசமடையுங்கள்**

*கீழ்க்காணும் இடங்களில் மட்டும் தரமான ஒலிப்பதிவுடன்*
*மூவர்ண அட்டையுடன் கூடிய*
*நல்லை முருகன் பாடல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்*
*முகப்பு அட்டையற்ற ஒலிநாடாக்களை*
*வேறிடங்களில் வாங்கி ஏமாறாதீர்கள்!*

கிடைக்கும் இடங்கள்.

மாருதி வீடியோ விஷன்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

நித்தியா ஸ்பொட்
கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

சன் றெக்கோடிங் ஸ்பொட்
நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

ரவி ஒலி கானம்
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்ற
13 - 9 - 1994
யாழ்ப்பாணம்



மதிற் சுவர்களுக்கு கைகளில்லாததால்
சுவரொட்டி ஒட்டுபவர்கள்
உயிருடன் திரும்புகின்றனர்.
வாக்குச் சீட்டுக்கு வாயில்லாததால்
வேட்பாளர்கள் தப்பிக்கொள்கின்றனர்.
சாக்கடைச் சேறு அள்ளுபவர்களுக்கும்
நேர்முகத் தேர்வு உண்டு.
தகுதிபார்த்தே நகரசபை வேலைவழங்கும்.
அரசியல் வாதியாக மட்டும்
எதுவும் வேண்டாம்
அம்மணமானாலும் அதற்கென்ன?
எவன் கேட்பானோ அவன் வேட்பாளன்.
அரசியலுக்கு வந்துவிட்டால்
ஆணுக்கும் பெண்ணுக்கும்
அங்கங்கள் வேறுபடுமே தவிர
ஆசைகள் வேறுபடுவதில்லை.
மார்புக்கச்சையையும், கோமணக் கச்சையையும்
மாறிமாறி அணிந்து கொள்ளலாம்.
அறுபதிலே ஆசை அறும்.
சுத்தப் பொய்.
அரசியல் வாதிகளுக்கு
அறுபதுக்குப் பின்புதான் எல்லாமே ஆரம்பம்.
வெற்றிபெறவேண்டுமென்பதற்காக
கட்டிய மனைவியையே காசுக்கு விற்பார்கள்.
பொதுத்தேர்தல் வந்துவிட்டால்
பிள்ளைக் கறியுடன் பந்தி பரிமாறுவர்.
தேர்தல் ஒரு கூத்து
மக்களோ சூத்திரக்கிணற்றடி மாடுகள்

—மாலிகா

பண்ணுர்பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

# வெளிச்சம்

ஆவணி - 1994
இதழ் - 28
விலை - 25/=

ஸ்ரீலங்காவில் நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடந்து முடிந்துள்ளது. பதினேழு வருட இருண்ட ஆட்சி முடிந்து விட்டதென்று இங்கும் சிலர் நிம்மதிப் பெருமூச்சுவிடுவது கேட்கிறது. புதியபிரதமராக திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா பதவியேற்றதும் 'இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பது எனது தலையாய கடமையென்றும், புலிகளே தமிழர்களின் பிரதிநிதிகள், அவர்களைப் பேச்சுக்கு அழைப்பதற்கு அதுவே காரணம்?' என்றும் கூறியுள்ளார். கேட்பதற்கு சங்கீதம்போல சந்தோசமாக இருக்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் தாங்களே தமிழர்களின் பிரதிநிதிகள் என்று தென்தமிழீழத்திலிருந்து ஐந்துபேரும், வட தமிழீழத்திலிருந்து பன்னிரண்டு பேரும் நாடாளுமன்றத்துக்குப் போயுள்ளார்களே! இவர்கள் யார்?

புலிகளே தமிழர்களின் பிரதிநிதிகள் என்று பிரதமரே கூறும்போது, தேர்தல் மூலம் தெரிவானவர்கள் என்றுகூறும் இந்தப் பதினேழுபேரும் எந்தமக்களின் பிரதிநிதிகள்? இதற்கு எங்களுக்கு எவர் பதில் கூறப்போகின்றார்கள்? ஒன்பதுவாக்குகளைமட்டுமே பெற்ற ஒருவரை நாடாளுமன்றம் உறுப்பினராக ஏற்று, பதவிப் பிரமாணமும் செய்துவைக்கும் விசித்திரம் எந்த ஜனநாயக விதிகளில் எழுதப்பட்டிருக்கிறது. தேர்தலைக் கண்காணிக்கவந்த சர்வதேசக்குழுவும் யாழ்ப்பாணம், வன்னி ஆகியமாவட்டங்களில் தேர்தலை நடத்தியது ஜனநாயகத்துக்கு முரணானது என்ற கருத்தையே முன்வைத்துச் சென்றுள்ளது. இத்தனைக்குப் பின்பும் இந்தப் பதினேழுபேரும் எப்படி நாடாளுமன்றப்படிகளில் ஏறலாம்? எப்படி அந்த ஆசனங்களில் சென்று அமரலாம்?

இனப்பிரச்சனைக்கு புலிகளுடன் பேசுவோம் என்று சகோதரி சந்திரிகா கூறியுள்ளதை வெளிச்சம் வரவேற்கிறது. தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாகிய விடுதலைப் புலிகள் அன்றிலிருந்து சமாதானத்துக்கான கதவுகளைத் திறந்துவைத்துக்கொண்டு 'கடைவிரித்தோம் கொள்வாரில்லை' என்ற மாதிரி அமைதியான, சமாதானமான, அதேவேளை உரிமைகளுடன் கூடிய தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு தயாராகவேயுள்ளனர். இதில் வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை. தமிழர் தாயகம் துண்டாடப்படுவதை தமிழர்களும், விடுதலைப் புலிகளும் என்றுமே ஏற்றுக்கொள்ளமாட்டர்கள். கருத்துக்கணிப்பு மூலம் இணைப்பதும் பிரிப்பதும் என்ற விளையாட்டு "கிழட்டு நரி" ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் திட்டமாகும். இந்தப் பல்ல

வியே பாடிக்கொண்டு சகோதரி சந்திரிகா இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண முனைந்தால், அது தொடங்கிய இடத்திற்கே திரும்பி வந்து நிற்பதாகவே முடியும்.

பேச்சுவார்த்தை என்பது அழகான விரிப்புடன் கூடிய மேசையில் இருந்து 'வீடியோ கமரா' க்களுக்கு முகம்காட்டுவ தல்ல, உள்ளத்தில் வஞ்சம் நிறைந்திருக்க கள்ளத்தனத்துடன் கைகுலுக்கிக்கொள்வதல்ல. பிரச்சனையின் ஆணிவேரைப்புரிந்து கொண்டு இதயசுத்தியுடன், தீர்வுகான வேண்டுமென்ற சிரத் தையே, பேச்சுவார்த்தைக்கு முதல்படியாகவேண்டும். எத்தனை பேச்சுவார்த்தைகள்? எத்தனை போர்நிறுத்தங்கள்? எத்தனை வாக்குறுதிகள்? இப்படி எத்தனை எத்தனையை நம்பி தமிழர்கள் ஏமாந்து போனார்கள்? சகோதரி சந்திரிகாவுக்கு இதுதெரியா தல்ல.

புதிதாக ஒரு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் போது பேரின வாத உணர்வுடன் வளர்க்கப்பட்ட அதிகமான சிங்களமக்களும், பௌத்தபீடங்களும் இனவாத அரசியல் வாதிகளும் எவ்வளவு தூரம் இடையூறுவிளைவிப்பார்கள் என்பது நமக்குத் தெரியா தல்ல. புதிய பிரதமருக்கு முன்னால் உள்ள நெருக்கடிகளை நாங்கள் புரியாதவர்களும் அல்ல. இத்தனைக்கும் மத்தியிலும் தான் பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும்.

தமிழர்களின் பக்கத்தில் எந்த சிரமமோ, சிக்கலோ இருக்கப் போதிவல்லை. விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை பேச்சு வார்த்தைக்கான கதவுகளை முன்னரே திறந்துவைத்துள்ளனர். கிடைத்தசந்தர்ப்பத்தை திருமதி. குமாரணதுங்கா சரியாகப் பயன் படுத்துவார் என்றே நம்புகின்றோம்.

• •

இந்த இதழ் வெளிச்சத்தின் சிறுகதைச் சிறப்பிதழாக வெளி வருகின்றது. இந்தச் சிறப்பிதழில் அநேக புதிய, இளைய படைப் பாளிகளே எழுதியுள்ளனர். புதிய, இளையபடைப்பாளிகளை வெளிச்சத்துடன் இணைந்து நீங்களும் அரவணைத்துக்கொள்ளு வீர்கள் என எதிர்பார்க்கின்றோம். தொடர்ந்து இவ்விதமான சிறப்பிதழ்கள் வெளிவரவுள்ளன. அவற்றுக்கான படைப்பாக் கங்களை படைப்பாளிகளிடமிருந்து வெளிச்சம் எதிர்பார்க் கின்றது.

# நான் ஒரு கனவு காண்கிறேன் அது நனவாக வேண்டும்



தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

> 19-09-1992 அன்று, தமிழீழ படைத்துறைப் பள்ளியின் முதலாண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வெளியாகிய ஆண்டு மலருக்கு தலைவர் வழங்கிய வாழ்த்துச் செய்தியை இங்கு தருகிறோம்.

நான் ஒரு கனவு காண்கிறேன். அந்தக் கனவு நனவாகி, நடைமுறை உண்மையாக வேண்டும் என்பது எனது அவா.

எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ள வேண்டும். ஆற்றல்மிகுந்தவர்களாக, அறிவுஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய, புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்.

இது ஒரு பெரிய ஆசை; அலாதியான கனவு. எனினும் நான் முயற்சிக்கிறேன். முயற்சி ஆக்கம் தரும் என்பதில் எனக்கு ஆழமான நம்பிக்கை உண்டு.

தமிழீழப் படைத்துறைப்பள்ளி எனது முயற்சிகளில் ஒன்று. இந்தப் படைத்துறைப் பள்ளிஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகிறது.

தமிழினத்தின் நீண்ட பெருமை மிக்க வரலாற்றில் புதைந்து போன ஒரு வீரமரபு மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய காலத்தின் வளர்ச்சிப் போக்கிற்கு அமைய நவீன போர்க்கலை அறிவும், எமது இயக்கத்தின் சொந்தப் போராட்டப் பட்டறிவும், ஏனைய துறைசார் கல்வியும் ஒன்றிணைந்து ஒரு புதிய பாடத்திட்டத்தில் எமது இளம் போராளிகள் இங்கு பயிற்சி பெறுகின்றனர்.

இந்த ஓராண்டில் பிரமிக்கத்தக்க வகையில் படைத்துறைப்பள்ளி வளர்ச்சி கண்டுள்ளதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த அபாரமான முன்னேற்றத்துக்காக அயராது உழைத்த படைத்துறைப் பள்ளி பொறுப்பாளருக்கும், ஆசிரியர்களுக்கும், ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

தமிழீழப் படைத்துறைப்பள்ளியின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு வெளியாகும் ஆண்டு மலருக்கு எனது ஆசிகள்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.'



இருள் பிரிந்து வெளிச்சம் மிக லேசாகப் பரவிக் கொண்டிருந்த நேரம். ஆடி, அசைந்து குண்டுங் குழியுமாய்க் கிடந்த பாதையினூட மிகவும் நிதானமாகப் போய்க்கொண்டிருந்தது, அந்த ஆட்டோ. திருநெல்வேலிச் சந்தியை நெருங்கியபோது, அதனுள் தூங்கி வழிந்து கொண்டிருந்த ராகவன் விழிப்புப் பெற்றான். நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டவன் தனது பார்வையை வெளிப்புறம் நோக்கி மேய விட்டான்.



ஐந்து வருடங்களின்பின் தன் சொந்த ஊரை நோக்கிப் பயணமாகிக் கொண்டிருந்த அவனது மனத்தில் ஏதேதோ விதமான கற்பனைகள், எண்ணங்கள் ஆக்கிரமித்துக் கொள்ள அவன் மௌனமாய் அமர்ந்திருந்தான். ஆட்டோ, கோண்டாவில் சந்தியை அண்மித்ததும், அவனையறியாமலே அவனுள் ஓர் குறுகுறுப்புத் தோன்றி மறைந்தது.

அந்தச் சந்தியில் நின்று அவனும் நண்பர்களுமாகச் செய்த அட்டகாசங்கள் ஒரு கணம் நினைவில் வந்தது. தொடர்ந்து இந்திய ஆக்கிரமிப்புப் படையினரிடம் அதேசந்தியில் வைத்து வசமாக மாட்டிக் கொண்டதும், அந்நிய அரக்கரிடம் நன்றாக வாங்கிக்கட்டியதும் ஞாபகத்தில் வந்து போனது. அவனது கை அவனையறியாமலே முதுகைத் தடவிக்கொண்டது. இன்னமும் அங்கே தழும்பொன்று கிடப்பதை அவனது கைகளின் ஸ்பரிசத்தினால் உணரமுடிந்தது.

"ம்!"......... அவனைப் பொறுத்தவரையில் அந்தத்தழும்பு நெஞ்சைவிட்டகலாத நினைவுச் சின்னம். திடீரென அவனுக்கு நண்பன் வாசுவின் நினைவு வருகிறது. இருவரும் இணைபிரியா நண்பர்கள். ஒன்றாகவே படித்து, ஒன்றாகவே விளையாடி, ஒன்றாகவே கூடித்திரிந்து, ஆக்கிரமிப்புப் படையில் அடிவாங்கியதும் ஒன்றாகத்தான். அத்தனை பிணைப்பு அந்த உறவில் ....

ஆனால் அவர்கள் பிரிந்ததும் அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் தான். மறு நாளே வாசுவை வீட்டில் காணவில்லை. ராகவனை

# விழிப்பு

□ "மலரன்னை" □

அவனது அப்பா அரும்பாடுபட்டுக் கொழும்பிற்கு அழைத்து வந்துவிட்டார். இரண்டு மாதங்களாகக் கொழும்பில் நின்று ஏதோ ஒருவாறு ஒரு ஏஜென்சியைப் பிடித்து அவனைக் கனடாவுக்கு அனுப்பிவைத்தார். ராகவனுக்குக் கனடாவில் அகதி என்ற அந்தஸ்தைப் பெற்றுத் தர அவனது முதுகிலிருந்த தழும்பு முக்கியமாகக் கைகொடுத்தது.

புதிய சூழல், புது நண்பர்கள், புதுமையான அனுபவங்களுடன் ஐந்து வருடங்களை அவன் எப்படியோ கழித்துவிட்டான். கனடாவுக்குப்போன புதிதில் அம்மாவுக்கு கடிதம் எழுதும் போது வாசுவைப் பற்றியும் விசாரித்து எழுதும் பழக்கம் அவனிடம் இருந்தது. அம்மாவிடமிருந்து அவனைப் பற்றிய பதில்கள் எதுவுமே வராததால் நாளடைவில் அவனும் வாசுவைப் பற்றி விசாரிப்பதைத் தவிர்த்துக் கொண்டான்.

இப்போது வாசு எங்கிருக்கிறானோ? என்ன செய்கிறானோ?

அவனது சிந்தையில் புதிதாய் முளைத்தது புதிர் ஒன்று. மறு நிமிடம் அம்மாவிடமிருந்து வந்த கடிதத்தைப் பற்றிய சிந்தனையில் மனம் லயித்து விட்டது. அம்மா எழுதிய வசனங்களை அவனது மனம் அசைபோடத்துவங்கியது.

'தம்பி ராகவன், அப்பாவுக்குப் பிறசர் கூடி வருத்தமாய் வார்ட்டில் வைத்திருந்து இப்ப வீட்டிற்கு கொண்டு வந்து விட்டோம். அவருக்கு ஒரு கையையும், காலையும் இழுத்துப்போட்டுது. படுக்கையில்தான் இருக்கிறார். என்னாலையோ, மாலாவாலையோ அவரைத் தூக்கிப் பறிக்க ஏலாது. ஏதோ நீ உழைத்து அனுப்பும் காசில் ஒரு ஆளைப் பிடித்து வைத்துப் பார்க்கிறோம். எதுக்கும் நீ ஒருக்கால் வந்து அப்பாவைப் பார்த்துக் கொண்டு போறது நல்லதென்று நினைக்கிறேன். இன்னொரு முக்கியமான விடயம். உனக்கும் வயது வந்திட்டுது. இங்குள்ள சனங்கள் நெடுகக் கரைச்சல். பெண்ணை உவ்விடம் அனுப்புறதுக்கு நான் முந்தி நீ முந்தி என்று திரியினம். நீ வந்தியென்றால் உனக்கு விருப்பமானதாகப் பார்த்து ஒன்றைச் செய்து கூட்டிக்கொண்டு போகலாம் என்று அப்பா எழுதச் சொன்னார்.'

அம்மா எழுதியதில் நியாயம் இருப்பதாக அவனுக்குப்பட்டது. அங்குள்ள அகதி முகாமில், திருமணமானவர்களுக்குக் கூடிய சலுகைகள் வழங்கப்படுவதை அவன் நேரில் அவதானித்திருக்கிறான். எனவே, தாயகத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

இத்தனை காலமும் தனது சொந்த மண்ணில் என்ன நடக்கிறதென்ற எண்ணமே இல்லாமல் வாழ்ந்து விட்டவனுக்கு, இப்போதுதான் ஊர் நினைவுகள் அடிக்கடி வரத்தொடங்கின. சென்ற ஞாயிறன்று நண்பன் சுரேனுடன் பார்த்த இரு குறும் படங்கள் நினைவில் வந்தன. தமிழீழத்தில் தயாரிக்கப்பட்ட 'சின்ன விழிகள்' 'தாயகக் கனவு' ஆகிய படங்களை அவன் வீடியோவில் பார்த்தபோது, தங்களுடைய நாட்டில் இப்படிப்படங்களை எடுக்குமளவிற்கு முன்னேற்றமடைந்திருப்பதையிட்டுத் திருப்திப் பட்டுக்கொண்டானே தவிர, அவனிடம் எந்தவிதமான உணர்ச்சியும் தோன்றவில்லை. ஆனால் அவனது நண்பன் சுரேன் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப்போனான்.

''மச்சான்! எங்கடை மண்ணிலை இப்படியான நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கேக்க நாங்கள் இவ்வளவு தூரத்திலை அந்நியப்பட்டுப் போயிருக்கிறது எனக்கெண்டால் துப்பரவாகப் பிடிக்கேல்ல.''

ஆட்டோ ஒரு கிடங்கில் விழுந்து எழும்பியதால் அவனது சிந்தனையும் குலுங்கிப் போய், கலைந்து விட்டது. தனது வீட்டிற்குத் திரும்ப வேண்டிய ஒழுங்கையை நினைவுபடுத்திக் கொண்டவன், டிரைவரிடம் ஆட்டோவை அந்தப் பாதையினூடே செலுத்தும்படி சொன்னான்.

ஆட்டோ, ஒரு குலுக்கலுடன் வீட்டு வாசலில் நின்றது. கிணற்றடியில் நின்று மாலா குரல் கொடுத்தாள்.

''அம்மா! அண்ணா வந்திட்டார்''

அடுத்து, அம்மாவும், மாலாவும் வாசலுக்கு விரைந்து வந்தனர். இதற்கிடையில் சாமான்களை ஆட்டோவிலிருந்து இறக்கி வைத்து விட்டுப் பணத்தைக்கொடுத்து ஆட்டோக்காரனை அனுப்பிவைத்தான் ராகவன்.

"அம்மா! அப்பா எங்கை?"

கேட்டுக்கொண்டே வீட்டினுள் நுழைந்தான் ராகவன். மாலா அவனை அப்பா படுத்திருந்த இடத்துக்கு அழைத்துப் போனாள். மகனைக் கண்டதும் அவர் படுக்கையிலிருந்தவாறே குலுங்கிக் குலுங்கி அழுதார்.

"ஏன் அப்பா அழுகிறியள்? நல்ல மருந்தெடுத்துக் குடிக்க எல்லாம் சுகமாயிடும். கவலைப்படாதேங்கோ"

அவனது குரல் கரகரத்தது. அவரருகில் அமர்ந்து அவரது கைகளைத் தூக்கித் தடவிவிட்டான். மகனது தழுவலில் ஏற்பட்ட சுகத்தினால் தனைமறந்து அயர்ந்து போனார்.

ராகவன் தான் ஆசையாக அங்கிருந்து வாங்கி வந்த பரிசுப்பொருட்களைத் தங்கை மாலாவிடம் கொடுத்தபோது, அவள் அவற்றில் ஆர்வமில்லாமலிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தான். தான் அவளுக்கென ஆசையாக வாங்கி வந்த செயினை எடுத்து அவளிடம் கொடுத்தபோது' அவள்,

"அண்ணா! நான் இந்தச் சங்கிலியைக் கவனமாய் வைச்சிருந்து வரப்போகிற அண்ணிக்கு பிரசன்ற் பண்ணப் போறன்"

அவளது பேச்சைக் கேட்டு வியப்டைந்த ராகவன்,

"ஏன் மாலா உனக்கெண்டுதானே நான் ஆசையாய் வாங்கிக் கொண்டு வந்தனான் நீயே போடு".

"அண்ணா! நான் என்னெண்டு இதைக் கழுத்தில போட்டுக் கொண்டு திரியிறது. என்ரை சிநேதிகள் கனபேர் கழுத்திலை சயனைட் மாலை போட்டிருக்கினம். எனக்கு இதைப் போடக் கூச்சமாய் இருக்குது".

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மா சொன்னாள்.

"தம்பி! உவள் மாலா உப்பிடித்தான். இருந்திட்டு ஏதும் அலட்டுவாள்"

ராகவனுக்கோ ஊர்ப் புதினங்களைக் கேட்டு அறியவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. ஆனால் அம்மாவோ அவனை வாய் திறக்க விடாது கலியாணப்பேச்சிலேயே மும்முரமாய் இருந்தாள். அம்மாவின் தொணதொணப்பிலிருந்து விடுபட எண்ணியவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

அவனது சைக்கிள் ஒழுங்கையைக் கடந்து தெருவில் ஏறியது. தெரு முனைப்பில் ஒரு பெரிய கட்-அவுட் அவனது கண்களில் பட்டது. அதனை நெருங்கியவன், உற்றுப் பார்த்தபோது திடுக்கிட்டுப் போனான்.

'சரியாய் எங்கட வாசு மாதிரிக் கிடக்குது'

தனக்குள் சொல்லிக் கொண்டவன், அதன்கீழ் எழுதியிருந்ததை வாசித்தான்.

'கரும்புலி - கப்டன் லோறன்ஸ்'

அவனது விழிகள் மீண்டும் மீண்டும் அந்தப் படத்தில் தோன்றிய உருவத்திலேயே தமது பார்வையைப் பதித்தன.

வாசுதான் - நிச்சயமாய் இது வாசுதான் அவனது உடலெங்கும் ஒரு புல்லரிப்பு. மனத்தில் இனம்புரியாத சங்கடம்.

"ராகவன் அண்ணா! எப்ப கனடாவிலை இருந்து வந்தநீங்கள்?"

குரல் வந்த திசையில் திரும்பினான்.

"நீர்...... நீர் சரண்யாதானே?"

"ஓம் அண்ணா. மாலாவோடை வீட்டுக்கு வாறனான். மறந்து போனீங்களோ?"

"மறக்கயில்லை. ஓ!...... நல்ல ஞாபகமிருக்கு"

அவனுக்கு வார்த்தைகள் தடுமாறின. ஒரு கணம், மாலாவுடன் வீட்டிற்கு வந்து போகும் பழைய சரண்யாவை ஞாபகப் படுத்திப் பார்த்தான். இரட்டைப் பின்னலுடன் 'கவுண்' அணிந்து திரிந்த சரண்யா, இப்போது கட்டையாக வெட்டிய மயிருடன், ஜீன்ஸ், சேட் அணிந்து அவளது கையில்... ஆயுதம்.

சற்று முன் மாலா சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் அவனுக்குப் புரிந்தது.

''சரண்யா! இந்தப் படம்......''

''அது தெரியேல்லையே, உங்கடை பிரண்ட் வாசு அண்ணா தான்''.

சரண்யா ஒரு கையால், தோளில் மாட்டியிருந்த துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு, மறுகையினால் 'ஹாண்டிலை'ப் பிடித்தவாறு, சைக்கிளில் ஏறிப்போய் விட்டாள். அவள் போனதிசையையே பார்த்துக் கொண்டு நின்றான், ராகவன்.

அவன் சுய நினைவுக்குத் திரும்ப வெகு நேரமாயிற்று. அவனது மனதில் ஓர் சலனம். சரண்யா வெகு லாவகமாய்த் துப்பாக்கியை அணைத்தவாறு சென்ற காட்சி மீண்டும் ஒருமுறை அவனது கண்முன் தோன்றியது.

அவனது கைகள் தானாகவே சைக்கிளை வீடு நோக்கித் திருப்பின. வீட்டை அடைந்ததும் தங்கை மாலாவிடம் வாசுவைப் பற்றிய முழுத் தகவல்களையும் கேட்டு அறிந்து கொண்டான். அவள் சொன்ன விடயங்கள் அவனைத் திகைப்பில் ஆழ்த்தின. வாசுவின் அப்பாவுக்கு ஷெல் பட்டு முழங்காலுக்குக் கீழ் இரு கால்களும் துண்டிக்கப்பட்டு விட்டதாம். வாசுவின் தங்கை வாணியும் இயக்கத்துடன் இணைந்து விட்டாளாம்.

ராகவனுக்கு வாசுவின் குடும்பத்தைச் சந்திக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படவே, உடனே கிளம்பி விட்டான். வீட்டுக்குள் நுழையும்போது அவனது நெஞ்சம் பக் பக் என அடித்துக் கொண்டது. நிமிர்ந்து பார்த்தவனை சுவரில் இருந்தவாறு புன்சிரிப்புடன் வரவேற்றது, வாசுவின் படம்.

ஒரு தரம் சுற்று முற்றும் பார்த்தவன் ஒருவரையும் காணாததால், குரலைச் செருமிக் கொண்டான். வாசுவின் அம்மா, தன்னைக் கண்டதும் அழுது ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறாள் என எதிர்பார்த்திருந்தவனுக்குப் பெரும் ஏமாற்றம்.

உள்ளே இருந்து வந்து எட்டிப் பார்த்த வாசுவின் அம்மா, புன்சிரிப்புடன் அவனை ரவவேற்றாள்.

''தம்பி ராகவன்! எப்ப வந்த நீர்?''

''இண்டைக்குத்தான் வந்த நான்''

வாசுவின் படமொன்று மேசையில் வைக்கப்பட்டிருந்தது. கறுப்புச்சீருடையில், புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கறுப்புத் தொப்பியும் அணிந்து காணப்பட்ட அந்தப் படத்திற்கு மாலையிடப்பட்டிருந்தது. படத்தின் முன்னால்... அன்றலர்ந்த மலர்கள் அஞ்சலிக்காய் வைக்கப்பட்டிருந்தன.

''உம்முடைய சிநேகிதன் வாசுவைப் பாரும். எத்தினை பெரிய சாதனையைச் செய்து போட்டுப் போட்டான். ம்!......''

அவளது அடிமனத்தில் ஆழப் புதைக்கப்பட்டிருந்த பெற்ற பாசம் ஆழ்ந்த பெருமூச்சாக வெளிவந்தது. எனினும் அந்தத் தாயின் முகத்தில் ஒரு சாதனையாளனைப் படைத்துவிட்ட பெருமை தோன்றியதை அவன் அவதானித்தான்.

நண்பனது படத்தின் முன் நின்று அஞ்சலி செலுத்தியபோது ...... அவனையறியாமலே அவனது கண்களிலிருந்து இரு துளி நீர் நிலத்தில் விழுந்து தெறித்தது.

ஏதோ அரவங் கேட்டுத் திரும்பியவன் அங்கே... வாசுவின் அப்பா தன்னிரு கைகளையும் ஊன்றுகோலாக்கி அரைந்து வந்து கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். ஒரு நிமிடம் ராகவன் என்ன செய்வதென்றறியாது நிலைகுலைந்து போனான். அவர் தனது கைகளினால் கதிரையைப் பற்றிக் கொண்டே, மெதுவாக எழுந்து அதில் அமர்ந்து கொண்டார்.

அவரருகிற் சென்ற ராகவன், அவரது கைகளைப் பிடித்துக் கொண்டே விம்மத் தொடங்கினான். அவரது வார்த்தைகள் அவனை வியப்பிலாழ்த்தின.

''அழாதை தம்பி. எங்கடை வாசு தன்னுடைய சாவை அர்த்தமுள்ளதாக்கி, அதை விரும்பி ஏற்றுக் கொண்டவன். தன்னுடைய மக்களுக்காகவும், தனது சந்ததிக்காகவும் தன்னுயிரை அர்ப்பணித்த அவனுக்கு, நாங்கள் அவனுக்காக கவலைப் படுவது அறவே பிடிக்காது. இப்பிடி இரு ராசா''.

ராகவனது உள்ளமோ ஒரு கணம் அவரைத் தனது தந்தையுடன் ஒப்பிட்டு எடை போட்டது. அவனது உள்ளத்தின் எங்கோ ஓர் மூலையில் அரிப்பு ஏற்படுவதை அவனால் உணர முடிந்தது. வாசுவுடன் சேர்ந்து செய்த குறும்புகள் அவனது மனக் கண்ணில் நிழலாடின.

'வாசு எப்படியடா உன்னால இப்படி யான ஒரு சாதனையைச் சாதிக்க முடிந் தது?'

மானசீகமாகக் கேட்டுக் கொண்டான்.

ஆறேழு வருடங்களின் முன். அவர்களது அயலிலுள்ள கந்தசுவாமி கோயிலில் அன்று தேர்த்திருவிழா. நண்பர்களிருவரும் நேரத் தோடு கோவிலுக்குப் போயிருந்தனர். காலை எட்டு மணிக்கே தேர் இழுக்கத் தொடங்கி, தேர் இருப்பிற்கு வர உச்சிப்பொழுதாகி விட்டிருந்தது. கோயிலின் வீதிகளெங்கும் மக்கள் வெள்ளம். தேரில் வைத்து சுவா மிக்கு அர்ச்சனை செய்விப்பதற்காகக் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத் தாது மக்கள் நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.

ராகவனும் வாசுவும் ஒரு புறமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தனர். இருந்தாற்போல மக்களிடையே சலசலப்பு. யாரோ ஒரு வயதான மாது மயக்கம் போட்டு விழுந்திட்டாளாம். செய்தியறிந்ததும் வாசு ஓடோடிப்போய் நீர் கொண்டு வந்து தெளித்து அந்தப் பெண்ணுக்கு மயக்கம் தெளிய வைத்தான். மயக்கம் தெளிந்ததும் அவளை ஒரு கரை யில் உட்கார வைத்து விட்டு, அவளது அர்ச்சனைத் தட்டைத் தானே வாங்கிப் போய் வரிசையில் நின்று அர்ச்சனை செய் வித்துப் பிரசாதம் வாங்கி வந்து கொடுத் தான். மனம் நெகிழ்வுற்ற அந்தத் தாய் அவனை மனமார வாழ்த்தினாள்.

''தம்பி! உன்ரை பண்பான குணத்துக் கும், பரோபகார மனத்துக்கும் நீ ஒரு நாளைக்கு எல்லோராலும் போற்றிப் புகழப்படக் கூடிய ஒரு உச்ச நிலையிலை இருப்பாய். தெய்வத்தின்ரை சந்நிதியிலை இருந்து கொண்டு சொல்லுற இந்தத் தாயின்ரை வாக்குப் பலிக்காமல் போகாது''

அவளது வாக்கு இன்று நிஜமாகிவிட் டதா?

ராகவனால் எதையுமே ஊகிக்க முடிய வில்லை. அன்று அவன் வாசுவைக் கண் டித்தது நினைவில் வந்தது.

''ஏனடா வாசு, உனக்கு வேறை வேலையில்லையே. இந்த வெய்யிலுக்கை போய் வரிசையிலை நிண்டு அந்த மனிசிக்கு அர்ச்சனை செய்விச்சுக் கொண்டு வாறாய்?''

''என்னடா மச்சான் செய்யிறது. அந்த மனிசியைப் பாக்க எனக்கு என்ர அம்மா வைப் போல கிடந்துது. பாவம் எண்டிட் டுத் தான் உதவி செய்தனான். எனக்கு உப்பிடி மற்றவை கஷ்டப்படுற போது பாத்துக் கொண்டிருக்கேலாது''.

ராகவனுக்கு இப்போது புரிந்துவிட்டது. ஓ! . வாசு இந்த மண்ணிலுள்ள தாய் மார் படும் இன்னல்களைக் கண்டு அவர் களுக்காக, அவர்கள் படும் துயரைத் துடைப்பதற்கென்றே தன்னுயிரை ஈந்து, இந்த மண்ணிற்கே மைந்தனாகிவிட்டான்.

வாசுவின் பெற்றோர் அவனது பிரிவி னால் பெரிதும் பாதிக்கப்பட்டதாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் கூட அவர் களது கண்களில் ஒரு விதமான சோகம் இழையோடியதை அவனால் அவதானிக்க முடிந்தது. பெற்றவர்களாயிற்றே! பிள்ளைப் பாசம் அவர்களை அசைக்காமல் போகுமா என்ன!

அவர்களிடமிருந்து விடை பெற்ற வாசு, கனத்த இதயத்துடன் வீட்டை அடைந்த போது அம்மா ஒரு செய்தியுடன் அவனுக் காகக் காத்திருந்தாள்.

''தம்பி! புரோக்கர் வந்து இவ்வளவு நேரமும் காத்துக் கொண்டிருந்து போட்டு இப்பதான் போறார். நல்ல சீதன பாதனத் தோடை, வடிவான ஒரு பொம்பிளை இருக்காம். நாளைக்கு நல்ல நாளாம். பொம்பிளையை வந்து பாத்து ஒரு முடி வைச் சொல்லட்டாம்''

''சும்மா இருங்கோ அம்மா, எனக்குக் கலியாணமும் வேண்டாம். கனடாவும் வேண்டாம். எனக்கு எத்தினையோ வேலையள் கிடக்கு.''

மகனின் சினத்துக்குக் காரணம் புரியா தவளாய், தாய் விழித்தாள். □□

உதடுகள் பிரித்து நாவசைத்து சொற்களை உதிர்ப்பது அவ்வளவு கஷ்டமான காரியம் என்று யாரும் சொல்லமுடியாது. ஆனால் ஒரு சில சந்தர்ப்பங்களில் ஒரு சில விடயங்களை சொல்ல நேரும் போதுதான் அச்சிரமத்தை அனுபவிக்க முடியும். அதனைச் சொல்வதைவிட மலையைப் புரட்டி விடுவது கூட இலகுவானது போலத் தோன்றும். அந்தச் சில கணங்களில், என்றாலும் கூட இப்படியான சில கணங்கள் இப்போது அடிக்கடி வருவது சங்கடத்தைத் தோற்றுவிக்கிறது. உள்மன அரங்கில் சலிப்பை ஏற்படுத்தினாலும் கூட இந்த இழப்புக்களுக்கு பழிதீர்க்க வேண்டும் என்ற உணர்ச்சி மேலெழும்போது மரத்துப் போன நிலையில் சாவி கொடுக்கப்பட்ட பொம்மை போலவும் செயற்படவும் முடிகின்றது.

ரஞ்சன் தன் சைக்கிளை மிதித்துச் செல்லும் போது நெஞ்சில் எழுந்த உணர்ச்சிகளில் சிலவற்றை இப்படித்தான் விபரிக்க முடியும். ஆஷா இப்போது உனது உடல் மட்டும்தான் எம்மவர்களிடம் இருக்கிறதாம். உனது ஆவி பிரிந்து விட்ட செய்தியை எப்படித் தான் நான் போய்ச் சொல்லுவது?

# உயிரின் துடிப்பு

☐ இளையவன் ☐

போன முறை கூட நீ வீட்டுக்கு வந்த போது தனது மடியிலிருத்தி சோறு குழைத்து ஊட்டி விட்டதாய் சொன்னாவே உனது அம்மா. அவரிடம் போய் நீ மறைந்த செய்தியை சொன்னால் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறாள்? எம்மவர்களுக்கு நீயொரு கப்டனாக விளங்கியவள். ஆனால் உனது அம்மாவிற்கு இப்பவும் நீ குழந்தை. உன்னுடைய அப்பாவுக்கு நீ ஒரு செல்லப் பிள்ளை. உனது காலில் முள்ளு குத்தி விட்டால் கூட தனது கண்ணில் காயம் பட்டதாக கலங்கிவிடும் உள்ளம் அவருக்கு? நீ செய்த குறும்புத்தனங்களினால் எவ்வளவோ நட்டங்கள் வந்தபோதும்கூட உன்னைத் தண்டிக்கும் தைரியம் அவருக்கு இருந்ததில்லை. என்று என்னிடமே கூட எத்தனைதரம் சொல்லியிருப்பார். இப்படி எத்தனை எத்தனையோ விடயங்களை அறிந்த நானே நேரில் போய் ''உங்கட மகள் இனி வரமாட்டா'' என்று எப்படிச் சொல்லுவது? என்று எண்ணியபோது



ரஞ்சன் மிகித்து வந்த சைக்கிள் தானாகவே வேகத்தைக் குறைத்துக் கொண்டது வீதியோரமாக இருந்த நிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு, நிலத்தில் காலை ஊன்றிய படியே யோசனையில் ஆழ்ந்தான் ரஞ்சன்.

கோப்பாய்ப் பகுதியிலுள்ள முகாமொன்றில் தங்கியிருக்கும் புலிப்படைப் போராளி ரஞ்சன். அவன் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு ஒருசில வருடங்கள் தான் ஓடியிருக்கும் கூட இருந்தவர்கள் மரணத்தைத் தழுவிக் கொண்ட சம்பவங்கள் சற்றும் எதிர்பாராத முறையில் திடீரென மரணித்துப் போன நண்பர்களோடு கழிந்த பழைய நினைவுகள் - இனிமேல் காணமாட்டோம் என்று நம்பவே முடியாமல் இருக்கும் சிலரது மறைவுகள். இப்படி எத்தனை எத்தனையோ விடயங்கள் மனத்திரையில் வந்து போய்க் கொண்டிருந்தன.

மீசை அரும்பும் பருவம் அவனுக்கு. புலிகளின் சீருடைக்குள் புகுந்திருந்த அவனுக்கு அவனது உள்ளத்தில் எழுந்த அத்தனை உணர்ச்சிகளையும் படம்பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தது முகம். நிலத்தில் ஊன்றியிருந்த கால், சைக்கிளை மிதிக்க உந்தினாலும் யாரோ வரவேண்டும் என்று காத்திருந்தது போல் மனம் மறுத்தது. அவனுக்குள்ளேயே ஒரு போராட்டம். ஒரு ஒத்திகை நடந்து கொண்டிருந்தது.

இன்பம், வீரமரணம் அடைந்த செய்தியை சொல்லப் போன போது அவனது தாயார் அழுது குழறி ஊரைக் கூட்டிய சம்பவம் நினைவுக்கு வந்தது. ''ஆனையிறவில் காலமை சரியான சண்டை. எக்கச்சக்கமான அடிபிடி'' என்று தொடங்கிய போது ஆவலோடு விரிவாக கேட்கத் தொடங்கினாள் அந்தத் தாய்.

''என்ன மாதிரித்தம்பி என்ன நடந்தது? எல்லாம் விளம்பரமாய்ச் சொல்லு'' எனக் கூறிக் கொண்டே குசினிப் பக்கமாகச் சென்றாள் அம்மாள். குசினிக்கு வெகு சமீபமாகவே தலைவாசல் கொட்டகையும் அமைந்திருந்தது. தலைவாசல் திண்ணைக் குந்தில் இருந்த ரஞ்சன் மேற்கொண்டு எதையும் பேச முடியாதவனாக தொண்டை கட்டிக் கொண்டது போலிருந்தது''. இவ்வளவு ஆர்வமாக சண்டையைப்பற்றி விசாரிக்கும் அம்மாளிடம் எப்படி ''உங்கட மகள் .'' என்று சொல்லமுடியும் எனத் தடுமாறினான். மௌனமாகக் கழிந்த அந்தக் கணங்கள் ஒரு யுகத்தின் சோகச் சுமையாகி தோள்களில் அழுத்தியது

தேநீர்க் கோப்பையுடன் வந்த அம்மா ரஞ்சனின் கண்ணில் சொரியும் கண்ணீரைக் கண்டு கலக்கமடைந்தாள். அவள் தேநீர்க் கோப்பையை நீட்டி அவனைக் குடிக்கச் சொல்லவும் வாய் விட்டே அழுது விட வேண்டும் போன்றதொரு வேதனை அவன் நெஞ்சில் முட்டியது. ஆனால் பல்லைக் கடித்துச் சமாளித்துக் கொண்டவனாய் தேநீரை வாங்கிக் கொள்ள கையை நீட்டினான் ''என்ன தம்பி, என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்'' அவளாகவே கதையைக் கிளறினாள். ''இல்லையம்மா இண்டைய சண்டையில எங்களிலும் சிலபேர்...'' வார்த்தையை முடிக்கும் முன்பே துக்கம் தொண்டையை அடைந்தது. ''என்ன நடந்திச்சு விளம்பரமாய்ச் சொல்லுமன் இதென்ன அழுகை. இந்த நாளில பொம்பிளையள் கூட இப்பிடி அழ மாட்டினம்'' அவள் தைரியமூட்டினாள்.

''ஆனையிறவு காம்பில இருந்து வெளிக்கிட்டு வெளியவரப் பார்த்தானுகள். அதில சண்டை தொடங்கிச்சு. ஜீப்பு, றக்கு, கவசவாகனம் அது இது எண்டு கனக்க வரிசையாய் வர எங்கடையாக்களும் அடிச்சினம். துப்பாக்கியால சுட்டானுகள், ஆர். பி. ஜி. அடிச்சினம். சரியான சண்டை

நடந்துதாம். அந்த நேரத்தில அவ்ரோப் பிளேன் வந்து பீப்பாவைத் தள்ளீ விட்டுட்டான். அது எங்கட ஆக்கள் இருந்த பொயின்ற் ஒன்றில விழுந்து வெடிச்சது. அதுல எங்கட பொடியள் கொஞ்சப் பேர் சாக வேண்டி வந்திட்டுது'' என்று ஒரே மூச்சில பல்லைக் கடித்தபடி கூறிமுடித்த ரஞ்சன் நிமிர்ந்து அந்த அம்மாவின் முகத்தை ஒரு தடவை பார்த்தான்.

''வந்தவனுகள் திரும்பிப் போட்டாங்களே'' என்றாள் அவள். ஓமோம் எனத் தலையாட்டியவன் கூடவே ''இன்பமும் போயிட்டான் அம்மா'' என நிதானமாக அறுத்துச் சொன்னதுதான் தாமதம், கையிலிருந்த தேநீர்க் கோப்பை தரையில் உருள ''ஐயோ என்ர ராசா'' எனக் கதறி தலையில் அடிக்கத் தொடங்கிய அவளின் குரல் கேட்டு ஊரே கூடி விட்டது.

வந்தவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கும் மனத்திடத்தையிழந்து அழுது வடியும் கண்களும் கலங்கிய நெஞ்சமுமாக அங்கிருந்து வெளியேறிய ரஞ்சனின் மனத்திரையில் மறக்கமுடியாத நிகழ்ச்சியாக அது பதிவாகியது.

இது போல் பிறிதொருதடவை ஜெயா அம்மான் 'வீரமரணம் அடைந்து விட்டான்' என்ற செய்தியைச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்ட போதும் நடந்த சம்பவங்கள் நினைவில் வந்து மின்னியது ரஞ்சனுக்கு.

மன்னார்ப் பக்கம் நடந்த சண்டையொன்றில் ஜெயா அம்மான் வீரமரணத்தை தழுவிக் கொண்டு விட்டான் என்பது மட்டுமே ரஞ்சன் அறிந்த செய்தியாக இருந்தது. ஜெயா அம்மான் வீட்டுக்காரரோடு நெருக்கமான இயக்க ரீதியான தொடர்பு இல்லாத போதும் ஒரிரு தடவை போய் வந்திருக்கிறான் ரஞ்சன். அதனால் பெரிய சிரமம் ஏதும் இல்லாமயே சொல்லி முடித்து வரலாம் என்ற நினைப்போடுதான் அவன் அங்கு சென்றிருந்தான்.

ஆனால் அவன் வாசல் படலையைக் கடந்து உள்ளே போன போது வானொலிப் பெட்டியில் சந்தோசமான பாடல் வரிகள் போய்க் கொண்டிருந்தது. முன்பாக ஒரு கதிரையில் இருந்தபடி காலை ஆட்டிப் பாட்டை ரசித்துக் கொண்டிருந்தா ரதியக்கா.

''வாரும் தம்பி ஏது இந்தப் பக்கம்? என்ன விசேஷம் என்று வரிசையா சொல்லிக் கொண்டே கதிரையில் இருக்கும்படி சைகை காட்டினாள்.

இருக்க நேரமில்லையக்கா ஒரு அவசர அலுவல், ஐயா இல்லையோ என்றுபரபரப்பு பட்டபோது அவள் சொன்னாள்:

''கொஞ்சம் இருங்கோ. தம்பிக்கு ஒரு கடிதம் தரவேணும் எண்டு இருந்தனான். வளவுக்க நிற்கிறார் ஐயா, கூப்பிடுறன். நீங்கள் இருங்கோவன் வாறன்'' என்றபடி தாவிக்குதித்து வெளியே ஓடினாள்.

ஏதோ ஒரு வித மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கும் இந்த நிலையில் எப்படி இந்த வீட்டில் இந்தச் செய்தியை சொல்லுவது என்றே விளங்காமல் தத்தளித்துக் கொண்டான். ஐயா வந்த போதும் சரி... பிறகு அம்மா வந்து கதைத்த போதும் சரி அவனால் வாய் திறந்து எதையும் சொல்லி விடமுடியவில்லை. இதனிடையில் அவசர அவசரமாக எழுதிய கடிதத்தை நான்காக மடித்து என்வலப்பில் போட்டபடி ஓடிவந்த அக்கா இந்தக் கடிதத்தை கட்டாயம் தம்பியிட்டைக் குடுத்திடுங்கோ என்று நீட்டிய போதும் கூட மௌனமாக கடிதத்தை வாங்கிக் கொள்ளத்தான் முடிந்தது. எப்படி எடுத்துச் சொல்வது? எப்படி இந்தச் சந்தோசமான சூழலை குழப்ப முடியும்? எனத் தெரியாமல் தடுமாறிக் குழம்பி அவன் விரைவாக வெளியேறினான்.

இரண்டொரு வீடு தள்ளி இன்னொரு ஆதரவாளர் வீட்டுக்குப் போன போது ''ரதியக்காவுக்கு இன்று திருமணம் நிச்சயமாகி இருக்கிறது'' என்று சொன்னார்கள். விம்மி வரும் கண்ணீரைத்துடைத்துக் கொண்டு செய்தியைத் தெரிவிக்க வேறொரு மார்க்கத்தைத் தேட வேண்டும் என முடிவு செய்தவனாகினான் ரஞ்சன்.

இந்தப் பழைய நினைவுகள் மீண்டும் மீண்டும் வந்து போய்க் கொண்டிருந்தன. என்ன ரஞ்சன் யோசிக்கிறீர்? ஏன் இந்தப் பக்கம்? என்றவனாக நண்பனொருவன் கேட்கவும் தன்னிலைக்கு வந்தவனாக

மீண்டும் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான்.

'இல்ல இதில பக்கத்தில ஒரு வீட்ட போக வேணும் என்றவன் தலையை ஒரு கணம் தடவிக் கொண்டான். வீட்ட போயிற்று மெதுவா கதைய ஆரம்பிச்சு ஆஷா அக்காவுக்கு காயம் என்று சொல்லி, பின்னர் கொஞ்சம் கடுமையான காயம் என்று கூறி, ஐயாவைக் கூட்டிக்கொண்டு வரப் புகழுடலும் எமது ஆஸ்பத்திரிக்கு வரச் சரியாக இருக்கும்' எனத் திட்டமொன்று வகுக்கப்பட்டு இருந்து ரஞ்சனின் மனத்தில்.

''டேய் நீ, இப்ப எங்க போறாய்'' என்றான் ரஞ்சன்.

''லைபிறறியில போய் பேப்பர் பாப்பம் என்டுதான் இருந்தனான். ஏன் கேட்கிறாய்'' என்றான் மற்றவன்.

''அப்ப வாறியே இதில ஒரு வீட்ட போட்டு வருவம்''

''கன நேரம் செல்லுமே''

''இல்ல சுணங்காமல் வரலாம். வா போட்டு வருவம்'' எனக் கூறியபடி ரஞ்சனின் சைக்கிளுக்கு சமாந்தரமாக மற்றவனின் சைக்கிளும் வந்து கொண்டிருந்தது.

முத்திரைச் சந்தியைக் கடந்து செம்மணி நோக்கிச் செல்லும் தார்ரோட்டில் விரைந்து ஒரு சின்ன ஒழுங்கையில் திரும்பி ஒரு தட்டிப் படலையின் வாசலில் வந்து நின்றது இரண்டு சைக்கிளும்.

சைக்கிளின் மணியை ஒலித்து வீட்டுக்காரரை கூப்பிட்டான் ரஞ்சன்.

''என்ன இண்டைக்கு ஒரு புதுநூதனமாய் கிடக்கு; வாசலுக்கை நிண்டு மணியடிக்கிறது.'' ரஞ்சனை இனம் கண்டுவிட்ட ஆஷாவின் தாயார் கூறினார்.

''ஒரு அவசர அலுவல் அதுதான் வந்தனாங்கள்''

''அதுகிடக்கட்டும் உள்ள வாருமன்''

இனி ஒண்டும் சொல்ல ஏலாது போய்த்தான் ஆகவேண்டும். என மனதுக்குள் நினைத்தவனாய் சைக்கிளை விட்டிறங்கினான் ரஞ்சன். இருவருமாக வாசற்படலை தாண்டி உள்ளுக்குள் போயினர்.

''ஐயா இல்லையே''

''அவர் உங்கதான் மாட்டுக்கு தண்ணி வைக்கிறார். உங்கள் ஆரையும் காண வேணுமெண்டு சொல்லிக் கொண்டிருந்தவர்''. அவள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தாள்.

''ஏன் என்ன விசேசம்'' என்றான் ரஞ்சன்

''அது கிடக்கட்டும் வந்த விசயத்தை சொல்லுங்கோவன்'' இது அவள்.

''இண்டைக்கு கட்டுவன் பக்கத்தில ஷெல் அடிச்சதில்லே'' என்றான் ரஞ்சன் நண்பனைப் பார்த்து.

''ஓமோம் வடக்குப் பக்கமாய் ஒரே சத்தமாய் கிடந்தது. கட்டுவனிலேயே ஷெல் அடிச்சவங்களாம்''. என்று அவள் கூறவும் ஐயா வந்து சேரவும் சரியாக இருந்தது. ஐயா ஒரு விசயம் என்று தனியாக அவரைக் கூட்டிக் கொண்டு போய் ''கட்டுவனில ஆஷா அக்காவுக்கு காயம்''

-என்று மெல்லிய குரலில் இழுத்தான் ரஞ்சன். ரஞ்சனின் முகத்தை சுட்டெரிப்பது போலப் பார்த்தவர் ''காயம் எந்த இடத்தில'' என்றார் குரல் தழதழக்க.

''கொஞ்சம் பெரிய காயம் நீங்கள் வந்து பார்த்தால் நல்லது'' ரஞ்சன் மேலும் இழுத்தான்.

''எங்க வர வேணும் ஆஸ்பத்திரிக்கோ அல்லது...''

''எங்கட ஒபிசுக்கு வந்தால் சரி.''

அவருக்கு முழு விசயமும் விளங்கியிருக்க வேணும்.

''அப்ப தம்பி பொடியை (*Body*) எப்ப வீட்ட கொண்டு வரலாம். அதுக்கு நாங்கள் என்ன ஆயத்தம் செய்ய வேணும்'' அவர் தொடர்ந்த போது ரஞ்சன் விக்கித்தான். அவனது கண்ணிலிருந்து சிதறிய நீர்த்துளிகள் தாரை தாரையாக அந்த நிலத்தை நனைத்துக் கொண்டிருந்தது.

போராட்டத்தில் இழப்புகள் வருவது இயல்புதானே என்று அவர் கூறிய ஆறுதல் வார்த்தைகள் அவனது கண்ணீர் ஆற்றிற்கு அணைகட்ட போதுமானதாக இல்லை. □□

# தாயினும் நல்ல.....

□ இயல்வாணன் □


“அம்மாவென்றழைக்காத உயிரில்லையே அம்மாவை வணங்காது உயர்வில்லையே”

எங்கோ தொலைவிலிருந்து காற்றின் வீசலுக்கேற்ப காதுள் நுழைந்த இந்தப் பாடல் அவனை இவனது நினைவுள் கொணர்கிறது.

இந்த நான்காண்டுகளில் இவனோடு சமர்க்களங்களில் நின்றவர்களில் பலரில்லை. அவர்களுள் ஒருவனாக, எப்போதுமே நினைவுக்குத் தட்டுப்பட்டு நிற்கும் ஒரு பாத்திரமாக அவன் நின்றான். ஏனையோரிலிருந்து மாறுபாடான அவனது சுபாவம் இவனுக்கு அவனில் பிடிப்பை ஏற்படுத்தியிருக்கலாம்.

மெல்லிய அரிசிப் பற்களுக்குள் முளைத்த ‘தெத்திப் பல்’லை வெளிக்காட்டிக் கண்களைச் சிமிட்டி நீண்ட ஒல்லியான உடலை வளைத்து அவன் சிரிக்கும் போது, அது கூடக் காலமெல்லாம் அவனை ஞாபகத்தில் வைத்திருக்கும்.

கடைசியாக நடந்த பெருஞ் சமரொன்றில் எறிகணைச் சிதறல்கள் உடலைத் தாக்க, குருதி தோய அவன் மரணித்த அந்தக் கணத்தில் இவன் அவனருகே நின்றான். இன்னும் நான்கைந்து ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு வெற்றியுடன் இவர்கள் திரும்பிய போது, அதைப்பாட அவனில்லை.




இவன் அவனது உடலைத் தூக்கி வந்தான். மௌனத்தில் பொங்கிக் கொண்டு வழியெங்கும் சோக விதைகளைத் தூவித் தூவி எல்லோரும்.

அவனுடைய உடல் விதைகுழியில் நடப்பட்ட பின்னர், அவனது குறிப்புப் புத்தகத்தை இவன் தனதாக்கிக் கொண்டான். விலைமதிக்கவியலாத அவனது

நேசத்திற்கு அடையாளமாய் அது இருந்தது.

அதற்குள் இரு படங்கள் இருந்தன ஒன்றில் அவனது அம்மா சிரித்தபடி இருந்தார். மற்றதில் சிரித்தபடி தலைவர். அப்போதுதான் இவனுக்கு அழுகை பீறிட்டு வந்தது. கண்ணீர் பெருக, ஓவென அழுதான். உடலோடு ஒட்டி இருந்த ஒன்று, இல்லாமல் போனது போல இதயத்தின் ஒரு பக்கத்தில் உதிரம் உறையும்படியாக எதையோ இழந்து தவித்திருப்பது போல..

நீண்ட நேரம் அவன் நினைவுகள் அறுபட இயலாதனவாதப் பற்றிப் பிடித்தன.

ரைபிளைத் தூக்கிக் கொண்டு காவலரணுக்குப் போகும் போதும், சாப்பிடும் போதும், குளிக்கும் போதும்... அருகே அவன் துணையின்றி மனம் அவஸ்தைப் படும். நினைவில் அவன் முகம் தோன்றி உயிரைத் துவட்டும்.

அநேக வேளைகள்-

தனது 'T56-2'வை மடியில் வைத்து, கால்களைப் பரவி, காவலரண் மண்மூட்டைகளில் உடல் சாய்த்து அமர்ந்திருந்து அவன் பாடுவான்.

''தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக் கொருதாய் இருக்கின்றாள்
என்றும் என்னைக் காக்கின்றாள்''

உடலைச் சிலிர்த்து மயிர்க் கால்களூடாக நுழைந்து என்னைக் கிச்சு மூட்டுவதாக அவன் பாடல் இவனைப் புரட்டும். எக்காலத்திலும் அவன் ஞாபகத்தை நீக்க முடியாதது போன்ற உணர்வை அவனது பாடல் தொற்றவைக்கும்.

மிகச் சன்னமாய் கைகளை அசைத்து உடலைக் குலுக்கி 'புலிகளின் தாகம்...' பாடும் போது கை தட்டி இணையாதவர் இல்லை. தாயினும் மேலான காவலன் யாரடா' என்னும் போது அதை முடித்து வைத்து பாடாதவனுமில்லை.

மிகவும் உற்சாகமாக -இரவுக்காவல் விழிப்பின் அசதிசற்றுமின்றி அவன் பாடல் தான் இவர்களைத் துயிலெழுப்பும். மார்கழியின் விடிகாலைப் பொழுது. பனி சொட்டாய் இலைகளிலிருந்து வடியும். வெயில் புகாரை ஊடறுக்க முனையும். எப்போதுமே நிசப்தம் குடிகொண்ட அந்தச் சூன்யப் பிரதேசத்தில், எப்போதாவது எழும் பறவைச் சத்தத்தைத் தவிர, இடையிடையே எழும் வெடியோசையை விட, அவனது குரலுக்கு ஒரு வலிமையிருந்தது என்பது இவன் எண்ணம்.

காவலரணுக்கு மேலே தலை நீட்டினால் இராணுவத்தின் குறிபார்த்தலில் இருந்து மீள முடியாத - அந்த இடைவெளிக்குள் இவனது பாடல் இராணுவத்தினரையும் எட்டி இருக்கும். இரவு வேளைகளில் தம் பீதியைப் போக்க- அவர்கள் காதை அடைக்குமாறு சிங்கள'பைலா' பாடல்களைப் போட்டிருப்பார்கள். அது ஓயும் பொழுதில் வேண்டுமென்று இவன் பாடும் 'இயக்கப்' பாடல் கூட அவர்களை எட்டியிராமல் போகாது.

ஒரு தேவதையின் அழகு அவன் குரலுக்கு இருக்கும் என்பது இவன் எண்ணம்.

ஒரு காவலரண், தாக்குதலுக்குத் தயாராகும் போதுதான் அவனது அம்மா இறந்தார் தகவல் வந்ததும் சண்டையிலிருந்து நிறுத்தி, வீட்டிற்குச் செல்லுமாறு பொறுப்பாளர் பணித்தார். அவன் போகவில்லை. இரவுச் சண்டையை முடித்த பின்னர் போவதாக உறுதியாக நின்றான். இவனது வற்புறுத்தலைக் கூட அவன் ஏற்கவில்லை.

சண்டைக்குப் போகும்போது வாகனத்தில் இருந்தவாறு தனது 'T56-2' அழுந்தப் பற்றி, மௌனமாக இருந்தான். எவருடனும் எதுவும் பேசவில்லை. பிறகு நள்ளிரவில் காவலரண்கள் மீது 'தாக்குதல் நடந்தது.

அரைமணி நேரத்தில் எல்லாவற்றையும் முடித்துவிட்டு வரும்போது, ''அம்மா அம்மா எந்தன் ஆருயிரே'' என்று பாடினான். விம்மல் வெடிக்க அழுதான். பின்னர் வீட்டிற்குப் போனான்.

இவனுக்கு- ஒரு சகோதரனுக்குரிய தோழமையுடன் அவன் தனது வீட்டுக்

கதையைச் சொன்னான். தனது சின்ன வயதிலேயே அப்பா இறந்து போனதையும், அம்மா தானே உழுதும், விதைத்தும் வயலைச் செய்து தங்களை வளர்த்ததையும், அதற்காக அம்மா பட்ட கஸ்டங்களைப்பற்றியும், இன்னும்...

ஒரு லீவின் போது இவன், அவன் வீட்டிற்குப் போனான். வயல்கள் சூழ்ந்த அந்தப் பகுதியில், சிறியதொரு கல்வீடு. அம்மாவின் உழைப்பால் உருவானதாம். அதற்குள் இவன் சென்ற போது அவர் ஆஸ்த்மாவால் பீடிக்கப்பட்டிருந்தார். இங்கும் அங்குமாய்ப் புரண்டு மூச்சிழுக்க முடியாமல் பேரவஸ்தைப்பட்டார். அவனது அக்கா அவரருகே இருந்து விசுக்கிக் கொண்டிருந்தாள்.

இவன் அப்போது அவனை நினைத்தான். அவன் அம்மாவின் மீது வைத்திருக்கும் அன்பு அளவிடத்தக்கதல்ல என்று இவனுக்குத் தெரியும்.

''என்ரை வாழ்க்கையிலை ஆக உயர்ந்ததெண்டு நினைக்கிறது எவரெஸ்ற்றையில்லை; என்ரை அம்மாவையும் என்ரை நாட்டையுந்தான்'' என்று அவன் சொல்லிக் கொள்ளும் போது, அவனைப் போல இயல்பாய்ப் பேச ஏன் முடிவதில்லையென இவன் நினைப்பதுண்டு.

மஞ்சள் சூரியன் மேற்கில் படுத்த ஒரு பொழுதில் தாக்குதலொன்றிற்காய் அணி சேரும் வேளையில்தான் அவன் இவனைச் சந்தித்தான்.

மிக இயல்பாய்-

''தாய் மேலாணை...... தமிழ் மேலாணை..'' பாடிக் கொண்டு.. கண்களை வெட்டிப்புன்னகை சிந்திக் கொண்டு... காலாதிகாலத்தில் மறக்கக் கூடியதா அவன் நினைவுகள்? □

---

*கலை இலக்கியப் படைப்புகள் மக்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும். பழைமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையை தோற்றுவிக்க வேண்டும். மாறிவரும் சமூக புறநிலைகளுக்கு ஒத்திசைவாக சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.*

*இந்தக் காலகட்டத்தில், கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து நான் கூடிய அளவு பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். ஒரு தாயகத்தை கட்டி எழுப்பும்பணி புனிதமானது. இந்தப் புனித பணியில் பங்கு கொள்வது எல்லோரதும் தேசிய கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகி வரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும். இந்த சமூகமாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும் சிருஷ்டி கர்த்தாக்களும் எமது இயக்கத்திற்கு பக்கபலமாக நின்று பணியாற்ற வேண்டும்.*

*இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப, வரலாற்று ஓட்டத்திற்கு அமைய, கலை, இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான புரட்சிகரமான படைப்புகளை சிருஷ்டிக்க வேண்டும். இந்தப் படைப்புக்கள் எமது புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரம் ஊட்டுவதாக அமைய வேண்டும். சமூகப் புரட்சிக்கு வித்திடுவதாக அமைய வேண்டும்.*

**— தமிழீழத் தேசியத் தலைவர்**
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

நேர்காணல்

# செம்பியன் செல்வன்

நேர்முகம்

கருணாகரன்

1960 களிலிருந்தே எழுதிவரும் திரு. செம்பியன் செல்வன் (ஆ.ராஜகோபால்) ஈழத்தின் குறிப்பிடக்கூடிய படைப்பாளியாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டவர். யாழ் இலக்கிய வட்டத்தின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும இவர் ஆற்றிய பணி அதிகம். அமைதியின் இறகுகள், மூன்று முழுநிலவுகள், நாணலின் கீதை, சானகத்தின் கானம் ஆகிய இலக்கியப் படைப்புகளைத் தந்தவர்; சில நூல்களின் தொகுப்பாளர். தன்மனதுக்குப் பிடித்த கருத்துக்களை தயக்கமின்றி வெளிப்படுத்துபவர். விவேகி, அமிர்தகங்கை ஆகிய இலக்கிய சஞ்சிகைகளில் இணையாசிரியராகவும் ஆசிரியராகவும் பணி புரிந்தவர். இப்பொழுது கல்வித்திணைக்களத்தில சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக இருக்கிறார். நாடகம், சினிமா பற்றி புதிய, ஆழமான பார்வையைக் கொண்ட இவர் அன்று தொட்டு தமிழரின் போராட்டங்களில் மிகுந்த ஈடுபடும், உணர்வும் மிக்கவராக இருந்து வருகிறார்.



●● ஆரம்பத்தில் உங்களுக்கு எப்படி இலக்கியத்தில் ஈடுபாடு வந்தது? முதலில் நீங்கள் எழுதும்போது உங்கள் சிந்தனை, இலக்கியம் பற்றிய கருதுகோள் எல்லாம் எவ்வாறிருந்தன? உங்கள் வாழ்க்கைப் பின்னணி எவ்வாறு உதவியாக அமைந்தது?

□□ உங்களின் இந்தக் கேள்வி ஒரு தனிக் கட்டுரைக்குரியது. எனினும் சுருக்கமாகச் சொல்லிப் பார்க்கிறேன். எழுத்து- படைப்பியல்- என்ற சிந்தனா நோக்கு இளவயதிலேயே எழுந்து விட்டது என்று கூறுவது எவ்வளவு அபத்தமோ, அந்தளவிற்கு இவற்றிற்கான அத்திவாரங்கள் நாமறியாமலே

எம்இளமனதில் சூழலினால்
இடப்படுகின்றன என்பதனை மறுப்பதும்
அபத்தமே. இத்தகைய அத்திவார
அநுபவங்கள் எல்லார் வாழ்விலும்
நிகழுகின்றன. பிற்காலங்களில் இவற்றை
இனங்காணுபவன் கலைஞனாகிறான்.

இன்று எழுத்தாளர்களிடையே
'கலகக்காரன்' என்றோ, மேடையில்
அதிரடிப்பேச்சாளனென்றோ
(உண்மையாகவோ/கேலியாகவோ)
பேசப்படுகிறேன் என்றால்
என்பிறப்பும் வளர்ப்பும் படிப்பும் காரணம்
எனக் கருதுகிறேன்.

நான் ஒரு தாயைத்தின்னி; அதுவும்
பிறந்த வீட்டிற்குள்ளேயே
தாயை விழுங்கி விட்டவன். அதனால்
தந்தையும், ஆறுவயதான
என் அண்ணனையும், என்னையும்
அநாதையாகத் தவிக்கவிட்டுவிட்டுத்
தலை மறைவாகிவிட்டார்;
அதன்பின்
அவர் வயது வந்து காலமாகிய செய்தி
கேட்கும் வரை நாங்கள்
சந்திக்கவேயில்லை.
எங்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பு-
சுமை - ஆச்சிதலையில் (அம்மாவின் தாய்)
விழுந்தது.
உறவினர்கள் என்று எவரையும் நாம்
பெரியவர்களாகும் வரை அறிந்ததில்லை.
அப்பா (அம்மாவின் தகப்பன்)
அப்போது
வலிகாமம் மேற்கு 'வசு'க் கொம்பனியில்
ஒரு சாரதி; அவரும்
ஒரு கலகக்காரன்; திறந்த மனசுக்காரன்;
வேலையில் கெட்டி; நண்பர்கள்
சகவாசம் அதிகம்-அவர்
வலிகாமம் மேற்கு வசுக் கொம்பனித்
தொழிலாளர் சங்கத்தின்
தலைவர் ஆனதில்
ஆச்சரியமில்லை.
இதனால் உழைக்கும் சம்பளம் எல்லாம்
பொதுச் சொத்து; வீட்டில்
பொருளாதார நெருக்கடி எப்பவும்
உண்டு.
இதனால் எனக்கும் அண்ணனுக்கும்
புரிந்தும் புரியாத வயதிலேயே
''வீட்டில் கூடும் தொழிலாளர்களிடையே
எழும்... கூலி... குழப்பம்...
ஸ்டிரைக் .. லீவு...
வேலை நாட்கள்... ஓவர்டைம்...
போன்ற சொற்கள் அறிமுகமாயின.
பிற்காலத்தில் அச்சொற்கள்
தம் பூரணார்த்தத்துடன்
நெஞ்சத்தில் பதித்தன''

●● 'கலகக்காரன்' என்ற பதத்தை நீங்கள் பயன்படுத்துவதுபற்றி...?

□□ அதற்குத்தான் வந்து
கொண்டிருக்கிறேன். ஒருமுறை
வசுத்தொழிலாளர்கள் மேற்கொண்ட
'ஸ்டிரைக்' பஸ்
ஒன்றைக் கொளுத்துவதில் முடிந்தது.
வேலியால் பாய்ந்துவந்த
அப்பா அப்போது
கட்டிலில் படுத்திருந்த என்னருகே
சேலைக்குவியல்கள்... தலையணைகள்..
இடமில்லாமல்
கட்டிலில் ஏறியிருந்த அரிசிப்பானை -
சருவக்குடம்...
தட்டுமுட்டுச்சாமான்களிடையே
படுத்துக்கொண்டார்.
(நான் சொல்லும் கட்டிலை
பழையவர்கள் புரிந்து
கொள்வார்கள்)
பொலீசுக்காரன் அறையின்
வாசலில் நின்று
அறையை விழியால் துளாவிவிட்டு,
அகன்றான். அப்போது
அந்தப்பயத்திலும் நெஞ்சில்
ஒரு உறுதி பிறந்ததை
இன்றுணரமுடிந்தது. பின்னர் பஸ் வழக்கு
'நடேசனைக் கொண்டு பேசுவிக்க'
ஒருமுறைக்கு அன்றைய மதிப்பில்
10,000 ரூபா செலவிடப்பட்டதும்
அதற்காக எஞ்சிய இருப்புக்களை
அப்பா கரைத்ததும் எங்களை
மிகவும் கீழ் நிலைக்கு கொண்டு சென்று,
சொந்த வீட்டுக்காரரை வாடகை
வீட்டுக்காரராகவும் மாற்றின. நான்
வளர்ந்து பெரியவனாவதற்கிடையில்
சுமார் ஐம்பது வீடுகளாவது
மாறியிருப்போம்.
எல்லாம் என்னால் தான்.
சொந்த வீட்டுக்காரப் பிள்ளைகள்
விளையாட்டில் கூட
தங்களது மேலாதிக்கத்தை
நிலை நாட்ட முனைவர்;
அடாவடித்தனம் செய்வர்;
என்னால் பொறுக்க முடியாது;
'அடிதடிதான்; கட்டிப்புரளுவதுதான்'


அக்காலத்தில் இதெல்லாம்
சிறுபிள்ளைகள் சண்டையென்று
விட்டுவிடமாட்டார்கள்,
பெரியவர்கள் சண்டையில் வந்துமுடிந்து,
'நாளைக்கே வீட்டை விட்டு
எழும்பிப்போடோணும்'-
என்ற எச்சரிக்கையுடன் வார்த்தைகள்
ஓய்வு கொள்ளும்.
புது வீடுதேடும் படலம் ஆரம்பமாகும்.
எனக்கு நெஞ்சம் கொதிக்கும்.
நியாயத்துக்குப் போராடிய
எனக்குத் தண்டனையா?...
யார்மேல் கோவிப்பது என்பது
புரியாமல் தவிப்பேன்.
(இந்த தவிப்பு இன்று வரை
அடங்கியதில்லை)
இந்த வீடுமாறுதல்கள்
எத்தனை எத்தனை சூழ்நிலைகளை ..
மனிதர்களை -
பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை
உணரவைத்தன.

●● *இந்த அநுபவங்கள் எப்படி பிற்காலங்களில் எழுத்தாகின என்பது பற்றி...?*

□□ நீங்கள் இதுவரை பார்த்த பக்கம்
என் அப்பாவினது.
என் ஆச்சியோ தமிழறிவு
மிக மிக மிக்கவ.
சிற்றிலக்கியங்கள், பிரபந்த வகைகள்
எல்லாவற்றையும் மனப்பாடமாக
வைத்திருந்தவ. அறப்பளீசுர சதகம்,
பட்டினத்தார் பாடல்,
அல்லியரசாணிமாலை,
நல்ல தங்காள்கதை...
விக்கிரமாதித்தன் கதை,
மதனகாமராசன் கதை,
தென்னாலி இராமன் கதை
என எல்லாம் தெரிந்திருந்ததுடன்,
ஏராளமான 'ராசாராணி' கதைகள்...
பாதக் குறடு, .. சுக்குமாந்தடி...
சோழியப்பை... என வரும்
கதைகள் எல்லாம்
தெரிந்து வைத்திருந்தவ.
இரவு வேளையில் படுக்கையில்
எங்களை துயிலிலாழ்த்தும்.
நவநவமான கற்பனைகள் மட்டுமல்லாது...
கனவுகளில் நாமும்
கதாபாத்திரங்களுடன் நடமாடி...
துயில்கலைந்து சூரியோதயத்தில்
விழிக்கும் போது
புத்துணர்வு பிறக்கும்...
இன்றும் எனக்கு ஒரு கவலையுண்டு.
கதைசொல்லும் தாய்மாரோ...
பாட்டிமாரோ
குழந்தைகளுக்கு இல்லையே யென்று...

●● *இத்தகைய கதைகள் குழந்தைகளை யதார்த்தத்திலிருந்து பிரித்து விடவா?*

□□ 'அப்படி ஒரு கருத்து நிலவினாலும்...
இத்தகைய கதைகள் நவநவமான
கற்பனைகளையும்,
விரிசிந்தனைகளையும் வளர்க்க
இளவயதிலேயே
பயிற்சி கொடுப்பதாகவே கூறுவேன்.



●● *பிறதாக்கங்கள்...... அன்றைய நிலையில்...*

□□ ஆச்சியிடம் கதை
கேட்கப்பழகியவன், இக்கதைகளை
கல்லூரியில் ஆசிரியர்
வராத காலங்களில்
சக மாணவர்களுக்கு கூறத்தொடங்கினேன்.
இது நண்பர்களிடையே
நல்ல வரவேற்பைப்பெற்றது.
இந்தக் 'கதை கூறும்'
ஆர்வம் இயல்பாகவே 'கதை படிக்கும்'
ஆவலைத் தூண்டியது.
ஆவலுக்கு அவல் கிடைக்க
உதவியவர் அண்ணன்.
இவரும் ஒரு பயங்கர வாசகர்.
தமிழ், ஆங்கிலம்- இரண்டிலும்

நிறைய வாசித்தவர்-
அவர் நெஞ்சடைப்பு நோயால்
ஆஸ்பத்திரியில்
காலமான போது கூட,
மருந்துப் பொட்டலங்களோடு
காணப்பட்ட நூல்—
ஆபிரிக்க நாவலான *ROOTS* என்பது
இப்போது நினைவில் வருகிறது.
அவரால் அப்போது
வெளிவந்து கொண்டிருந்த
அனைத்துச் சிறுவர் சஞ்சிகைகளையும்
படிக்க வாய்ப்பேற்பட்டது.
ஜிங்கிலி, ஜில்ஜில், அணில், பாப்பாமலர்,
சித்திரபாரதி, சித்திரக்குள்ளன்,
டமாரம், சாக்லட், துப்பாக்கி,
லட்டு, அம்புலிமாமா, கண்ணன்,
பூஞ்சோலை, கல்கண்டு,
கரும்பு, போன்றன முக்கியமானவை.
இவை மட்டுமல்லாது இன்றைய
வானதி பதிப்பக உரிமையாளர்
திருநாவுக்கரசு, ராஜன்
என்போரால் ஒரணாவில்
வெளியிடப்பட்ட ஏராளமான
சின்னஞ்சிறுகதை நூல்களும்
குறிப்பிடப்பட வேண்டியவை.
குழந்தைகளுக்கான சிறு நூல்களும்
சஞ்சிகைகளும்
ஈழக்குழந்தைகளுக்காக
நிறைய வெளியாகவேண்டும்
என விரும்புகின்றேன்.
நாளடைவில் நல்லதொருவாசகனாக
மாறினேன்.
(இன்றுவரை என்னை
ஒரு வாசகனாகவே கருதிவருகிறேன்)
நல்லதொரு வாசகன் தான்
நல்லதொரு படைப்பாளியாகிறான்
என்பது என் கருத்து.

●● *உங்கள் கல்லூரி வாழ்க்கையில் காணப்பட்ட படைப்புக்கான சூழல் பற்றி......*

□□ நான் யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரி மாணவன்.
அங்கு ஏழாம் வகுப்பு படிக்கையில்
இராமாயண, பாரதக் கதைகளை
சிறந்த கதைசொல்லி'
திரு. கே. எஸ். சுப்பிரமணியம்
அவர்கள் சமயப் பாடவேளையில்
கூறும் பொழுது திறந்த வாய்
மூடாமல் கேட்போம்.
பின்னர் எட்டாம் வகுப்பில்
ஆங்கில பாடம் எடுத்தபொழுதும்
எங்களுக்குத் தான் எழுதும்
கதைகளை வாசித்துக்காட்டும்
திரு. ஏ. எஸ். கனகரத்தினம் எங்கள்
எழுத்தார்வத்தைத் தூண்டிவிட்டார்.
உயர் வகுப்புக்களில்
தமிழாசிரியராக வந்த
ஈழத்துறைவன்'
என்கிற திரு. ஏரம்பமூர்த்தி
அவர்கள், பண்டிதரும்
பட்டதாரியுமான திரு. எஸ். செல்லத்துரை
அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.
'கண்டதும் கேட்டதும்'
நாவலாசிரியரான
திரு. தேவன்-யாழ்ப்பாணம்-
அவர்களும் கல்லூரியில் ஆசிரியராக
இருந்தார்.
அவரது 'கூடப்பிறந்த குற்றம்'-
நாடகத்தை நாம் நடத்தினோம்.
எனது சக மாணவர்களாக
விளங்கியவர்கள்- இக்காலத்தில்
சிறந்த எழுத்தாளர்களாக பேசப்படும்
செங்கை ஆழியான், அங்கையன்,
து. வைத்திலிங்கம் ஆகியோர்.

**தற்போது தமிழர் தம் விடுதலைப் போராட்டம் இடம் பெறத் தொடங்கியுள்ளது. இன்றைய சூழலில் படைப்பாளி என்பவன் பேனா தூக்கிய போராளியே. காலூன்றநிலமில்லாமல், சர்வதேச தத்துவார்த்தம் பேசுபவனே மோசமான கற்பனாவாதி. படைப்பாளி என்பவன் எப்போதுமே சமூக அசைப்புகளுடனோ, அரசியல் பொருளாதார அசைவியக்கங்களுடனோ போராடுபவனாகவே இருக்கிறான்.**

●● *உங்கள் படைப்புகளுக்கும் கல்விக்குமுள்ள தொடர்பினை என்னவாக இனம் காணுகிறீர்கள்?*

□□ இதுபற்றி இக்காலத்தவர்களுக்கு
நிச்சயம் தெரியவேண்டும்.
நான், செங்கை ஆழியான் ஆகியோர்தான்
1960-இல் முதன்முதலாக தமிழில்
படித்துப் பல்கலைக்கழகம்
போனவர்கள்.
படித்த காலங்களில்-
தமிழில் பட்டப்படிப்பா?
அந்தப்படிப்புக்கு ஒரு மதிப்பா?
தமிழில் என்ன இருக்கிறது?
அதுவும் தமிழில் 'ஆட்ஸ்'
படித்து என்ன செய்யப்போகிறார்கள்?
(இன்று செ. ஆ- ஒரு மேலதிக
அரசாங்க அதிபர்)
என்று எங்களைப் படிப்பித்த
ஆசிரியர், விரிவுரையாளர்களே
எங்களை வேதனைப்படுத்தினார்கள்.
இன்றும் தமிழில் எதனையும்
புதிதாகச்செய்ய முயன்றால்
'பல்லி சொல்லும்'
பலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.
தூய தமிழ் பயன்பாடும் இதிலடங்கும்.
உயிரியலிலும் கருத்தியலிலும்
போராட்டமே முதலிடம் பெறும்.
வெற்றிபெறுவது வாழும்.
இது நியதி.
மார்க்ஸிய வாதமும் கூட. ஆனால்
விவகாரம் என்று வரும்போது
இந்த நியதியை
மறப்பவர்களாகி விடுகின்றனர்.
போகட்டும்.
தமிழில் படித்து
தமிழில் சிந்திக்கத்தொடங்கினோம்.
தற்செயலாக கொழும்புப்பல்கலைக்கழக
தமிழ்ச்சங்க வெளியீடான
'இளந்தென்றலை'ப் புரட்ட நேர்ந்தது.
அதில் அ. முத்துலிங்கம் எழுதிய
'கோடை மழை'
படித்த பிரமிப்பு இன்றுவரை
நீங்கவில்லை.
அக்கால 'தினகரன் தினசரி'யில்
'சொக்கன்' எழுதிய
'செல்லும் வழி இருட்டு'
நாவல் புதிய சுவையை ஊட்டியது.
எழுதலாம்- எழுதவேண்டும் என்ற
உத்வேகத்தைப்பெற்றோம்.

●● நீங்கள் எழுத்துலகில் ஈடுபட்டிருந்த போதிருந்த இலக்கியச் சூழ்நிலை என்ன?

□□ பேராதனைப் பல்கலைக்கழகம்
சென்ற போது அங்கு பாரிய
இலக்கிய முயற்சிகள்
நடந்து கொண்டிருந்ததாக கூறமுடியாது.
சில விரிவுரையாளரின்
கலாநிதிப்பட்டத்துக்கான
ஆய்வேடுகளும், பாடநூல் போன்ற சில
வெளியீடுகளுமே காணப்பட்டன.
தமிழ்ச்சங்க - இளங்கதிர்,
இந்துசமயசங்க - இந்துதர்மம்,
மூன்று மொழிகளிலும் வெளிவந்து
சுமார் எட்டுப்பக்கங்கள் மட்டும்
ஒதுக்கப்பட்ட
*STUDENTS COUNCIL MAGAZINE*ம்
தமிழ் விரிவுரையாளர்களும்,
தமிழ்ச் சிறப்பு மாணவர்களும்
ஏதேதோ எழுதிவந்தனர்.



1960ல் தமிழ்மொழி மூலம்
பட்டதாரி மாணவர்கள் வந்ததும்
இந்த சூழ்நிலை மாறி
பிறதுறை மாணவர்களின்
படைப்புகளும் இடம் பெறலாயின.

இதேபோல 1961ல் தினகரன்
ஆசிரியபீடத்திலிருந்து விலகி,
திரு. க. கைலாசபதி அவர்கள்
தமிழ்த்துறை விரிவுரையாளராக
வந்ததும் இந்த நிலமைகளில்
மாறுதல்கள் ஏற்படலாயின.
நான் அவர் வந்தபொழுது புவியியல்
பாடத்தை சிறப்புப் பாடமாகக்
கொண்டதால்

அவரிடம் கல்விபயில நேரவில்லை.
என் அதிர்ஷ்டம். அவர் நானிருந்த
விஜயவர்த்தனா
விடுதியிலேயே தங்க நேர்ந்தது.
அடிக்கடி இலக்கியம் பேச
விவாதிக்க நேர்ந்தது.
அவர் பொதுவுடமைவாதி.
எதிலும் மார்க்ஸியப் பார்வைதான்,
பரந்த நூல் படிப்பாளி.
அவர் அறை முழுதும் நூல்கள் மயம்.
இலங்கை எழுத்தாளர்களிடையே
முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை
வளர்த்தெடுத்து, நெறிப்படுத்தி
வளர்த்தவருள்
முதன்மையானவர்.
இந்தப்பணியை இவர்
பல்கலைக்கழகம் வந்ததும்
தொடர்ந்து செயற்படுத்தினார்.
இவர் மொழித் தூய்மையோ,
இலக்கணச் சுத்தமோ
எதுவும் தேவையில்லை.
சமூக நிலை இயக்கமும் நகர்வுகளுமே
முக்கியம் என்பதனை வற்புறுத்தினார்.
கலாநிதி ஆ. சதாசிவம் போன்றோர்
இதற்கு மாறாகச்செயற்பட்டனர்.
உருவமா, உள்ளடக்கமா?,
மரபு, மண்வாசனை,
பிரதேச இலக்கியம், இழிசினர் வழக்கு
போன்ற வாதப் பிரதிவாதங்களும்
எழுத்தாளர் பிரிவினைகளும்
எழுந்தன.
இவர்கள் இருவரும் தமிழ்த்துறை
விரிவுரையாளர்களாக இருந்தமையால்
மாணவர்களிடையேயும்
தமது கருத்தை
கருத்தியல் ரீதியாகவும்
கல்வியியல் ரீதியாகவும்
பரப்பியமையால் மாணவர்களிடையேயும்
பிரிவினைகள் தோன்றின.
நான் முற்போக்குக்கு மாணவனாக
கருதப்பட்டேன்.
இதனைக் கேலி செய்து
எஸ். பொன்னுத்துரை
'நற்போக்கு இலக்கியம்'
என ஒன்றை உருவாக்கினார்.
இதனால் ஒவ்வொரு குழுவைச் சார்ந்த
எழுத்தாளர்களின் படைப்புக்களையும்
எதிர் குழுவினர்
எழுத்தெண்ணிப்படித்து
காரசாரமாக விவாதித்தனர்.
இது எங்களது ஆரம்ப வளர்ச்சி
நிலையில் மிகுந்த கஷ்டத்தைக்
கொடுத்தாலும் ஒவ்வொருவரின்
இலக்கியமும் உரைகல்லில்
இடப்பட்டதுடன், மறைமுகமாக
விமர்சன படிப்பியலுமாயிற்று.
விமர்சனம்- இலக்கியக் கோட்பாடு-
இலக்கியச்செல்நெறி என எங்களது
அறிவும் விரிந்தது.
இயல்பான பழக்கமுமாயிற்று.
படைக்காவிட்டாலும் உயர்ந்த இலக்கியம்
எதுவெனத் தெரிந்து கொள்ளும்
இயல்பு மாகியது.

●● *தாய்மொழிக் கல்விக்கும் உங்கள் படைப்பிலக்கியத்திற்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா?*

□□ நிச்சயமாக உள்ளது.
தாய்மொழிக் கல்வியானது,
தமிழ் மொழியின் பரந்த வீச்சினையும்,
ஆழ்ந்த அர்த்தச்செறிவினையும்
உணர்ந்து கொள்ளச் செய்தது.
சுயானுபவங்கள் மொழியின்
தனித்துவங்களுடன்
உறவுக்கொள்கையில் தமிழில் பிறந்த
உண்மையான இலக்கியங்களாகின.
இவற்றிடையே தர வித்தியாசங்கள்
இருந்த பொழுதிலும் அவை அவை
தத்தம்மளவில் சுயமானவையே.
தாய்மொழிக்கல்விக்கு
முன்னர் பல்கலைக்கழக மட்டங்களில்
எழுத்தாளர்களாக பரிணமித்தவர்கள்
தொகை மிகக்குறைவே.

●● *தாய்மொழிக்கல்வியின் வரவுக்கும் தமிழீழப் போராட்டத்திற்கும் ஏதாவது தொடர்பு இருப்பதாகக் கருதுகிறீர்களா?*

□□ தமிழ் மொழியின் கல்விநிலை
முக்கியத்துவம்,
தமிழினம்... தமிழீழம்...
தனியாட்சி என்றுணர்வுகளை
இயல்பாகவே தோற்றுவித்தது.
1970-களில் பேராதனைப்
பல்கலைக்கழகத்தில் தோன்றிய
'தமிழ் இளைஞன்'
பத்திரிகையும் அதன் உள்ளடக்கங்களும்
இதனையே காட்டுகின்றன
என நினைக்கிறேன்.

●● *உங்கள் சிறுகதைகளின் பிரதான அம்சங்களாக எவற்றைக் கருதுகிறீர்கள்?*

□□ ஒவ்வொரு காலகட்டங்களிலும்
வெவ்வேறான அம்சங்கள்
இடம் பெற்றன.
ஆரம்ப காலங்களில் தமிழ், தமிழினம்,
தமிழர் தம் பண்பாடு
என்பன முக்கிய இடம் பெற்றன.
பின்னர் கதை கூறும் நுட்ப முறைகள்
இடம்பெற்றன.
சமத்துவம்... ஒருமைப்பாடு..
என மாற்றம் கண்டு...
தற்போது தமிழர் தம்
விடுதலைப் போராட்டங்கள்
இடம்பெறத் தொடங்கியுள்ளன.
இம்மாற்றங்களெல்லாம்
வரலாற்று நிகழ்வுகளே.
இன்றைய சூழலில் படைப்பாளி என்பவன்
பேனா தூக்கிய போராளியே.
காலூன்ற நிலமில்லாமல்,
சர்வதேச தத்துவார்த்தம் பேசுபவனே
மோசமான கற்பனாவாதி.
படைப்பாளி என்பவன் எப்போதுமே
சமூக அமைப்புக்களுடனோ,
அரசியல் பொருளாதார
அசைவியக்கங்களுடனோ
போராடுபவனாகவே இருக்கிறான்.

●● எமது இன்றைய சிறுகதை இலக்கியம் பற்றிக் கூறுங்கள்..... சமகால தமிழீழச் சிறுகதை......

□□ சிறுகதை இதுதான் என்று
வரையறை செய்ய முடிந்ததில்லை.
படைப்பாளியின் மனநிலைக்கும்
சூழலுக்குமிடையே ஏற்படும்
இடைவினையின் மெல்லிய சலனம்
சிறுகதை எனலாம்.
கணநேர மின்னலாகக்கூட
அது இருக்கலாம்.
அதில் உருவம் இது உள்ளடக்கம்
இதுவாகத்தானிருக்கவேண்டும்
என்கின்ற விமர்சன நிர்ப்பந்தம் கூட
சூழ்நிலையின் கட்டளையேயன்றி
கலையுலகின் விதிமுறையல்ல.
இந்தப் பின்னணியில்தான்
இன்றைய இளையதலைமுறையும்
இலக்கியப் போக்கு என்பேன்.

●● இன்றைய சிறுகதை எழுத்தாளர்கள் தங்கள் படைப்பின் வளர்ச்சி குறித்து கவனிக்க வேண்டியவை எவை?

□□ இன்றைய சிறுகதை எழுத்தாளர்கள்
புதிய தலைமுறையினர்.
அவர்கள் எதிர்பார்க்கும்
வளர்ச்சிக்கும் பழைய தலைமுறையினர்
நோக்கிய வளர்ச்சிக்கும்
மிகுந்த வேறுபாடுண்டு.
அவர்கள்
புதிய சிந்தனையுடன்
புதுயுகம் நோக்கிய பூபாளம்
இசைப்பவர்கள்.
அவர்கள் வளர்ச்சி,
அவர்கள் அநுபவங்கள்
சார்ந்தவையே அன்றி
பிறர் சார்ந்தவையல்ல.

●● சிறுசஞ்சிகைகளில் நீங்கள் ஆசிரியராகவும், இணையாசிரியராகவும் செயற்பட்டுள்ளீர்கள். சிறுசஞ்சிகை தொடர்பாக உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்.

□□ சிறுசஞ்சிகைகள்
வெளியிடவிரும்புகிறவர்கள்-
தெளிவாக தங்கள் கோட்பாட்டை
வரையறைசெய்து கொள்ளவேண்டும்.
யாருக்காக, எதைக்கொண்டு
போகப்போகிறோம்,
எப்படிக் கொண்டு போகப்போகிறோம்
என்ற திட்டமிடலில் தெளிவு
இருக்க வேண்டும்.
அந்தச் சஞ்சிகைக்கான - விடயங்களோ,
விடயங்களை அளிக்கக்கூடிய
ஆற்றலோ,
ஆளணிகளோ இருக்கிறதா
என்று பார்க்க வேண்டும்.
சஞ்சிகைகளிலே இடம்பெறும்
விடயங்களிடையே சமநிலைத்தன்மை
(EQUILIBRIUM) நிலவுகிறதா
என்று கவனம் செலுத்தவேண்டும்.
இதன் பிறகு தான்
விநியோகம்- விலைவாசி எல்லாம்.
இதன் பின்னணியில் நீங்களே
சஞ்சிகைகள் பற்றி அபிப்பிராயம்
கொள்ளலாம்.

□□



"ஓடுங்கள். எவ்வளவு விரைவாக ஓடமுடியுமோ அவ்வளவு விரைவாக ஓடுங்கள். உங்கள் பாதங்கள் பிடரியில் தாளம்போடுமாறு ஓடுங்கள். திரும்பிப்பார்க்காதீர்கள். உங்கள் தலையைக் காணமாட்டீர்கள்". தங்களுக்குள் எச்சரிக்கை ஆணை பிறக்க ஓடுகிறார்கள்.

எதற்காக ஓடுகிறார்கள்? காற்றுக்காக; ஆமாம் காற்றுக்காதத்தான். உள்ளே போய் வெளியே வந்து கொண்டிருக்குமே கண்களுக்குப்புலப்படாத வஸ்து; அதுதான் மூச்சு: அதனை நிறுத்தப்பயந்து எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். பாதங்களைப்பற்றிய எந்தக் கவலையுமின்றி, திசைகளைப்பற்றிய எந்தத் தீர்மானமுமின்றி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். குஞ்சுகளும் ஓடுகிறார்கள் குமரிகளும் ஓடுகிறார்கள், கிழவிகளும் கூட வலிமைமிகக் கொண்டு ஓடுகிறார்கள். கையில் எடுக்க முடிந்தவற்றுடன் ஓடிக்கொண்டிருக்கிறார்கள், திரைகடலோடித் தேடிய பொருளெல்லாம் வெறும் மனநுரையாகி விட்டன' வேலிகள் நொருங்கும் சப்தம். வீண்சச்சரவு செய்தவனும் வேறுதெருக்காரனும்; சாதியில் பிரிந்தவனும் வேறுபாடின்றி ஓடுகிறார்கள். கண்களுக்குப் புலப்படாத வஸ்துவைப்பொத்திக் கொள்வதற்காக இந்த ஓட்டத்தில் ஓடுகிறார்கள்,

ஓடிஓடி ஓட்டத்தின் முடிவிற்கே வந்தாயிற்று. இனி எங்கே ஓடுவது? எல்லோரும் விக்கித்து நிற்கிறார்கள். எங்கே ஓடுவது? எல்லோருடைய மெல்லிதயங்களிலும் கேள்விகள் சுழல்கின்றன. இந்தக் கணத்தில் ஒருமித்த கேள்வி ஒன்றாக வந்தது ஆச்சரியம் தான். நின்றவர்கள் நினைவொன்றால் உந்தப்பட்டார்கள். திக்கற்றவருக்குத் தெய்வம் துணை. ஆண்டவன் அன்பு சொரூபமாகக் காட்சி தருகிறார். ஏதோ வெறி

# நரகத்தை வெல்வதற்காக..

☐ சுதுமலை. தி. அகிலன் ☐

பிடித்தவர்கள்போல் எல்லோரும் அந்தச் சன்னிதானத்திற்குள் புகுகிறார்கள். முழந்தாள்கள் மடிகின்றன. விழிகள் மூடி வாய்கள் பாவமன்னிப்புக்கோரி, உயிருக்கு மன்றாடுகின்றன.

ஒரு சொறிநாய் அவலக்குரல் எழுப்புகிறது. மன்றாட்டங்களை மீறி அவலக்குரல் கபாலத்துள் நிறைகிறது. ''யானைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே'' என்ற நினைவுடன், அவர்களின் வரவுபற்றிய எண்ணம் வியாபிக்கிறது. நாய்களின் குரல்கள் ஓங்காரமாய் ... பிறகு அவை மெலிந்து .. அடங்கி அவர்கள் நெருங்கிய வாடை. புதிய சத்தங்களின் அந்நியப்புரிவு ..

இப்பொழுது இவர்களின் அதிர்னல் மேற்பட்டையின் சுரப்பு வேகம் கூடுகிறது. அவர்களின் நெருக்கம் விபரீதமாக உணரப்படுகிறது. மின் அலைகள் நெருங்குவதைப் போன்ற வெக்கை உணர்வு. வரிசை வரிசையாய், அணி அணியாய் என்ன தோற்றம் அவர்களுக்கு? மஞ்சலும் பச்சையும் கலந்த ஒருவகை அங்கியை அணிந்துள்ளார்கள். முன்னேயும் பின்னேயும் பயமுறுத்தும் எதைஎதையே தொங்கவிட்டுள்ளார்கள். இரத்தத்தை ருசிக்கும் வேட்டைப் பற்களும் கண்களிலே காமத்தின் படிமங்களும் மினுக்கமுறுகின்றன.

ஓ! பரிசுத்த வெண்மையான லீலி மலரே! சரித்திரத்தின் முன் மாதிரிகையே! மெய்யான அன்பின் கண்ணாடியே! ஓ! மகிமையிலங்கும் புனித கருணைப்பிதாவே! நீர் உமது திருக்கரங்களிலே...

எல்லோரும் வாய்க்குள்ளே முணுமுணுக்கிறார்கள். எல்லோரின் நரம்புகளும் நடுக்கமுறுகின்றன. கண்கள் விரிகின்றன. அவை அச்சத்தை வெளித்தள்ளுகின்றன. யாரோ ஒருவர் வெள்ளை வேட்டியை உயர்த்திப் பிடிக்கிறார். தாங்கள் சமாதானப் பிரியர்கள் என்றதனை அவர்கள் மனதில் அரங்கேற்றத் துடிக்கறது வெள்ளை வேட்டி.

வந்தவர்கள் இவர்களைச்சுற்றி இறுகினார்கள். விபரீதப்பொருட்களின் வளையத்துள் இவர்கள் கண்ணுக்குப் புலப்படாத வஸ்துபற்றியும் விபரீதப் பொருள் பற்றியும் அடுத்த கணம் பற்றியும் நினைவுகளில் திடுக்குற்றுத் தடுமாறினார்கள். அந்தக் குழந்தையின் கண்களைப் பாருங்கள். அவை வெளியே வந்து தொங்கிக் கொண்டிருக்கின்றன. தன்தாயின் சேலை மடிப்பிற்குள் அது மறைய முனைகிறது பெண்கள் சேலைத்தலைப்புக்களை சரிசெய்து கொள்கிறார்கள் ஆண்களின் உதடுகள் உலர்ந்துபோகின்றன. யாரோ ஒருவர் கூறுகிறார்; மிக அருகிலிருந்து தொலைவான குரலில்;

''அவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்கள். எங்களைக் காப்பாற்றவும் ஆசீர்வதிக்கவும் வந்துள்ளார்கள்''

அருகிலிருந்து ஆவேசமான மறுப்புக் குரல் மிக அடங்கித் தொனிக்கிறது;

''அவர்கள் காப்பாற்றுவார்கள் என்றால் எதற்காகவாம் கால்கள் பிடரியில் பட்டன? தூசி கிளம்ப ஓடிவந்தீர்களே! ஏன்?

இப்போது சுடுகாட்டின் அமைதி. அவர்களின் தலைமைக்குரியவன் தன் சகபாடிகள் இருவருக்கும் கட்டளையிடுகிறான். அவர்கள் இயந்திரமாக இவர்களின் கூட்டத்துள் நுழைகிறார்கள். பால் ரீதியாகவும் பருவரீதியாகவும் பிரித்தல் நடைபெறுகின்றது, இவர்களுக்கு முன்னைய அனுபவம் மீண்டும் பாடமாக்கப்படுகிறது. பெண்களின் மனதிலிருந்து ஒப்பாரிகள் சுரக்கின்றன. இளைஞர்களும் யுவதிகளும் அதிரீனலின் சுரப்பு வேகத்தை குறைப்பதற்கு மிகப்பிரயத்தனம் செய்கிறார்கள்.



வேட்டைப்பற்கள் மினுமினுக்கின்றன. கறுப்பு நிறத்தையுடைய நெட்டையான ஒருவன் நிற்கிறானே! அதுதான் அவர்களது தலைவன். தன் கையுக்குள் தூங்கிக்கொண்டிருந்த கருமை நிறமுடைய சமிக்ஞைக்குரலெழுப்பும் பெட்டியை முடுக்கி குசுகுசுக்கிறான். எங்கோ ஓர் வாகனத்தின் உறுமல் கேட்கிறது. திசையை இவர்களால் அனுமானிக்கமுடியவில்லை. இவர்களின் துடிப்பு, துடிப்பின் அண்ணளவான எல்லைகளைத் தாண்டி வேகமிடுகிறது. வாகனத்தின் ஆங்கார ஒலி நெருங்கிறது; பீதியும் அந்தரிப்பும் இவர்களில் அதிகரிக்கிறது. முன்னால் இவர்களை ஒத்த சாயல்களையுடைய இரண்டு உருவங்கள் இறங்குகின்றன. வாகனத்தின் பக்க வாய் திறந்திருக்க இறங்கியவர்களைத் தொடர்ந்து அது முண்டமா? அதற்குத் தலையைக் காணவில்லையே! உடல்முழுவதும் கரிய அங்கியால் போர்த்தியுள்ளதே! உற்றுப்பார்த்தவர்கள் நடுக்கத்துடன் ஏதோவெல்லாம் ஊகித்தபடி கூறுகிறார்கள்; அதற்கு இரண்டு கண்கள் இருப்பதாக

சேலைமடிப்பிற்குள் மறைந்திருந்த குழந்தையொன்று எட்டிப்பார்த்துவிட்டு 'பேய்' என அலறுகிறது. இவர்களுக்குப் பேயின் முந்தைய ஞாபகங்கள் நடுக்கத்தை உண்டுபண்ணுகின்றன. இளைஞர்களும் யுவதிகளும் வரிசைப்படுத்தப்பட்டு அந்த உருவத்துக்கு முன் அணிசெய்யப்படுகிறார்கள். அது இரட்சகனா? அதனிடம் செல்வதற்கு? ஆனாலும் அணி அதன்முன்னால் மண்டியிட்டபடி கடந்து செல்ல வேண்டியிருந்தது. கரிய நெட்டையனின் கட்டளை ஆணை அப்படி விதிசெய்தது. பெண்களின் பகுதியில் இருந்து விசும்பலின் சுருதிகூடுகிறது.

கண்களுக்குப் புலப்படாத வலையை அந்தக் கரிய உருவம் வைத்திருந்தது. வரிசை நகரும்போது கறுப்பு அங்கியில் தலைமண்டை அசைவில் அந்தவலை பலரை சிக்கவைத்தது. அடிமனதின் உலுப்பலுடன் சிலரே இவர்களிடமிருந்து திரும்புகிறார்கள்.

வேறோர் வாகனம் வருகிறது. அது நரகத்திலிருந்து வருவதாக ஒரு பிரமை இவர்களில். வலையில் சிக்கியவர்கள் அந்த வண்டியில் அடைபடுகிறார்கள். மந்தைகளை அடைக்கும் ஞாபகம் வருகிறது. வானம்வரை கிளம்பிய புழுதி எங்கும் படிகிறது. துயரத்துடன் கருணை பொழியும் மன்றாட்டத்துக்குரிய சுவர்க்கத் தேவன் மௌனமாயிருக்கிறான். நம்பிக்கையின்றிய கோபாவேச வார்த்தைகள் அந்த வானத்துக்குரியவனை நோக்கி வீசப்படுகின்றன. சுடுகாட்டு ஓலம் எங்கும் மேலெழுகிறது விசும்பலும் துயரமும் நீண்டுசெல்கிறது.

இப்போது வேறொரு கும்பல் இவர்களின் மரநிழலுள் நுழைகிறது. குழந்தைகள் வீரிடுகின்றன. மறுபடியும் நடுங்குகின்றன கால்கள். கண்களில் இருள்கூடுகிறது. பிரமை, நரகம் பற்றியும், சூன்யம் பற்றியும் விரிகிறது. அவர்களின் பற்களில் வாளைப்போல கூரின் பளபளப்பு. நகங்களில் இரத்தச் சுவடுகள் - உடலெங்கும் பிணவாடை. மாஜவஸ்திரம் அணிந்த ராஜகுமாரர்களாக வளையவளைய வருகிறார்கள். கூர்ப்பற்கள் பளபளக்க புன்னகைக்கிறார்கள். நகங்கள் வளர்ந்த கைகளை மெல்ல அசைக்கிறார்கள். நரியின் முகத்தை ஒத்ததாக இருக்கிறது அந்தமுகங்கள். இவர்களைச் சுற்றி தீ மூட்டப்பட்டது போல இவர்கள் உணர்கிறார்கள்.

வந்ததுகளில் ஒன்று இவர்களை அழைத்து ஏதோ புலம்புகிறது.

''கனிகளைப் புசிப்பவர்களே! நாங்களே உங்களின் கனித்தோட்டத்தின் காவலர்கள். காவலனுக்கும் கனியில் பங்குண்டல்லவா? உங்கள் உடலிலும் எங்கள் உடலிலும் ஒரே ஜலமே உண்டு. உங்களுக்குரிய

கனியை எங்களைத்தவிர எவரையும் தீண்டவிடோம். உங்கள் கனியை அவர்கடம் இருந்து பாதுகாப்பாக நாமே பெற்றுத்தருவோம் அன்புடனும் பணிவுடனும் கேட்டுப்பெறுவது ஒன்றும் கீழானதில்லையே ......!''

இவர்கள் அந்த வெறிபிடித்தவனின் கூச்சலைக்கேட்கும் நிலையில் இல்லை. இரத்தம் சூடேற இவர்கள் பதறினர். அந்த மறைவில் பெண்ணொருத்தி தன் குழந்தைக்கு மார்புக்குருதியை தானமிடுகிறாள். அதுகளில் ஒன்று அவளின் மார்பகத்தை மேய்கிறது. அவள் மறுதிசை திரும்ப அது கண்ணடித்துவிட்டு நெளிந்து வளைகிறது.

நேரம் விரைகிறது. இருள் விரைவு விரைவாகக் கொட்டப்படுகிறது. நட்சத்திரங்களை யாரோ பொறுக்கிச் சென்றுவிட்டார்கள். இடையிடையே விசும்பல் ஒலி சூன்யத்தைக் கிழிக்கிறது. இரவுப்பட்சிகளும் நாய்களும் அலறுகின்றன.

''நத்துக் கத்தினால் ஏதாவது தீமை நடக்கும்'' யாரோ ஒரு வயோதிப மாதுவின் குரல் துக்கத்துடன் மெலிதாக ஒலிக்கிறது.

''அவர்கள் எங்களை என்ன கும்பிடு பூச்சிகளாகவா நினைத்துக்கொண்டார்கள். எங்களைப்போட்டு இந்தப் பாடுபடுத்துகிறார்களே!'' என்றான் ஆக்ரோசமாக ஒரு இளைஞன்.

''அப்படியிருந்தாலும் நிம்மதியாக வாழலாம்'' ஒரு முதியவரின் வாக்கு நடுக்கத்துடன் வருகிறது.

''உங்களால்தானே எங்களுக்கு இந்தக் கதி. நீங்கள் ஒரு ஒழுங்கில் ஒரு வகை தேடியிருந்தால் உங்களுக்கும் துன்பம் இல்லை. எங்களுக்கும் துன்பமில்லை. இவ்வளவு துன்பப்பட்டபின்னுமா கும்பிடுபூச்சியாக இருக்க ஆவல்? உங்கள் உடலிலே எல்லா நரம்புகளும் உண்டா? வேட்டிகிழிந்த பின் கோமணத்தையும் தூக்கிப் பிடித்தீர்கள். சமாதானத்துக்குச் சீலை பிடித்தபோதெல்லாம் எங்கள் வீதிகளில் இரத்தம் சிந்தி வழிந்தது. கோமணச் சீலையிலும் இரத்தம் தெறிக்கதெறிக்க வெள்ளைத்துணிபோர்த்து திரிந்தீர்கள். வினைகள் வளர்ந்து விட்டன. இனி அரிவாளை விட ஏது பதிலிடும்''

இளம்பெண்ணின் வார்த்தைகள் சாட்டைகளை வீசியெறிந்தன முதியவரில். முதியவர் உடைந்து நொருங்கிச் சிதறிப் போய்க் கொண்டிருந்தார். அவரது விழிகளில் இறந்த காலத்தின் எலும்புகள் அழுகி வழிகின்றன. இருளும் இரவும் நீண்டிருந்தது.

மூலைக்குள் முடங்கிக்கிடந்த ஒருவயோதிபன் மெதுவாகக் காலைநீட்டி நாரியை நிமிர்த்த முனைகிறான். இன்னொரு கிழவன் எழுந்திருந்து சுருட்டைப்பற்ற வைக்க எத்தனிக்கின்றான். அவனிடம் கம்பளி ஆடையில்லை; ஒட்டியுலர்ந்த தோற்கவசம் தான் உள்ளது. அதனைச் சூடேற்றுவதற்காக தீக்குச்சியை உரசுகிறான். ''ஏய் கிழவா! உனக்கு மூளையில்லையா அவர்களுக்குத் தெரிந்தால் பொறிகள் அல்லவா கக்கும்'' என அவனுக்கெதிராக குரல்கள் எழுகின்றன.

மாயத்திரையாக நீண்டிருந்த இரவு அழிந்தது. வெறுமையும் சூன்யமும் நிறைந்த ஒரு வரண்ட பொழுதாக அது இருந்தது. இவர்களின் கண்மடல்கள் வீங்கியிருந்தன. சில குழந்தைகள் தாய்மாரின் முலையை சப்பிப்பார்த்துவிட்டு அலறுகின்றன. தாய்மாரோ பிள்ளைகளைச் சாந்தப்படுத்தத் திராணியற்றவர்களாய் விம்முகின்றனர். பட்டியாய் இவர்களிலிருந்து பலரை அடைத்துக் கொண்டு சென்ற வாகனம் உறுமிக் கொண்டுவந்து நிற்கிறது. எல்லோரின் முகங்களிலும் பயத்தின் ஆணி அறையப்பட்டுள்ளது. தாய்மார்களின் ஒப்பாரி சுவர்களிலும் மரங்களிலும் மோதி அலைகிறது. இளம்பெண்கள் விம்முகிறார்கள். நரக வண்டியிலிருந்து இவர்களின் ஆட்கள் உதைத்து வீழ்த்தப்படுகிறார்கள். இரத்தச் சேறு தெறித்த உடல்கள்...... கரங்கள் தொங்குகின்றன... பற்கள் உடைந்து..... உதடுகள் வெடித்து... கபாலம் பிளந்து.... விழுந்த உடல்களில் காற்றின் இயக்கம் இருக்கின்றதா என்ற அந்தரித்த ஆவல் இவர்களில். புழுதியில் கிடந்தவர்களைத் தூக்க ஓலமிட்டபடி இவர்கள் ஓடுகிறார்கள்.

வந்த அதுகள் விஷப்புன்னகையை கொட்டுகிறார்கள். மரங்களும் கட்டிடங்

களும் நடுங்க அதுகளின் சிரிப்பொலி விஷம் கக்குகிறது. அதுகள் விஷம் கக்கியபடி வண்டியிலேறி மறைகின்றன - புழுதியின் முன்.

இரத்தம் சிந்திய மனிதன் ஒருவன் கூறுகிறான்; தனது மூத்திர வாயிலுக்குள் செப்புக்கம்பியை நுளைத்ததாக; இன்னொருவன் சொல்லுகிறான்; தனது மலவாயிலுக்குள் கண்ணாடிக்குவளையை நுழைத்ததாக. அதற்குள் எதை மறைத்துவைத்திருப்பதாகத் தேடினார்கள்? அவர்களும் அதுகளும் தேடுதல் செய்வதிலே விற்பன்னத்திறம் கொண்டதாக அதுகளுக்கும் அவர்களுக்கும் மகிழ்ச்சியாயிருக்கும்.

''ஐயோ'' சில இடங்களிலிருந்து சூன்யத்தைக் கிழித்து அழுகுரல் எதிரொலிக்கிறது. இவர்களது இளம்பெண்களைக் காணவில்லை. காணவில்லை என்பதன் ஏக்கம் எங்கும் துக்கமாகப் பரவுகிறது ..... விஷப்பற்களில் கடிபட்டு .. மூக்கும் முழியும் பற்களும் சிதைந்து .....

இவர்களின் கூட்டத்திலிருந்து ஒரு அணி மாலையில், ஊர் எல்லையைக் கடந்து கொண்டிருந்தது. இவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி. ஊரெல்லையைக் கடந்து தப்பட்டும் அந்தக் குஞ்சுகள். பிறகு எங்களைக் காப்பாற்றட்டும். 'ஊரெல்லையுடன் தேவதூதர்கள் வந்து விட்டார்களாம்' என்ற வார்த்தைகள் எங்கும் எதிரொலிக்கின்றன. காற்றிலும் மரங்களிலும் ஒரு கிசுகிசுப்பு .... மெல்ல இவர்களிடம் ஒரு ஆறுதல் முளைக்கிறது. ஒரு சுமையை இறக்கி வைத்தமாதிரி. □□

□●□ □●□ □●□

*ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு எழுச்சி கொள்ளும் பொழுது தான் அது மக்கள் போராட்டமாக தேசிய போராட்டமாக முழுமையும், முதிர்ச்சியும் பெறுகிறது. அப்பொழுது தான் விடுதலையும் சாத்தியமாகிறது.*

*எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயமாக்கி மக்கள் போராட்டமாக முழுமைப்படுத்தி, மக்கள் அரங்கிலிருந்து ஒரு பலமான, உறுதிமிக்க தேசிய எதிர்ப்பியக்கத்தை கட்டி எழுப்பும் பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக எழுந்திருக்கிறது. இந்தத் தேவையை பூர்த்தி செய்வதில் எமது கலை, இலக்கிய படைப்பாளிகளின் பங்கு முக்கியமானது.*

*எமது போராட்ட வாழ்வின் மெய்யுண்மைகளை கலை, இலக்கியப் படைப்புகள் சூரிசித்து நிற்க வேண்டும். எமது சமூக வாழ்வியக்கத்தின் சகல பரிமாணங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும் இன ஒடுக்குமுறையின் கொடூரத்தினை சிருஷ்டி கர்த்தாக்கள் சித்திரித்துக்காட்ட வேண்டும். மக்களிடையே விழிப்புணர்வையும் எதிர்ப்புணர்வையும், விடுதலையுணர்வையும் தூண்டிவிடும் கலை, இலக்கிய ஆக்கங்களே எமது இலட்சியப் போருக்கு உரமேற்றுவதாக அமையும். இத்தகைய கலை, இலக்கியப் படைப்புகளே தேசிய எதிர்ப்பியக்கத்திற்கு உயிரூட்டுவதாகவும் அமையும்.*

*தமிழீழத் தேசியத் தலைவர்*
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**



# வேட்கை

□ ந. கிருஷ்ணசிங்கம் □

பொழுது புலராத அந்தநேரத்தில்...... இருள் அதிர்ந்தது! தங்கள் கிளைகளோடு கிளம்பிய அரக்கர்கள்; ஆயிரம்... ஆயிரம் கைகளில் ஆயுதங்களை உயர்த்திய படி... தீப்பொறிகளைஉமிழ்ந்து தள்ளியபடி; பேரிரைச்சல்களை எழுப்பி...ஆகாயத் துப்பிகளின் துணையோடு...... தங்கள் அழிப்பு வேலையை ஆரம்பித்தனர்.

''வாறாங்கள்... வாறாங்கள்! தம்பி எழும்படா! தங்கச்சி எழும்படி! ஓடுவம்... ஓடுவம்! வாருங்கோ ஓடுவம்!''

இவை அன்றாடு வந்து மீளும் அவலங்கள்தான். ஓசை கேட்டு ஓடுவதும்; நிசப்தம் நிலவ திரும்புவதும் .. இந்த எல்லைப் புறவாசிகளான எங்களுக்கு வழக்கமாகிவிட்டது.



அமைதித் தேவதை தன் சேலைத் தலைப்பால் முக்காடிட்டு; மூலையிலே முடங்கிப்படுத்து வெகுகாலமாகிவிட்டது. விரக்தி சுமந்து வாழும் வேதனை நெஞ்சங்கள்... நெடுமூச்சுகளை இறைத்து அலுத்து விட்டன. ஊரைவிட்டு வெளியேறி; எங்கோ தொலைந்தவர்களைவிட; எங்களைப் போன்றவர்கள் இன்னும் நிலத்திலே நின்று பிடிக்கிறோம்.

''அவன்களை இஞ்சாலை கடைசி வரை வரவிடம்! பவளம் அக்கா! பயப்பிடாமல் இருங்கோ!'' என்ற திலகனின் குரல்; அடிக்கடி என் செவிகளில் ஒலித்தது... நம் பிக்கைச் சுரப்பியை நெருடிவிடும் அந்தச்

சின்னஞ் சிறிய போராளிக்கு இருக்கும் மனஉறுதி; வயது இருபதைத் தாண்டிவிட்ட தடிக்குமரியான எனக்கில்லையே ..? என, என்மனம் ஏங்குவதுமுண்டு.

சூரியனின் வரவு கண்டு, அசுரர்கள் திரும்பி விட்டார்கள். சுமந்து கொண்டு ஓடிய பொருள் பண்டங்களோடு; வீடுதிரும்பும் படலத்தில் ஈடுபட்டோம். தங்கச்சி எப்போதும் போல் புத்தகக் கட்டோடு முன்னே போகிறாள்.

''கடவுளே! எப்பதான் இந்தக் கோதாரி அலைச்சல் தீரப்போகுதோ?''

என உரக்கக்கூறி உள்ளம் வெதும்பியபடி; அம்மா தனது வற்றலான உடலைச் சுமந்தபடி பின்னே வருகிறாள்.

வண்டில் மாடுகளை விரட்டிக்கொண்டு அப்பா முன்னேபோக; ''வண்டிலை பூட்டியாங்க எண்ட; விட்டிட்டு... என்னாலை நடக்கவும் ஏலுதில்லை'' என்று, போலியோ வந்த தம்பி சிணுங்க; நான் அவனைத் தூக்கி நாரியில் ஏற்றியபடி நடக்கின்றேன்.

சமராடித் திரும்பிக்கொண்டிருந்த போராளிகள் எங்களை அனுதாபத்தோடு பார்க்கின்றார்கள். திலகனின் முகம் தெரிகின்றதா என்று தேடிய எனது கண்ணில் பெண் போராளிகளின் மிடுக்கு நடை உறுத்துகின்றது.

அரக்கர்கள் வந்து போன தடம் வழியெங்கும் ஆழப்பதிந்திருந்தது. ஆடுமாடுகள் கட்டோடு... கருகிக்கிடந்தன! .. வீடுகள் அழிந்து... இடிந்து... புகை எழும்பி; எரிந்து கொண்டு...; சேதத்தை எடுத்துக் கூறமுடியாத வாயடைத்த துயரங்களோடு வந்து சேர்ந்தோம்.

மரணித்துக்கிடந்த மயான அமைதியை கிழித்துப்போட்டபடி; அகிலா செய்தி கொண்டோடி வந்தாள். ''அக்கா! எங்கடை திலகன் வீரமரணமாம்''

என் இருதயம் அதிர்ந்தது! கைவேறு... கால்வேறாகக் கழன்று விழுந்துவிட்டது போல் கதறினேன். மண்ணிலே விழுந்து குழறினேன்... துடித்தேன்... இன்னும் என்னென்ன செய்தேனோ எனக்குத் தெரியாது.

''அக்கா... அக்கா! பவளம் அக்கா!'' திலகனின் குரல் ஊசி இழைகளாய் என் உயிர் நரம்பில் ஊடுருவியது. விடுதலை வேண்டி உந்தி எழுந்த அந்தச் சின்னஞ் சிறு சிட்டுக் கடுவன்... வெடிபட்டு வீழ்ந்தான்! என்னால் அந்தத் துயரத்தை மிண்டி விழுங்கி; ஜீரணிக்க முடியவில்லை. அவனின் உடல் காணவேண்டி ஓடினேன்.

சிறிய வெள்ளை நெற்றியின் கீழ்...... அந்த அடர்ந்த புருவங்களின் கீழ்... பறந்த அந்தக் கண்வண்டுகள் .. இமைகளுக்குள் சிறைப்பட்டுக் கிடந்தன. றோசாநிறக் கன்னங்களின் மினுக்கத்தை மரணம் பறிக்கவில்லை, சிவந்த அதரங்கள் இன்னும் சிரித்தபடி தான் இருந்தன.

திலகனின் புகழ் உடலைப் பிரிந்துவர முடியாதவனாக... பேழையை மூடி அடைக்கும்வரை, உன்னத ஊர்வலம் முடியும்வரை, விதைகுழியில் அவன் உடல் விதைக்குமட்டும் .. என்னை இழந்தவனாக நான் நின்றிருந்தேன்.

என் நெஞ்சத்தை ஆற்ற எனக்கு நெடுநாள் தேவைப்பட்டது. அவ்வப்போது அவனின் முகம் தெரியும். அந்த கண்வண்டுகள் நிலை கொள்ளாது பறக்கும். முற்றத்து மாங்காயை எட்டிப்பிடுங்கி தானும் தின்று... எனக்கும் நீட்டும் அவனின் வேகம் தோன்றும். இடதுகையை தூக்கி மணிக்கூட்டை நோக்கி, பின் சயிக்கிலை உருட்டி... தொங்கிஏறி, எட்டாத கால்களால் அங்கும் இங்கும் ஆடி அவன் உன்னி உழக்கிப்போய் மறையும் தோற்றம் தெரியும்.

இருளின் சுருதியை இல்லாதொழித்து இறந்தாற்போல் விண்ணெழுந்து வெடிக்கும் தீயின் சுவாலைகள் இப்போதெல்லாம் என் இதயத்தை துணுக்குறச் செய்வதில்லை குண்டுகள் .. துப்பாக்கி வேட்டுகள் இவற்றோடு: அசுரர்கள் எழுந்துவரும் அவல ஒலிகள் அவ்வளவாக என்னைப் பாதிப்பதில்லை.

மனம் சலிக்காது முகம் சுழிக்காது வேதனைகளை எதிர் கொள்ள என்மனம் முனைந்தது. அழிவுக்கு இடையே எழுந்து ஆக்கத்தை உருவாக்கும் ஊக்கம் வளர்ந்து வந்தது. சூழ்நிலை புரிந்தது! எதிர்காலத்தின் ஒளிக்கீற்று எனக்குள் தெரிந்தது.

விடுதலை வேண்டி வீறாப்போடு பறக்கும் சிட்டுகளின் சிறகொலி.. என்னை வா வா வென்று அழைத்தன. பயத்தின் பழுவால் மெல்லக் கூனிப் போய்விட்ட எனது முதுகு... என்னையறியாமலே நிமிர்த்து கொண்டது.

''அகிலா நான் இயக்கத்துக்கு போகப் போறன்!'' தங்கையை பார்த்து நான் கூறியது அவளுக்குச் சிரிப்பை மூட்டியது.

''பயந்த பீச்சாண்டி! நீ இயக்கத்துக் குப் போப்போறியோ?''

உரக்கக்கேட்டவளின் உதடுகளைப் பொத்திவிட்டேன்.

விடிவைநோக்கி நான் புறப்படும் பயணத்துக்கு... விடுக்கப்பட்ட அறிவிப்பாக அது அமைந்தது. பந்தபாசங்களால் மயங்கும் மனங்களின் மயக்கங்களைத் தாண்டி, துயில் நீங்கிய நம்பிக்கைச் சுடரை தூண்டிவிட்டபடி... உன்னத இலட்சியத் தைத்தேடி அன்றே வீட்டின் படலையைத் திறந்து வெளிப்பட்டேன்.

பயிற்சிகள் முடிந்து முழுமையான போராளி என நிமிர்ந்த நான் இந்த மூன்றாண்டுக்காலத்தில் அனுபவரீதியாக அறிந்து கொண்டவை கல்விமூலம் கற்றுக்கொண்டவை எல்லாம் என்னை இனவிடுதலைக்காக விரைவுபடுத்தின.

எமது எல்லைப்புறக் கிராமம் எதிரிகளின் கைக்குள் சிக்குண்டது கேட்டுவருந்தினேன். எங்கள்வீடு... அயல்அட்டம்... அம்மன் கோவிலடி, பாடசாலை.. அது .. இது என்று என் நெஞ்சுள் திரைப்படமொன்று ஓடித்தீர்ந்தது.

ஆழப்புதைந்துபோன உறவுப்பிணைப்புகள் உடைப்பெடுத்து சிறு கணங்களை விழுங்கிக்கொண்டன. ஒல்லியான தேகமுடைய அம்மாவும் ஒருகாலை இழுத்து இழுத்து நடக்கும் என்தம்பியும் நீண்ட நேரம் நினைவில் நின்றாடி மறைந்தார்கள்.

சிந்தும் ஒவ்வொரு வியர்வைத் துளியும், குருதித்துளியும் தாயகமண்ணுக்காக என்ற நினைவு, உந்திஎழும் உற்சாகப் பெருக்கை, ஒவ்வொரு புதிய நாளிலும் வாரிவழங்கியது. என்றும் உறைந்து போகாத உணர்வுக் கிளர்த்தல்களோடு எதிரியைக் களங்களில்கண்டு எங்கள் மண்ணை விடுவித்து வந்தோம்.

சூறைக்காற்றாய் சுழன்றடிக்க சூழ்ந்து வந்து எமது மண்ணையும் மக்களையும் விழுங்க... அசுரர்கள் போட்ட திட்டத்தை எதிர்கொள்ள; எழுந்த அணிகளுள் ஒருத்தியாகி நான் களத்திலே நின்றேன்.

மேகக்கூரைகளைக் கிழித்தெறிந்தபடி; விமானங்கள் வெளிக்கிளம்பிவந்தன... குண்டுகளைக் கொட்டின! இடி இடியாக அவை விழுந்தன! கடலெனப் பெருகிவந்த எதிரியைக்காப்பாற்ற வானத்தடுப்பு வலுமும்முரமாகியது.

ஊழிக்காற்றின் ''ஹோ'' வென்ற உறுமலோடு கூரிய துணிவோடு... நேர் எதிர்கொண்டு நாங்கள் மோதினோம்! சுற்றி வந்த எதிரிபடை சற்றுப்பின்னோக்கி நகர்ந்து... வீழ்ந்துபட்டு அச்சத்தொனி எழுப்பி.. ஏக்கம் கௌவிக் கொள்ள, எங்கும் சிதறியது.

உதய சூரியன் முதிர்வடைந்து உச்சியைத் தொட்ட வேளையிலும் அடிபாடு முடியவில்லை. என் கண்முன்னே நின்று அடிபட்ட தோழி; அலறுவது தெரிகிறது. நெஞ்சால் தவழ்ந்து சென்று; அவளை நிமிர்த்திய போது...

புலன்கள் அதிர... மின்னாமல் முழங்காமல் இடியொன்று என்மடியிலே இறங்கியது. அது அகிலா. என்உடன் பிறப்பான அகிலாவேதான்.

வேகமாய் பாய்ந்துவந்த பாசப்பெருக்கோடு... 'அகிலா! அகிலா...' என அழைக்கிறேன். மெல்ல விழிகளை உயர்த்தி கூர்குறிப்பாய்பார்த்தவள், கணப்பொழுதில் என்னைக் கண்டுபிடித்துவிடுகிறாள்.

''அக்கா!'' என்ற முனங்கலோடு... அவளின் ஆவிபிரிகின்றது.

அகிலாவின் இரத்தம் தோய்ந்த துப்பாக்கியை எடுத்து என் தோளிலே ஏற்றிவிட்டு... தொடர்ந்து அரக்கரைத் துரத்துகிறேன். ☐☐

இன்று உன்னைக் காணும்போது என்னுள் பற்றிக்கொண்டு வருகிறது. மூளாத்தீபோல என்னுள்ளேயே கனன்று கொண்டிருந்த உன்னைப்பற்றிய என்நினைப்புகளெல்லாம் பெருநெருப்பாய் மூண்டு, தீக்கங்குகளாய் என்னுள் அனல் வீசிக்கொண்டிருக்கின்றன.

இன்றும் உனக்கு அதே கதிதானா?

என் உள்ளம் நம்ப மறுக்கிறது.

இன்றும் உனக்குச் சகல கிருத்தியங்களும் செய்யப்படும் என்று நம்பித்தானே அந்த அழகை எல்லாம் காண என்று ஓடிவந்தேன். ஆனால்... இங்கு நடப்பவற்றைக் காணும்போது என் நெஞ்சு படும்பாட்டை என்னவென்று சொல்வேன்.

என்றும் போல இன்றும் உன்முன் நின்று, உன் திருவுருவை என்னுள் வரித்துக்கொண்டு, உன் சர்வ வல்லமையுள் தோய்ந்து என்னையே மறந்தவனாய் இந்தப் பூவுலகின் எல்லை வெளிகளை எல்லாம் கடந்து, அதற்கும் அப்பால் .. அதற்கும் அப்பால் எனச் செல்ல விழைகின்ற என் முயற்சியில் இன்று ஆரம்பத்திலேயே தோற்றுப்போய் அநாதரவாய் நிற்கின்றேன்.



# வல்லமை தாராயோ

□ த. கலாமணி □

எல்லாமே உன்னால் தான்.

இன்று என் மனம் உன்னில் ஒரு நிலைப்பட மறுத்து உனக்காக இரங்குவதை எப்படி வெளியே சொல்லுவேன்?

''பொல்லுக்கிழவா!''

என் அம்மா உன்னைப் பெயர் சொல்லி இறைஞ்சுவது இன்னமும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இன்று உனக்கு அணிவித்திருக்கும் பட்டுப் பீதாம்பரத்தைக் காணும்போது உன் ஆஜானுபாகுவான ஆகிருதியே என் கற்பனையில் விரிகிறது.

இந்த உத்தரீயத்துடன் நீ நடந்து செல்லும் அழகை என் மனத்திரையில் காண்கின்றேன்.

பொல்லும் கையுமாய் இந்த உத்தரீயத்துடன் உலாவரும்போது உன் கம்பீரமான நடையின் வேகத்திற்கு நான் மனக்கணக்குப் போடுகிறேன்.

நீ தெய்வமா அல்லது அவதார புருஷனா?

அண்ணன்மார் என்ற பெயர் மருவி உனக்கு அண்ணமார் என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்லிய ஆராய்ச்சி முடிபை அப்படியே ஏற்றுக்கொள்ள என் அகம் மறுத்த வேவளயிற்தான் உன் மூலத்தைக் கண்டறியவேண்டும் என்று என் மனம் விழைந்தது.

சிறுதெய்வம் என்று உன்னை ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டமைக்காக மனம் புழுங்கி, யார் யாரோ எல்லாம் தம் ஆராய்ச்சி முடிபுகளாகக் குறிப்பிட்டவற்றை எல்லாம் வைத்துக்கொண்டு உன் மூலத்தைக் கண்டறிய நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அப்பப்பா!

உன் மூலத்தைக் கண்டறிய வேண்டும் என்ற என் முயற்சியில் ஓர் ஒளிப்பொட்டுத்தெறித்ததுபோல் என் நினைவில் பிரதிபலித்த என் அம்மாவின் இறைஞ்சுதல், என் முயற்சியின் ஆரம்பத்துக்கான ஒரு சிறு நம்பிக்கை இழையானது.

''பொல்லுக்கிழவா!''

அந்நாளிலே, மூக்குறிஞ்சிக் கொண்டு திரிந்த பருவத்தில் என் அம்மாவின் சேலைத்தலைப்பைப் பிடித்துக்கொண்டு உன்னை வேடிக்கை பார்க்கையில் உன்னை என் அம்மா இப்படித்தானே பெயர் சொல்லி அழைத்து வணங்கினாள் என்பது திடீரென்று ஞாபகத்துக்கு வந்தபோது, என் அம்மாவின் நினைவுகளை மீட்டு உன்னைப்பற்றி அறிந்துகொள்ள நான் மேற்கொண்ட எத்தனங்கள்..!

அம்மா என்ன செய்வாள், பாவம்!

நினைவுகள் எல்லாம் மங்கி மறைந்து போன முதுமை நிலையில் எதுவுமே அவளது நினைவுக்கு வர மறுக்கின்றன. நான்தான் விடுவதாயில்லை.

''அண்ணமாரை பொல்லுக்கிழவன் என்றெல்லே சொல்லிக் கும்பிடுறநீ... அது ஏனணை?''

தொலைவை வெறித்து நோக்கியவளாய் அம்மா மௌனமானாள். அவள் உதிர்க்கப்போகும் வார்த்தைகளைக் கேட்க என் காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறேன்.

''ஆச்சி அப்படித்தான் சொல்லிக் கும்பிடுறவ, மேனை...''

வரலாற்று ஆராய்ச்சி என்றாலே இப்படித்தான் என்பதை உணர்ந்தவனாக என் முயற்சியில் தொடர்கிறேன்.

''உனக்கு பொல்லுக்கிழவனைப் பற்றி பத்ததி ஏதும் தெரியுமேணை?''

அம்மா ஞாபகப்படுத்த முயன்று தோற்றுப்போய்ச் சொல்கிறாள்;

''எனக்கு ஞாபகமில்லை மேனை...... முந்தி ஆச்சி ஏதோ படிக்கிறவ ..''

பத்ததி வரிகளிலிருந்து பொல்லுக்கிழவனைப் பற்றி ஏதாவது அறியலாமா என்ற என் முயற்சியும் கைகூடாதபோதிலும், அம்மாவைப் பேசச் செய்யக்கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிடாமல், மேலும் உற்சாகப்படுத்தி அம்மாவின் நினைவைப் பின்னோக்கி இழுத்துச் செல்ல முயற்சிக்கிறேன்.

அதன் பேறாக, அம்மா விட்டு விட்டுச் சொன்ன விபரங்கள் தான் பொல்லுக்கிழவனின் மூலத்துக்கான அடி ஆதாரங்கள்.

''வல்லிக் கிழவன் பொல்லுக்கிழவனா வந்து ஆடிப்பாக்க வேணும் மேனை, எங்கடை உடம்பெல்லாஞ் சிலிர்த்துப் போகும்''

அம்மா சொன்னவற்றை எல்லாம் கோர்வைப்படுத்தி மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன்.

வேள்வி ஆரம்பிக்கச் சற்றுமுன்னரே சூலத்தின் முன்னால் வல்லிக்கிழவன் மௌனமாக இருக்கத் தொடங்கிவீடுவாராம். சனங்களின் ஆரவாரம் அடங்கி, எல்லோரும் வல்லிக்கிழவனையே பார்த்துக் கொண்டிருக்க, அண்ணமார் சூலத்தை வெறித்து நோக்கியவாறே வல்லிக்கிழவன் மெல்லத் தலையை முன்னும் பின்னும் அசைத்து, படிப்படியாக உடம்பையும் அசைக்கத் தொடங்குவாராம். வல்லிக்கிழ

வனின் அங்க அசைவுகளெல்லாம் மெல்ல மெல்லச் சனங்களை அண்ணமார் மீது பயபக்தி கொள்ளச்செய்யுமாம். தலை அசைப்பின் வேகத்தை மெல்ல அதிகரித்து, உடம்பை முறிப்பதுபோல நெளித்து வளைத்து, ஓர் உச்சக்கட்டத்தில் எழுந்து நின்று வல்லிக்கிழவன் உருவந்து ஆடத் தொடங்கிவிடுவாராம். சற்றுநேரத்தில், சூலத்தோடு சாத்தி வைத்திருக்கும் நீண்ட பொல்லொன்றை ஓடிச்சென்று பாய்ந்து எடுத்து, அதனைச் சிலம்பம் சுழற்றுவது போலச் சுழற்றிக் கொண்டே கோயிலிலி ருந்து நான்கு திசைகளிலும் சற்றுத்தூரத் துக்கு ஆடிக்கொண்டே சென்று எதிரிகளை யும் விலங்கினங்களையும் விரட்டுவது போலப் பாவனை செய்து திரும்பி வரு வாராம். வல்லிக்கிழவனின் ஆட்டத்தை ஒத்த ஆட்டத்தை வேறு ஆட்கள் ஆடிய தையும், சின்னப் பருவத்தில் ஆச்சியுடன் கூட இருந்து அம்மா பார்த்திருக்கிறாவாம்.

அந்த ஆட்டத்தைப் பார்க்கச் சந்தர்ப் பம் கிடைக்கவில்லையே என்று அங்க லாய்த்து என்மீதே பச்சாத்தாபப் படத் தான் என்னால் முடிகிறது.

ஒருவேளை, அந்த ஆட்டம் இன்றும் தொடர்ந்து ஆடப்பட்டு வந்திருந்தால் பொல்லுக்கிழவன் பற்றிய செய்திகளும் கடத்தப்பட்டு வந்திருக்கும்.

இந்த தொடர்ச்சி ஏன் விடுபட்டுப் போனது?

இக்கேள்வி என்னுள் ஓங்கி ஒலிக்கின் றபோதே என் தந்தைவழி உறவினர்மீது வெறுப்பாகவும் வருகிறது.

''நூற்றுக் கணக்கான ஆடுகளையும் கோழிகளையும் வெட்டி வேள்வி செய்கிற அண்ணமார் கோயிற்பக்கமே போகாமல் இருந்த நாங்கள்தான், பகீரதப் பிரயத்த னஞ் செய்து வேள்வியை நிறுத்தி அண்ண மார் பொங்கலாக்கினம்.

இன்றைக்கிருக்கிற பால கணபதி விக்கிர கத்தைக்கூட என்னுடைய சின்னண்ணன், சிவகுரு வாத்தியார்தான் உபகரித்தவர். வதிரி அண்ணமாரிலை சூரன் ஆசாரியார் வேள்வியை நிறுத்திய கையோடை, கவிஞர் அத்தான், சின்னண்ணை எல்லோரும் சேர்ந்து செய்த முயற்சியாலைதான் இன் றைக்கு இந்தக்கோயில் ஆலடிப்பிள்ளை யாராய் விளங்குது ..''

சோதிடம் சொல்லும்போதே கதை யோடு கதையாக கோயில் வரலாற்றையும் ஐயா சொல்லும்போது எனக்கு எரிச்சல் எரிச்சலாக வரும்.

ஒரு சமயம், ஐயாவின் உறவினர் எல் லோரையும் சாடி, உன்னைப் புறந்தள்ளி யமைக்காக என் ஐயாவிடம் நியாயம் கேட்டபோதுதான் உனக்கு ஏற்பட்ட நிலைமையையும் என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது.

ஆலடிப் பிள்ளையார் கோயிலுக்கென பரிபாலன சபை ஒன்று அமைத்து, ஆல யத்தை விருத்தி செய்து வந்தவேளையில், கால ஓட்டத்தில், ஆகம விதிப்படி கோயில் மண்டபங்களையும் கட்டடங்களையும் அமைத்து சுற்று மதிலும் கட்டி, உட்பிர காரத்தில் பரிவார மூர்த்தங்களையும் பிர திட்டைசெய்து, மகா கும்பாபிஷேகமும் செய்தவேளையில்தான் உனக்கு இந்தநிலை ஏற்பட்டதாம்.

வாத்தியார்-சின்னண்ணை எவ்வளவோ சொல்லியும் அவரின் வாதம் எடுபடவில் லையாம். நீ எல்லைக்காவல் தெய்வம் என்பதால் சுற்றுப் பிரகாரத்துக்கு வெளி யிலேயே இருக்க வேண்டும் என்று செல்லிச் சமாளித்துக் கொண்டார்களாம்.

இன்று முப்பது வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஆலயத்தைப் புனருத்தார ணம் செய்து மஹா கும்பாபிஷேகம் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. பிரசித்தம் பெற்ற ஆலயங்களைச் சேர்ந்த பிரபல்ய மான குருக்கள் சிலர் அழைக்கப்பட்டு, அவர்களின் மேற்பார்வையில் மஹாகும் பாபிஷேகத்துக்குரிய சகல கிரியைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதிகாலையிலேயே தைலாப்பியாங்கம் முடிந்து, யாக பூஜை, ஹோமம், மஹா பூரணாகுதி, தீபாராதனை என்று மஹா கும்பாபிஷேகத்துக்கு முன்னர் நடைபெற வேண்டிய அநேக கிரியைகள் நடைபெற்று முடிந்துவிட்டன.

இறுதியாக, தூபி அபிஷேகமும் முடிந்து, மூலவருக்கான மஹாகும்பாபி

ஷேகம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. பிரதம குருக்களே முன்நின்று சகல கிரியைகளையும் செய்து கொண்டிருக்கிறார்.

மூலவருக்கான அபிஷேகம் முடித்து, பரிவார மூர்த்தங்கள் ஒவ்வொன்றுக்குமான அபிஷேகத்தையும் குருக்கள் நேர்த்தியாகச் செய்துகொண்டு வருகிறார். இந்த ஆலயத்தில் நித்திய பூஜை செய்யும் 'சைவம்' பிரதம குருக்களுக்கு 'எடுபிடியாக' அவர் இட்ட கட்டளைகள் சகலவற்றையும் சிரத்தையோடு செய்து வருகிறார்.

நான் உனக்காக அபிஷேகத்தையும், வேத பாராயணத்தையும் எதிர் பார்த்துக் காத்திருக்கிறேன். பிரதம குருக்களின் சுருதி சுத்தமான, கார்வையான ஒலியின் மந்திர உச்சாடனத்தில் உன் உள்ளம் இன்று குளிரப்போகின்றதே என்று என் உள்ளம் உவகை கொள்கின்றது.

பிரதம குருக்களோ, அவருடன் கூட வந்த ஏனைய குருக்கள்மாரோ வெளியே வருவதாகக் காணோம்.

சற்று நேரத்தில், ஆலயத்திற்கு நித்திய பூஜை செய்கின்ற 'சைவம்' உன்னை நோக்கி வந்து, உனக்கான அபிஷேக, தீபாராதனையை முடித்துக் கொள்கிறார்.

மந்திர உச்சாடனத்தில் தெளிவேதுமின்றி, வழமையான முணுமுணுப்பு.

எனக்கு ஆத்திரமாக வருகிறது. அடக்கிக்கொண்டு சைவத்திடமே கேட்கின்றேன்!

''ஐயா, ஏன் அண்ணமாருக்கு மட்டும் அபிஷேகம் செய்ய குருக்கள்மார் வரேல்லை?''

சைவம் தயங்குகிறார். வழிபடவந்தவர்கள் யாவரும் அண்ணமாரை வணங்கித் தூரச் சென்றபின் என் காதருகே வகுனிறார்.

''என்னைச் சொன்னதென்று சொல்லிப் போடாதேங்கோ .. கோயில் நிருவாகியழும் குருக்கள்மாரும் கூடிக்கதைச்சவை .. வேள்வி செய்த தெய்வத்துக்கு குருக்கள்மார் பூஜை செய்கிற வழக்கம் இங்கையில்லை என்று நிருவாகியள்தான் சொன்னவை...''

என் மேனி நடுங்குறுகின்றது.

இப்படியுமா?

தெய்வத்திற்குமா ஓரவஞ்சனை?

'சிறுதெய்வம்' என்ற குறியீடு இதைக் குறிக்கத்தானா?

இவற்றையெல்லாம் வகுப்பவர்கள் யார்?




இந்த ஆலயத்திலே கடந்த சில வருடங்களாக நடைபெற்று வருகின்ற நடைமுறைகளை எல்லாம் ஒருமுறை நினைத்துப் பார்க்கின்றேன்.

இந்த ஆலயத்தின் பரிபாலனத்தைத் தொடர்ந்தும் தம் கைகளுக்குள்ளேயே வைத்திருக்க வேண்டுமென்று திட்டம்

தீட்டி, இந்த ஊர் மக்களின் பொதுச் சொத்தாக விளங்கும் இந்த ஆலயத்தில் புதிய புதிய நடைமுறைகளையும் புதிய புதிய வழிபாட்டு முறைகளையும் ஆரம்பித்துவைத்து, தங்களையும் தங்களைச் சார்ந்தோரையும் ஞானவான்களாகவும் ஏனையோரை எல்லாம் அறிவீனர்களாகவும் காட்டிக்கொள்ள விழையும் இக்கூட்டத்தினரின் போக்கை நிதரிசனமாகவே காணும்போது என் நெஞ்சம் தகிக்கிறது.

இன்றைய நடைமுறையே தெரியாதவர்களாக, தெய்வங்களிலும் பேதம் கற்பித்துக் கொள்ளும் இவர்கள் என்ன மனிதர்கள்?

பொல்லுக்கிழவா!

என் ஆற்றாமையை எப்படிச் சொல்வேன்.

ரிஷிமூலம், நதிமூலம் என்பதுபோல உன் மூலத்தையும் என் சிற்றறிவைக் கொண்டு கண்டுபிடித்துவிடலாம் என்று பலவாறு முயன்றும் தோற்றுப்போய் உன் சர்வவல்லமையுள் தோய்ந்து உன்னிடமே நான் சரணடைந்திருக்கும்போது, உன் நிலைமைக்காக நான் எப்படி வருந்தாமல் இருக்க முடியும்?

உன் சர்வ வல்லமையே இவ்வளவு தானா?

இல்லை. காலம் காலமாக அச்சத்திலும் அறியாமையிலும் வாழ்ந்த மக்கள் கூட்டத்தினரின் இடர் களைந்து, அறிவூட்டி ஆக்கமளித்தவன் நீ.

கொள்ளையரிடமிருந்தும் விலங்கினங்களிடமிருந்தும் அவர்களின் சுதந்திரத்தை மீட்டெடுத்து அவர்களின் சுதந்திர வாழ்வுக்கு வழிசமைத்தவன் நீ.

இதை நன்குணர்ந்ததனால் தான் உன்னையும் உன்னையொத்த அந்த மாவீரர்களையும் காலம் காலமாக அந்த மக்கள் எல்லோரும் 'அண்ணன்மார்களே' என்று தெய்வங்களாகவே போற்றி வந்திருக்கிறார்கள்.

அந்த மக்கள்தான் உண்மையிலேயே ஞானவான்கள்.

இந்த உண்மையை இன்றைய நடைமுறையிலிருந்தேனும் ஊகித்தறிந்துக்கொள்ள முடியாதவர்கள் தான் அறிவீனர்... ஞான சூனியங்கள். இவர்கள் ஞானாசிரியர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ள முயல்கின்றமையே இவர்களின் மதியீனத்தைத்தான் காட்டுகிறது.

இந்த ஞான சூனியங்கள் சமுதாயத்தையே சீரழித்து விடுவார்களோ என்றுதான் அச்சமாக இருக்கிறது.

பொல்லுக்கிழவா!

நியாயம் தெரிந்தவர்களும் கூட, 'தெய்வத்தின் பழி நமக்கேன்' என்று இன்னமுமா மௌனம் சாதிக்க வேண்டும்?

இல்லை.

---

**நாவல் இதிகாசம் போன்றது சிறுகதை பாடுவதற்கேற்ற ஓர் சிறிய செய்யுள்**

**— பீட்டர் ரெயிலர்**

---

எம் மௌனம் உடைய வேண்டும். அதற்கு நீ அருள் செய்ய வேண்டும். இந்த மண்ணின் பொய்மைகளை எல்லாம் தகர்த்தெறியும் வல்லமையை நீ எமக்கு ஊட்ட வேண்டும்.

வேத மந்திர உச்சாடனம் செய்து இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருளுமாறு வேண்டிக்கொள்வது போல உன்னை நான் ஆவாகனம் செய்கிறேன்.

பொல்லுக்கிழவா ..!

எம்முள் வருக!

எம்மில் உருக்கொள்க!!

உன் பேரில் சந்நதம் கொள்க!!!

ஆச்சி திண்ணைக்குந்தில் குந்திக்கொண்டிருந்தாள். அவளுக்குப்பக்கத்தில் ஒரு பாய்ச்சுருள், பாக்கு உரல், உணவருந்தும் தட்டு, தண்ணீர்க் கோப்பை எல்லாம் கிடந்தன. இவைதான் இப்போது ஆச்சியின் சொத்துக்கள்!

வாடைக்காற்று ஆச்சியின் முகத்தில் வந்து மோதியது!

'இந்தக்காத்துக் காலத்திலை எத்திணைபெடியள் உந்தத் தோட்டவெளியெல்லாம் பட்டம் ஏத்தித்திரியுங்கள்... எல்லாம் எங்கை போச்சுதுகளோ...' ஆச்சிக்கு வேதனையாக இருந்தது.

'சூய்... சூய்... ஆடுமாடுகளையும் விட்டிட்டு சனமெல்லாம் ஓடிட்டுது... ஒருமரஞ் செடியளையும் விடாமல் அதுகள் தின்னுதுகள்...' கிணற்றடி வேலிப்பொட்டுக்குள்ளால் நுழைந்த ஆட்டுக்குட்டியைத் துரத்தியபடி ஆச்சியின் மகள் கமலம் வந்தாள்.

'உதார் மேனை வந்தது?...' ஆச்சி கேட்டாள்.

'இஞ்சை ஆர் இருக்கிறது வாறதுக்கு.. ஆடொண்டு வந்துது... கீரையளைத் திண்டிடும் எண்டு கலைச்சனான்...' நெந்தபடி சொன்னாள் கமலம்.

'நாசமாப்போற ஆமியள் வந்து எங்கடை சனமெல்லாத்தையும் குடி எழுப்பிப் போட்டான்கள். விசாலாச்சியும் பிள்ளையளும் எங்கைபோய்... ஆற்றை கோடிக்கை கிடந்து கஷ்டப்படுதுகளோ......' ஆச்சி புலம்பினாள்.



# மண்

☐ ஆதிலட்சுமி சிவகுமார் ☐

ஆச்சியின் திண்ணையில் இருந்து இரா ணுவமுகாம் ஒரு முக்கால்மைல் தூரத்தில் தான் இரவில் இராணுவ முகாமுக்குள் வாகனங்கள் இரைவது துல்லியமாய்க் கேட்கும்!

உள்ளே எரியும் மின் வெளிச்சம் வானத்தில் ஒளிரும்!

உலங்குவானூர்தி சுற்றிச் சுற்றி முகாம் சுற்றாடலில் பறக்கும்!

விமானங்கள் இராட்சத உருவங்களாய் தாழப்பறந்து உள்ளே இறங்கும்!

இடையிடையே ஆட்லறி ஷெல்கள் வந்து இலக்கின்றி விழும்!

ஆச்சிக்கு எல்லாமே பழகிவிட்டது!

நிலமதிர வந்துவிழும் குண்டுகளுக்குப் பயந்து பெரும்பாலானவர்கள் இடம் பெயர்ந்து விட்டார்கள்!

சிலர் பகலில் வந்து வந்து, குழையும் விறகும் வெட்டிச் செல்வார்கள்!

சென்றகிழமை வீடுபார்க்க வந்த சோமுவுக்கு வெடிவிழுந்த பிறகு யாருமே வருவதில்லை!

அன்றே, ஆச்சியின் மகள் கமலம் தன் இரு குமர்ப்பிள்ளைகளையும் சின்னமணி வீட்டுக்கு அனுப்பிவிட்டாள்.

இப்போது... ஆச்சியும், கமலமும், அவள் புருஷன் தருமுவும் தான்!

ஆச்சிக்கு எண்பது வயதுக்கு மேலாகி விட்டது. கண்பார்வை தெளிவில்லை. குரலை வைத்துத்தான் ஆட்களை அடையாளம் கண்டு கொள்வாள்!

கமலம் கிணற்றடியில் ஊறப்போட்ட இரண்டு ஓலைகளை இழுத்து வந்து பின்னத் தொடங்கினாள்.

'மேனை... உவன் சின்னமணி வந்தவனே மேனை...'

ஆச்சி கமலத்தோடு இருந்தாலும்...... மூத்தவன் சின்னமணியில் தான் பற்றுக்கூட.

''சொல்லிவிட்டுக்கடக்கனை வருவன் தானே... ஏன் கத்திறாய்? ''

''அவனெண்டால் நல்ல வெத்திலை கொண்டந்து தருவன்! ''

கமலத்திற்கு எரிச்சல் வந்தது!

'ஏனணை... நேற்று வாங்கித் தந்தது எங்கை?......'

'அது பொங்கார் கிடக்குது .. வெறும் பிஞ்சு இலை .. அவனெண்டால் முத்தல் இலையாய் வாங்கித் தருவன் ..''

''சரி, நாளைக்கு வேண்டித்தரலாம்... உப்ப... உதப்போடு......''

ஆச்சி மௌனமாகினாள்.

முன்பெல்லாம் விசாலாச்சியும், வடிவும் வந்திருந்து ஆச்சிக்கு ஊர்ப் புதினமெல்லாம் சொல்லுவார்கள்!

முன் வளவு வெளிக்குள் பெரிசு சிறிசு வேறுபாடில்லாமல் தாச்சி விளையாடுவார்கள். ஆச்சி இந்தத்திண்ணைக்குந்திலிருந்தே விளையாட்டை ரசிப்பாள்.

இப்போது அந்த விளையாட்டு நிலத்தில் புற்கள் மண்டிவிட்டன. சிறுசிறு பற்றைகள் கூட உருவாகி விட்டன!

தூரத்தூர ஒவ்வொரு வீட்டில் ஒன்றிரண்டுபேர். அவர்களும் பொழுதோடு தூங்கி விடுவார்கள்! இரவு நீண்டு பயங்கரமாய்த் தோன்றும். மௌனத்தின் ஆட்சி மனதைக் கலக்கும்!

சயிக்கிளை உருட்டிக்கொண்டு வந்து தருமு விறாந்தையில் ஏற்றினான்

''ஆருது...'' ஆச்சியின் வாய் அசைந்தது!

''அதுநான்'' விறைப்பாய் சொல்லி விட்டு...

''இஞ்சை கமலம்...... உங்காலை ராவைக்கு அடிபாடு துவங்கு மெண்டு

துரையர் கடையடியிலை கதைக்கினம்...... சாமத்திலை அடிச்சாளென்டால் ஒண்டும் செய்ய ஏலாமப் போயிடும்... நாங்களும் எங்கையாலும் போவமே......''

தருமு பரபரத்தான்.

''எங்கை போறது?... போய் ஆற்றை வீட்டிலை இருக்கிறது?...''

''முதலிலை போவம் . போய்... சின்ன மணியைப் பிடிச்சு... எங்கையாலும் இருப்பம்''

தருமு அவளை அவசரப்படுத்தினான்!

''அண்ணைவீட்டிலை பிள்ளையள் ரண்டையும் விட்டிருக்கிறம் .. அங்கை நாங் களும் போய் என்னசெய்யிறது?... அதுகள் பாவம்... ..''

''வேறை எங்கையும் போவம்......''

கமலத்துக்கு இந்த இடத்தைவிட்டுப் போகத் துளிகூட விருப்பமில்லை.

''இப்ப என்ன அவசரமப்பா?... ஏதும் சத்தங் கேட்டால் பாப்பம் .....'' கமலம் எழும்பிக் குசினிக்குள் போனாள்.

தளர்ந்த நடையோடு தருமு கிணற் றடிக்குப் போனான்!

இவ்வளவு நேரமும் மௌனமாய் இருந்த ஆச்சி.

''என்னவாமடி மேனை .. ஆமிக்காறன் ஊருக்குள்ளை வரப்போறானாமோ?......'' என்று கேட்டாள்!

'இல்லையெணை... நீ பயப்பிடாதை...' என்ற கமலம். ''எண்பது வயதாகியும் கிழவிக்கு சாகப்பயமாக்கிடக்கு...'' என்று முணுமுணுத்தாள்.

'ஆச்சிக்கு கண்பார்வைதான் தெளி வில்லையே தவிர .. காது வலும் கூர்மையா கக் கமலம் சொன்னதை உள்ளெடுத்தது.

''எனக்குச் சாகுறதுக்குப் பயமில்லை மேனை...... வந்தாங்களெண்டால் சனங்க ளின்ரை வீடுவாசலுகளை உடைச்சுப் போடு வாங்களெல்லே.. அதுதான் கேட்ட னான்...'' என்றாள்.

தருமு உடம்பில் கிடந்த புழுதியைக் கழுவிவிட்டு வந்தான்!

''நாங்கள் எங்கையன் போறதெண் டால் சும்மாவே .. ஆச்சியையும் கொண் டெல்லே போகவேணும்... பிறத்தி வீடுக ளிலை ஆச்சியை வைச்சிருக்கேலாது ... ஏதன் சண்டை தொடங்கினா பாத்துப் போவம் என்ன?......''




தருமுவுக்கு தேனீரைக்கொடுத்து விட்டு... கமலம் சொன்னாள்!

தருமு தலையாட்டியபடியே........ தேநீரைக் குடித்தான்.

கமலம் ஆச்சிக்கும் கோப்பைக்குள் தேநீர் ஊற்றிவிட்டாள்!

வழமைபோல நேரத்துடன் எல்லோரும் தூங்கிவிட்டார்கள். ஆச்சி பாக்கு இடிக்கத் தொடங்கிவிட்டாள்! அவளுக்கு தூக்கம் வரவில்லை!

கமலம் புட்டோடு சாப்பிடத்தந்த வாழைப்பழங்களை ''சின்னமணி வந்தாலும்'' என்று ஆச்சி மூடிவைத்திருந்தாள்.

அதை இப்போது எடுத்துச் சாப்பிட்டாள். தன்னருகே காவல்போல் படுத்துறங்கும் நாய்க்கும் ஒருதுண்டு கிள்ளிப்போட்டாள்!

ஆச்சி கண்ணயரத் தொடங்கியபோது,

முகாம்பக்கமிருந்து துவக்கு வெடிச்சத்தங்கள் ஒலித்தன!

''நாசமாப் போவார் துவங்கிவிட்டான்கள்......'' ஆச்சி எழும்பினாள்.

கமலமும் முளித்து விட்டாள்.

''பாத்தியே... நான் சொல்ல நீ கேக்கேல்லை... பெடியள் ஆமிக்கு அடிக்கிறான்கள்''

தருமு நடுங்கினான்.

'உது பெடியள் அடிக்கிற சத்தமில்லையப்பா... ஆமிக்காறன் தான் பயத்திலை சுடுறான்...'' என்றபடி கமலம் முற்றத்துக்கு வந்தாள்.

மீண்டும் அதே துவக்கு வெடிச்சத்தங்கள்... ஹெலி ஒன்று தூரத்தில் சடசடத்தது.

''சண்டை துவங்கீட்டுது போலை ... வண்டிலைப் பூட்டுவம் ..'' தருமு அவசரப்பட்டான்.

''பொறுங்கோ...... எப்பன்நேரம் பாப்பம்......''

கமலம் சொல்லும் போதே .... சனங்கள் உரப்பைமூட்டைகளுடன் விரைந்து கொண்டிருந்தார்கள் .....

''எல்லாச்சனமும் போகுதுகள்... நாங்களும் போவமே ..'' தருமு பதறினான்.

கமலம் பதில் சொல்ல வாய்யுன்னு முன் ஆட்டலறி ஷெல் ஒன்று கூவிக்கொண்டு வீட்டைக் கடந்துபோனது!

அது விழுந்து வெடிக்கமுன்... மீண்டும் அடுத்தடுத்து ஷெல்கள்!

'நான் வண்டிலைப் பூட்டுறன்...... சாமான்களை வண்டிலடிக்கு கொண்டா...''

தருமு பின் வளவுக்குப் போனான்!

ஏற்கனவே, கட்டி தயாராகவைத்திருக்கும் உரப்பை மூட்டைகளில் ஒன்றைக் கமலம் தூக்கிக் கொண்டுபோய் வண்டிலடியில் வைத்துவிட்டு, கமலம் திரும்பி வந்தாள்.

துவக்கு வெடிச்சத்தங்கள் அமளியாய்க் கேட்டுக் கொண்டிருந்தன.

'ஆச்சி... ஆச்சி... எழும்பணை...... வண்டில் பூட்டியாச்சு...'' கமலம் முற்றத்து இருளில் நின்று கூப்பிட்டாள்.

''நான் வரேலை மேனை......''

''அடம்பிடிச்சு... சும்மா கிடந்து சாகப் போறியே... எழும்பெணை ...''

கமலம் ஆச்சியின் கையில் பிடித்து தூக்கினாள்.

ஆச்சி கையை வெடுக்கென இழுத்துக் கொண்டாள்.

''நாப்பது அம்பது வரியமா... நான் இருந்தவீடு இது... இதை விட்டுட்டு ஒரு இடமும் வரமாட்டன்''

எறிகணை ஒன்று பெரிய சத்தத்துடன் வந்தது ''ஐயோ ..'' கமலம் காதுகளைப் பொத்திக் கொண்டாள். வெடிமருந்து மணத்தது.

''அவன் கண்மண் தெரியாமல் அடிக்கிறான் .. அடம்பிடிக்காம வாணை......சனமெல்லாம் ஓடுது......''

''நான் வரேலை மேனை...... நீங்கள் போங்கோ '' இறுதியாய் சொல்லிவிட்டு ஆச்சி பாக்குரலில் இருந்த பாக்குத்தூளைக் கையில் கொட்டிக் கொண்டாள்.

''இனிநிண்டால் சாகிறதுதான்......'' கமலம் வண்டிலுக்கு ஓடினாள்

ஆச்சி சுவரில் சாய்ந்து பாக்குத்தூளை உமிந்து கொண்டிருந்தாள். □□



# வந்து போன வசந்தம்

□ புதுவை இரத்தினதுரை □



சின்னவயதின் நினைவுப் பொறிகள்
தீ மூட்டுகின்றன.
காலப்பெட்டகத்தின் கதவுகள் விரிய
பழைய நாட்கள் முளைவிடுகின்றன.
இன்னும் அழியாத அழகுடன் இருக்கும்
அந்தச் சின்ன ஊர்,
என் பாதம்படும் ஒவ்வொரு தடவையும்
பளிச்சிடுகின்றது.
நினைவுகளை அடிவரை தோண்டி
எட்டும்வரை தொட்டுப்பார்க்கிறேன்.
என்னுள் புதிய பரவசம் புகுந்துகொள்கிறது.
தாயைப் பெற்ற தந்தையின் தோளிருந்தே
ஐந்துவயதில் பள்ளிக்குப் போனேன்.
'சிறுப்பிட்டி கந்தையா வாத்தியார்'
என் விரல்பற்றி ஏடு தொடக்கினார்.
நான் வகுப்புக்குள்ளே படிக்கும் போது
அப்பா; வெளியே வேம்புக்குக் கீழே இருப்பார்.
எட்டிப்பார்ப்பேன்;
இல்லாது விட்டால் கல்லூரியே கலங்கும்
சிலேற்றுமட்டை சிதறுதேங்காயாகும்.
குளறும் சத்தம் கிழக்குத்தெருவரை கேட்கும்.
'தம்பிமுத்துவாத்தி' தலையில் கைவைப்பார்.
காலையில் மூன்று சதத்துக்கு

'சிவக்கொழுந்து அக்கா' தோசை விற்பாள்
வட்டவடிவம். எட்டங்குல விட்டம்.
ஒரு தோசைபோதும் வயிறூதிப்போகும்.
'புத்தர்கலட்டி பண்டாரி பெண்டிலிடம்'
பத்துச்சதத்துக்கு ஆச்சி மீன்வாங்கினால்...
மத்தியானம்
குழம்பும்பொரியலும் மணக்கும்.
வாசம்; இருக்கும் இடம்தேடி வந்திழுக்கும்
தோட்டத்துக்குப் போய்வருவோர்
சும்மாதரும் மரக்கறியால்
வீட்டு விறாந்தை நிரம்பிவழியும்.
இருட்டுக்குப் பழகியது எங்களூர்.
கும்மிருட்டானாலும் குறிதவறாது.
பத்துமணிக்கே நித்திரைக்குப் போய்விடும்.
'படபஸ்'சில் வந்திறங்கினால்
நாய்கள் மட்டும் வரவேற்கும்.
ஊர் உறங்கிக் கொண்டிருக்கும்.
மதவடியில்;
'பழனியப்பா' கடையில் மட்டும்
லாந்தர் எரியும்.
பளையிலிருந்து கிடுகு ஏற்றிவரும்
வண்டிற்காரர்கள் விழித்திருப்பார்கள்.
'ஆவரங்கால் கணேசன்' கடையில்
வாடகைக்கு சின்னச் சைக்கிள் இருந்தது.
உலக்குள வயலில் சைக்கிள் பழகியபோது
உலகத்தைச் சுற்றிய புளுகம்
சாதித்திமிர்பிடித்த 'லோயர் கந்தையா' வுக்கு
தந்தைசெல்வாவைப் பிடிக்காது;
ஜீ. ஜீ. பொன்னம்பலம் பற்றியே பேசுவார்.
தினசரி வாசிக்கத்தெரியாத கிழடுகளுக்கு
அவரின் வாயே 'வீரகேசரி' ஆகும்.
'கையில் 'செவ்விந்தியனை' பச்சைகுத்திய
'வெள்ளைத் தாமு' அண்ணர் கொக்குச் சுடுவார்.
'திருவரை வயலில்' கொடியேற்றுவார்.
இவக்கும் அவரும் சோதரங்கள்.
எனக்கும் அவரில் பிரியம்.
ஊருக்குள் ஒரு நாள் பொலிஸ் வந்தது.
விதானையும் சேர்ந்து வந்தார்.
வெள்ளைத் தாமருக்கு விலங்கிட்டார்கள்.

'சிவலிங்கத்தை'ச் சுட்டுவிட்டாரென்று
ஊர் முழுதும் கதைத்தது.
பின்னர் ஓய்ந்து போனது.
'அந்திராணனத்தரவை' வெளியில்
'மனோன்மணி அக்கா' மாடுமேயப்பாள்.
'சிவஞானம்' உதவிக்குக்குப் போவான்.
ஒருநாள் சுடலை பார்க்கும் ஆசைவந்தது.
இருவரும் உள்ளே போனோம்.
உடல்கள் உதறிக்கொண்டாலும்
சரித்திரம் படைத்ததாக நினைத்துக் கொண்டோம்.
பின்னாளில் விசர்பிடித்த 'லட்சுமி அக்கா' வுக்கு
என்னில் உயிர்.
ஒக்களையில் வைத்து உலாவருவாள்.
பக்கத்து வீட்டில்தான் குடியிருப்பு.
பரம்பரையாக தொடர்ந்த பாசஉறவு.
விசரென்று அவளை ஊர் விலத்திய போது
பார்த்து அழுதிருக்கிறேன்.
ஒருநாள் உலகம் எனது கைகளில் அடங்கியது.
அன்று 'காரைக்கூடல் வைரவர்' கடைசித் திருவிழா
ஊரெல்லாம் கோயிலில் கூடியிருந்தது.
நாங்கள் சிலர்
'ராணித் தியேட்டரில்' வேர்த்துக் கொண்டிருந்தோம்.
'காலம் மாறிப் போச்சு' படம் பார்த்தோம்.
முதன் முதலாகப் பார்த்ததால் மூச்சுமுட்டியது.
யாருக்கும் தெரியாமல் ஊர்திரும்பினோம்.
எப்படியோ கள்ளம் கசிந்தபோது
எல்லோர்வாயும் என் பெயரையே அரைத்தது.
'கோகிலாம்பாள்' கொலை வழக்குடன்
'ஈழநாடு' எங்களூர் வந்தது.
'தில்லையப்பாவின் கற்பகம்' ஆத்தை
ஒரு நாள் இறந்து போனாள்.
சாகும்வரை இவள் பஸ்ஸில் ஏறியதில்லை.
ஊருக்கு வெளியே உலகமிருப்பது
இவளுக்குத் தெரியாது.
இப்படித்தான்,
இவர்களுடன் சேர்ந்து தான்
எனக்கும் வசந்தம் வந்து போனது.

□□

ஈழத்தின் வளர்ந்து வந்த இலக்கியப் படைப்பாளியாகவும் சமர் இலக்கிய இதழின் ஆசிரியராகவும் சமூகத்தின் மீது மிகுந்த பற்றுணர்வு உடையவராகவும் வாழ்ந்து அண்மையில் காலமாகிய திரு. டானியல் அன்ரனியின் நினைவுடன் இச்சிறு கதை பிரசுரமாகின்றது.



# உயிர்

**டானியல் அன்ரனி**

எதிரே பிரதானவீதி, அப்பால் மாதாகோவில். மாதாகோவில் வளவு நிறைய 'ரெம்பிள்ரீஸ்'. கொத்துகொத்தாக மஞ்சள், வெள்ளைப்பூக்கள் விரிந்து பரந்த பெரிய மரத்தின் நிழலின் கீழ், பல வண்ணங்களில் 'நேர்சறி' பிள்ளைகள். வழமைக்கு மாறாக சோதினி ரீச்சர் பிரம்பால் உறுக்கிகோபத்துடன் கத்திக் கொண்டிருந்தாள்.

தெருவில்கூட ஆள் நடமாட்டம் குறைந்திருந்தது. எதிரே இருந்த அரசமரத்தின் நிழலில் மாடு ஒன்று சாவதானமாக அசை போட்டுக்கொண்டு படுத்துக்கிடந்தது.

'செயார்மன்' எதிர்பாரத விதமாக அறையைவிட்டு வெளியே வந்தார். அவரும் யன்னல் அருகே நின்று வெளியே பார்த்தார். வழக்கமாக காரில் இறங்கினால் நேரே தனது அலுவலக அறைக்குள் போய் விடுவார். அலுவலகம் முடிவடைந்தால் அப்படியே காரில் போய் ஏறிவிடுவார். இப்படி நின்று நிதானித்து வெளியே வேடிக்கை பார்த்தது ..

அவன் ''பேசீட்டை'' எடுத்து வைத்து மீண்டும் சரிபார்க்கத்தொடங்கினான். சிவ சேகரன். சி. 'லேபறர்'.

அன்றுகாலை பத்துமணிக்குப்பின்தான் அந்தச்சம்பவம் நடந்திருந்தது. அங்கு 'ஐஸ்' தினமும் வாங்கிச் செல்லும் மீன் வியாபாரி கந்தப்பன் முதலில் அலுவலகத்திற்கு வந்து இந்தச் செய்தியை அறிவித்துச் சென்றான்.

'பாவம் சிவசேகரன்... நல்ல குணமான பொடியன்... புள்ள குட்டிக்காரன்...''

எல்லோரும் அவனுக்கு அனுதாபம் தெரிவித்தனர்.. 'எக்கவுண்ட்ஸ் கிளாக்' திருமதி சிவகுமார் மாத்திரம் நீண்ட நேர மாக மூக்கைச்சிந்திக் கொண்டிருந்தாள்.

ஜேர்மனியில் கார் விபத்தொன்றில் சமீபத்தில்தான் அவளுடைய அக்காள் புருசன் இறந்துபோன செய்தி அவளுடைய வீட்டாருக்குத்தெரிய வந்தது.

'கேற்றை' திறந்து கொண்டு மனோ கரன்தான் முதலில் உள்ளே வந்தான். அவனுக்குப்பின்னால் இன்னும் சில ஆலை வேலையாட்கள் .....

மனோகரன் '''சியார்மன்'' பக்கத்தில் வந்து நின்றான். தேகம் சற்று பட படத் தது அவனுக்கு.

'என்ன' என்பது போல் சியார்மன் இவனையும் இவனுடன் கூட வந்தவர் களையும் பார்த்தார்.

'சேர்... சிவசேகரனுக்கு சூடுபட்டிற்று. ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயிருக்கி றாங்க .''

மேசைகளின் மேல் வைத்து எதை எதையோ எழுதிக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் நிமிர்ந்து பார்த்தார்கள்...

'இன்றைக்கு அவனுக்கு டியூட்டி இல்லைத்தானே... பிறகு ஏன் பக்டறிக்கு வந்தான்...' செயார்மன்.

'இன்றைக்கு சம்பளம் கொடுப்பதாகப் பேசப்பட்டது... அதுதான் அவன் வந்தான். அவன் வீட்டில் சரியான கஸ்ட்டம்'

'யாருக்குத்தான் கஸ்ட்டம் இல்ல...... இன்றைக்கு திகதி இருபது. அதற்குள்ள என்னசம்பளம் ...''

அவன் அப்பொழுதுதான் வந்திருந்த தவர்களை நிமிர்ந்துபார்த்தான். மனோகர னும் அவனுடன் கூட வந்த வேலையாட் களும் கோபத்துடன் வெளியே செல்வது தெரிந்தது. கேற்றின் சத்தம் பலமாக கேட்டது.

அவர்கள் போன பின் வெளியே பார்த் தான். எதிரே இருந்த மதிற் சுவரில் காகம் ஒன்று பறந்து வந்து குந்தியது. அங்கு மிங்குமாக அலகினை சிலிப்பியது. எதை யோ எதிர்பார்த்தது. சடாரென இன் னொன்று மேலும் இன்னொன்று... சேர்ந் தாற்போல் பலகாகங்கள்; அலகுகளை சிலுப்பி பயங்கரமாக கத்தின.

அல்பேட்கிச்சொக்கின் 'தி பேர்ட்ஸ்' இவன் நினைவுக்கு வந்தது .....

☐ ☐ ☐

வழக்கம்போல் நேற்றும் சிவசேகரன்! ,பக்டரிமனேஜ'ருடன் விற்பனைப் பணத் தைக் கொண்டு அலுவலகத்திற்கு வந்திருந் தான். தலையைத்தடவிக்கொண்டு இவன் அருகே வந்து நின்றான். ஒவ்வொருமாத மும் இப்படித்தான் இருபதாம் திகதி தொடக்கமே! 'எப்போ ஐயா சம்பளம் கொடுப்பீங்க' என்று கேட்கத் தொடங்கி விடுவான்.

சிவசேகரனுக்கு இறுக்கமான உடல்வாகு, சற்று கறுப்புநிறம் அளவாக வெட்டி மீசை விட்டிருப்பான். சுருட்டைமயிர் முன் நோக் கிச்சரிந்திருக்கும். அதிகம் பேசமாட்டான். பேசும் போதும் பக்கத்திலிருப்பவர்களுக்கு கேட்காது. அவ்வளவு பவ்வியம். சிவசேகரன் பல சம்பவங்களின் பின்னணியில் எல்லா ஊழியர்களின் கவனிப்பையும் பெற்றிருந் தான். அவனுடைய காரியமாற்றும் முறை பலரையும் கவர்ந்துவிட்டதொன்று...

ஆலையில் 'பவர்கட்' ஏற்பட்டால் 'பவர்ஸ்ரேசனுக்கு பாய்ந்து ஓடிப்போய் முதலில் அறிவிப்பவனாக இருப்பான்...... ஆலையிலிருந்து பணம் எடுத்துக் கொண்டு அலுவலகத்திற்கு யார் வந்தாலும் கூடத் துணைக்கு வருவது அவனாகத்தான் இருக் கும்......

இவை எல்லாவற்றையும் விட போன 'மார்ச்'சில் ஆலையிலும் அலுவலகத்திலும் இடம் பெற்ற 'ஸ்ரைக்'கில் குண்டு குண்டான எழுத்தில் அட்டைகளில் சுலோகங்கள் எழுதியது, சுவர்களில் ஒட்டியது, மரங்களில் ஏறி ஆணியால் அடித்தது... பேப்பர் காரரையும், போட்டோ பிடிப்பவனையும் கூடவே கொண்டு வந்து...

பெரிய கடதாசி அட்டையை சுருட்டி 'கோர்ண்' போல் பாவித்து சுலோகங்களை உரத்து எழுப்பியது... அமர்க்களப்படுத்திவிட்டான்.

"என்ன இருந்தாலும் சியார்மன் இப்படிப்பேசியிருக்கக் கூடாதுதான்...''

எல்லோர் மனதிலும் பட்டிருந்தது. ஆனால் பூனைக்கு யார்மணிகட்டுவது? பிரதம லிகிதர் தவரட்டினம், இறுதியாக வந்த பட்ஜட்டில் வெளிவந்த ''ஸ்பெசல் எலவன்ஸ்'' மூன்று மாதங்களுக்கு மேலாகியும் வழங்கப்படாதது பற்றி சற்று சூடாகப் பேசியதின் விளைவு—

அடுத்தநாள் வேறு காரணத்திற்காக 'எக்ஸ்பிளனேசன்' கேட்டு செயார்மனின் கையொப்பத்துடன் கடிதம் வந்தது .

□ □ □

ஆலையிலிருந்து அலுவலகத்திற்கு வரும் வழியில் ஒரு சந்தி. பயங்கரமான கொலைக்குத்தீர்ப்பெழுதப்படும் இடம். பொது மக்கள் பேசிக் கொண்டனர். அந்த குறுக்கு வீதி மேற்கே மிதப்பில் பெரிய சந்தை. சந்தைக்கு காய் கறி வாங்க வருபவர் பலர் வீதியை கடக்கும் தருணம் மரணத்தை தழுவிக் கொண்டனர்.

அந்த வீதியின் கிழக்குப்பக்கம் இடிந்து புதர் மண்டிக்கிடக்கு 'முனிசிப்பல்' கட்டிடம். அதற்கு அப்பால் இடிந்து நொருங்கிய 'பொலிஸ் ஸ்ரேசன்' அதற்கு அப்பால் மேற்கு முகம் பார்க்க... இராணுவ முகாம்... ஒல்லாந்தர் கோட்டை.

எந்தநேரத்தில் அங்கிருந்து வெடி பாயும் என்று யாராலும் எளிதில் சொல்லிவிடமுடியாது நகரம் முழுவதும் அதிர்ந்து குலுங்கும்.

ஆலையிலிருந்து வேலை முடிந்து திரும்பும் வேலையாட்கள் அந்தச் சந்தியில் நின்று, நிதானித்து—உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஒருவர் பின் ஒருவராக... சந்தியை கடப்பதற்குள் இருதயம் நின்று போய்விடும்.

அன்றைய தினமும் ஐந்து ஆலைத் தொழிலாளர்கள். இருவர் முன்னே நடந்தனர். அடுத்து சிவசேகரன். சைக்கிளில் இவன். பின்னால் இன்னும் சற்றுத்தூரத்தில் சோமன், பூவிலிங்கம்,

அப்பொழுதுதான் அந்தக்குண்டு பெரும் சத்தத்துடன் சரேலென பாய்ந்து வந்தது யார்மேலோ பட்டு உடலை உருவி, சடாரென எதிரே இருந்த இடிந்த சுவரில் மோதி துளைத்து அப்பால் சென்றது.

முன்னே சென்ற சிவநாதனும், மனோகரனும் சத்தம் சேட்டு அதிர்ந்துபோய் திரும்பிப்பார்த்தனர்.

சைக்கிளில் வந்துகொண்டிருந்த சிவசேகரன் சத்தம் போட்டுக் கத்தினான்.

''வெடி பட்டிற்று எங்கேயென்றுதெரியவில்லை'' வார்த்தைகள் முடியவில்லை. சைக்கிளில் இருந்த சிவசேகரன் மெல்ல சரிந்து நிலத்தில் விழுந்தான். முன்னே நின்ற சிவநாதனும், மனோகரனும் பாய்ந்து வந்து தூக்கி நிமிர்த்தினர். இரத்தம் வீதி முழுவதும் பரவியது ..

பின்னே வந்த சோமுவும், பூவிலிங்கமும் சந்தியை ஒரே தாவில் பாய்ந்து கடந்து சேர்ந்து தூக்கினர். கடற்கரை பக்கம் 'சென்றியில்' நின்ற 'பொடியங்கள்' சிலர் திமு . திமுவென இந்தப்பக்கம் ஓடிவருவதும் தெரிந்தது.

சிவநாதன் 'ராக்சி ஸ்ராண்டை'த்தேடி ஓடினான்.

எதிரே இருந்த சுவர் மணிக்கூட்டை நிமிர்ந்து பார்த்தான். நேரம் பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. பொன்னையர் அப்பொழுதுதான் படியேறி கந்தோருக்குள் வந்து கொண்டிருந்தார். ரூபவாஹினியில் 'வொய் இண்டிஸ்' 'இங்கிலண்ட்'' ரெஸ்ட்

மச், பார்ப்பதற்காகவே அரைநாள் லீவு எடுக்கும் இந்த நூற்றாண்டு மனிதர் அவர்...

இவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. காலையில் சிவசேகரன் வீட்டில் என்ன சொல்லி வந்திருப்பான்? குழந்தைகள் பசியில் அழுதிருக்கும். ''சம்பளம் எடுத்துவரும் பொழுது சின்னக்கடையில் அரிசியும் கறியும் வாங்கிவருவேன்''

அவன் இழப்பு - அவன் மனைவி...... அவன் பிள்ளைகள்......

'பேசீட்டை' மறுபடியும் மடித்து, பேப்பர் வெயிற்றை அதன்மேல் வைத்து, இருக்கையைவிட்டு எழுந்தான். மனதில் ஒருவேகம். சிறுமை கண்டு... இந்தநேரத்தில் பேசிப்பார்க்கக் கூடிய ஒருவர் 'எக்கவுண்டன்' திருச்செல்வம்......

அவன் மேசை அருகே நெருங்கி வந்து நின்றான். ''என்ன எக்கவுண்டன் .. சேர் .. இப்படியே இருந்தால் எப்படி? சிவசேகரத்திற்கு ஏதாவது நாங்கள் செய்ய வேண்டாமா.....?''

எக்கவுண்டன் நிமிர்ந்து பார்த்தார். கண்ணாடியை, கழற்றி மேசையில் வைத்தார் அவர் பார்வையில் பரிதாபமா . பயமா

''ஏன் .. ஐசே .. இதில என்ன மாட்டப்பாக்கிறீர்... மந்திலி ஸ்றேற்மன் இன்னும் குடுக்கையில்லை என்று என்னோட ஏறிக் கொண்டிருக்கிறார். ''செயார்மன்'' இது வேறு தொல்லை... குறை நினைக்காதீர் .. இதற்கு வேறுயாரையாவது பாரும்''

அவன் பலமாக தலையசைத்தான். கோபம் தலைக்கு ஏறியது. இருந்தும் சுதாகரித்துக் கொண்டான். திடமான முடிவுக்கு வந்தவனாக முகாமையாளர் மேசைக்குமுன் போய் நின்றான். வெகு எச்சரிக்கையுடன் வார்த்தைகளை பேச வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

முகாமையாளர் கண்ணாடியை சரி செய்து கொண்டே நிமிர்ந்து பார்த்தார். பிறகு வெற்றிலையை மடித்து சுண்ணாம்பைத் தடவிக்கொண்டு மறுபடியும் வாயில் போட்டு அரைப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தார்.

''என்ன விசயம்...''

கேட்டுக் கொண்டே அவக்கென்று வாய்க்குள் வெற்றிலையை தள்ளினார்.

''இல்லை... சேர்... எங்களோட பத்து வருசத்துக்குமேலாக வேலை செய்தான்... சேகர்......''

''உம்......''

அவனுக்கு நாங்கள் ஏதாவது செய்ய வேணும்......

''உம்......''

சரியான கஸ்டம் அவனுக்கு. சாவீட்டுச் செலவுக்கு ஒரு ஆயிரமாவது கொடுக்க வேணும். மலர் வளையமும் எடுத்து வைக்க வேணும். அஞ்சலி நோட்டீசும். வேறு இருக்கு அலுவலகக் கறுப்புக் கொடி. ஒரு நாள் லீவு.

''உம்......''

முகாமையாளர் சடாரென இருக்கையை விட்டு எழுந்து வெளியேறிப் போய்......

'புளிச்.........' என்று ஒரு தடவை வெற்றிலை சாற்றைத்துப்பி விட்டுவந்து மறுபடியும் இருக்கையில் அமர்ந்தார்.

''எல்லாம் செய்ய வேண்டியது தான்''

இப்படித்தான் முகாமையாளரிடம் இருந்து வார்த்தைகள் வரும் என்று எதிர்பார்த்தவனுக்கு அவருடைய பேச்சு அதிர்ச்சியாக இருந்தது.....

''எல்லாம் .. எங்களுக்குத் தெரியும்... உம்முடைய வேலையைப் போய்ப்பாரும்...''

அவனுடைய முகம் சிறுத்துப் போனது. அக்கம் இருந்தவர்கள் எல்லாம் இவனையே பார்த்து ''உனக்கு ஏன் இந்தவேலை'' என்று பரிகசிப்பதுபோல் அவர்கள் பார்வை.

மெதுவாக தலை குனிந்த படியே தனது இருக்கைக்கு வந்து அமர்ந்து கொண்டான் வெறுங்கையுடன் இருப்புக் கொள்ளவில்லை.

பிறகு— பேனாவை கையில் எடுத்து அரை நாள் லீவுக்கு கடிதம் எழுதினான்.

மேசையிலிருந்த பைல்களை எடுத்து லாச்சிக்குள் வைத்து இழுத்துப் பூட்டினான். அவனுடைய நீல நிற துணிப்பையை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டான். 'சீவ்கிளாக்' மேசையருகே சென்று லீவுக் கடிதத்தை கொடுத்து விட்டு வெளியேறி வந்தான்.

சிவசேகரத்தின் வீட்டை நோக்கி சைக்கிளை விரைவாக மிதித்தான்—

ஊதுபத்தி மணமும்-தையில வாசனையுமாக சாவீட்டின் புறச்சூழல் அவன் மனதை தாக்கியது.

மதிற்சுவரில் காகங்களைக் காணவில்லை..... அதற்கு பதிலாக அவற்றின் எச்சங்கள் வழிந்து அசிங்கப்படுத்தியிருந்தன.

□□

# அவன்

□ சு. மகேந்திரன் □

அது அவனைப் போலவே இருந்தது. ஆம்! அது அவனேதான்.

அவனது தலைமயிர் மேல்நோக்கி சீவப்பட்டிருந்தது. முன்பு அவனை அந்த மாலைநேரத்தில் பார்த்தபோது நெற்றிவரை இருந்த தலைமயிர் இப்போது, அடர்த்தி குறைந்து காணப்பட்டது. கரியநிறந்தான் அவன். அதில் ஒரு ஒளிர்வு தெரிந்தது. அவனை ஆவலுடன் பார்த்தேன். வழக்கம்பரையால் சென்றுகொண்டிருந்த 'பிக்கப்' பில் அவன் சாரதி ஆசனத்தில் இருந்தான். வயது முப்பதுக்கு மேல் ஒன்று இரண்டு இருக்கும். அவனது பக்கத்தில் மூன்று பேர் இருந்தனர். பின்னால் இருந்த சீற்றுக்களில் வரிசையாக ஏ.கே-47, சீனத்தயாரிப்பான ரி-81, ரீ-56-2 என்பனவற்றை தோளில் சுமந்தபடி பல இளம் போராளிகள் அமர்ந்திருந்தனர்.

சீனத்துப்பாக்கிகளைப் பார்த்தபோது, தலைவரும் விஜயதுங்காவும் ஆயுதங்கள் வாங்கப்போனது பற்றி மக்கள் விகடமாகக்கூறும் கதைக்கு கருவாக அமைந்த கார்ட்டூனை வரைந்த அந்த உருண்டை முகமுடைய ஓவியனின் ஞாபகம் வந்தது.



அந்த பிக்கப்பின் பின்னால் மேலும் இரு பிக்கப்புகள் போராளிகளுடன் சென்று கொண்டிருந்தன. பொன்னாலைச் 'சென்றி'க்கு போகிறார்களோ அல்லது திருவடி நிலைக்குச் செல்லுகிறார்களோ தெரியாது. திருவடி நிலையில் கடற்சுழியில் அகப்பட்டு எனது அப்பாவின் கொள்ளுப்பாட்டன் இறந்தவராம். (அப்பாவுக்கு அவரது பாட்டனார் கூறியது). எனது நண்பன் ஒருவன் கூட உறவினர் ஒருவரது உடலை எரித்து விட்டு கடலில் இறங்கியவன் திரும்பி வரவேயில்லை.

அவன் ஒருபெரிய குறுப்பின் லீடராக இருக்கின்றான் என நினைத்துக்கொண்டேன். அவனை முதல்முதலாக பார்த்த அந்த வருடத்தை வைத்துக் கணக்குப் பார்த்தால் எனது ஊகம் சரியானதாக இருக்கும்போலவேயிருந்தது.

எங்கள் பகுதியில் இன்றுதான் அவனை முதன்முறையாகக் காண்கிறேன். சமீபத்தில் தான் இங்கு மாற்றலாகி வந்திருக்கிறான் போலும்.

மூன்று மாதங்களுக்குமுன் நகரில் அவனைக் கண்டேன். ஒரு திறந்த ஜீப்பில் அவனும் வேறுமூன்று போராளிகளும் கடற்கரைச்சந்தியால் நகரப் பகுதிபைநோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள் கதைக்கக் கூடிய தொலைவில் கண்டது என்னவோ ஒருநாள் தான். ஆஸ்பத்திரிச் சந்தியில், நெரிசல் மிகுந்த காலைநேரம் அது. காவல் துறையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தனர். வாகனங்கள் மறித்து வைக்கப்பட்டிருந்த மூன்று தெருக்களிலும் தங்களை வீணாக சுணங்கவைக்கிறார்கள் என்ற மனோநிலையுடன் மக்களில் சிலர் அவதியுற்றுக்கொண்டிருப்பது தெரிந்தது. இந்த மனோநிலை மாற வேண்டும். என நினைத்துக் கொண்டேன். நான் சைக்கிளுடன் நின்ற அதே றோட்டிலேயே அதுவும் எனக்கு வலப்புறமாக' அவனும் சகபோராளியொருவனும் மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருந்தனர். ''நீங்கள் சதீஸ்குமார்தானே?'' எனக்கேட்டிருக்கலாம். ஆனால் தயக்கம் வந்து தடுத்து விட்டது. அவன் என்னை உற்றுப்பார்ப்பதுபோல் இருந்தது. காவல்துறையினர் எமது றோட்டில் நின்ற வாகனங்களை சைகை காட்டி போக்குவரத்துக்கு விடவே, மோட்டார் சைக்கிள் என்னை முந்திக் கொண்டு போய்விட்டது.

இந்த எட்டுவருடகாலத்தில் பல போர் முனைகளில் செயல்பட்டுக்கொண்டிருந்த ஒருவன் ஓர் இரவுமட்டுமே தங்கியிருந்த இடத்தின் சொந்தக்காரனை மறந்துவிட்டதில் விந்தையில்லை; எனது முகத்தோற்றம் கூட மிகவும் மாறிவிட்டது.

□ □ □

பட்டணசபைக்காரர்கள் எவ்வளவு தான் மணலை அப்புறப்படுத்தினாலும் அடுத்த நாளே வீதியில் அது குவிந்து, சைக்கிள் ஓடுவதற்கு சிரமத்தைக்கொடுக்கும் தெருக்களைக்கொண்ட கிழக்குக்கரையோர நகரமொன்றில், எட்டு வருடங்களுக்குமுன் நான் வேலை செய்தபோது கையில் ஒரு பிரயாணப்பையுடன் எமது விடுதிக்கு அவன் வந்தான். வந்த இளைஞன் தயங்கிநின்றான். என்னிடமோ அல்லது சக ஆசிரியர்களிடமோ ரீயூசன் எடுக்கும் மாணவர்களில் ஒருவனல்ல அவன்.

''யாரைத் தேடுகிறீர்கள்?''

''பொத்துவிலுக்குப் போக வேண்டும். கடைசி பஸ்சும் போய்விட்டது. கடையில் சாப்பிட்டுவிட்டு எங்கே தங்கலாமெனக் கடைக்காரனிடம் கேட்டேன். 'மணமாகாத ஆசிரியர்கள் இங்கு தங்கியிருக்கிறார்கள் எனச்சொன்னார்.' அதனால் தான் இங்கு வந்தேன்'' என்றான்.

''தம்பி'' நீங்கள் சற்று இருங்கோவாறன்'' எனக்கூறி' முன்விறாந்தையிலிருந்த நாற்காலியைக் காட்டினேன். அக்கரைப்பற்றுக்கு வேலைக்குச் சென்ற ஆரம்ப நாட்களில் 'நீர்' என பலரை அழைத்திருக்கிறேன். அப்போது பலரது முகங்களில் அருசை தென்பட்டது. எங்கள் விடுதிக்கு முன்னிருந்த சுருட்டுக்கடை முருகேசு அண்ணரிடம் இது பற்றிக்கேட்டபோது அவர் சிரித்துக்கொண்டே' ''கிழக்கில் நீர்' நீ' நீங்கள்', என்றார். (அவரும் 'ஏ.எல்' வரை கணிதம் படித்தவராம்.) அதற்குப் பின் அங்கிருக்கும் வரை நான் யாரையும் நீர் என அழைப்பதில்லை.

நான் உள்ளே சென்றேன். விடுதியில் மணமாகாத ஆசிரியர்களுடன், யாழ்ப்பாணத்

தில் குடும்பத்தைவிட்டுவிட்டு எம்முடன் ராமமூர்த்தி மாஸ்டரும் தங்கியிருந்தார். அவரே விடுதிக்குப் பொறுப்பு. அவரிடம் வந்திருக்கும் இளைஞன்பற்றிக் கூறினேன்.

பள்ளிக்கூடம் மூடுவதற்கு இன்னும் சில நாட்களே இருந்ததால் ஆசிரியர்கள் எல்லோரும் கிழக்கு மாகாணத்தில் மலிவாகக் கிடைக்கும் பொருட்களைச் சேகரிப்பதில் முனைந்திருந்தனர். பச்சையும் சிவப்புமான நிறங்களில் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த பன்பாய்ச்சுருள்கள் ஒளிர்ந்தன. ஒவ்வொரு சுருளிலும் ஏழெட்டுப் பாய்களாவது இருக்கும். அரிசி நாலைந்து உரப்பைகளில் ஒருமூலையில் கிடந்தது. ராமமூர்த்தி மாஸ்டரிடம் கணக்கியல் படிக்கும் சொர்ணலிங்கம், அவலுக்கு சீனிப் பாகுபோடும் பதத்தை விடுதிச் சமையல் காரனுக்கு விளக்கிக் கொண்டிருந்தான். அடுத்த சில நாட்களில் தயிர்த்தேங்காய்களும் வந்துவிடும். ஆசிரியர்கள், மட்டக்களப்பு புளியந்தீவுக்கு அருகே உள்ள பாலத்தருகில் கசுக்கொட்டை விற்கும் ஆச்சிமாரிடம் இரண்டு கசுக்கொட்டைப் பக்கற்றுகளையும் வாங்கிவிட்டார்களானால் மீதமிருப்பது ரயில்வே வொறண்டில் புறப்படவேண்டியதுதான். பின் விறாந்தையில் மாணவர்கட்கு ஓகஸ்ட்மாத ஏ.எல் பரீட்சைக்கான இரசாயன பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கு விடை கூறிக்கொண்டிருந்தார் சிவஞானம் மாஸ்ரர்.

எம்முடன் படிப்பிக்கும் கஜேந்திரன் மாஸ்ரர் ரிசேவ் இன்ஸ்பெக்டராகவும் வேலை செய்பவர். பாடசாலையிலும் வெளி இடங்களிலும் இனப்பிரச்சினை தொடர்பாக எனது கருத்துக்களை, ஆட்களை யாரெனப் பார்க்காது கதைத்திருந்தேன். அதனால்தானோ என்னவோ அவரிடம், 'என்னில் நடவடிக்கை எடுக்கவேண்டி வந்தாலும் வரலாம்; பின்பு பிணையில் எடுக்க முடியாது, என, இன்ஸ்பெக்டர் சில்வா கூறியிருந்தாராம். கஜேந்திரன் அதை எனக்குக் கூறியபோது ராமமூர்த்தி மாஸ்ரரும் அருகில் இருந்தார். இளைஞன் பற்றி நான் சொன்னபோது இதனை அவர் மீண்டும் நினைவுபடுத்தினார்.

''எப்படியிருந்தாலும் இந்த இளைஞனை இரவில் வெளியேவிடமுடியாது'' என்றேன்.

''நீ பொறுப்பேற்றால் சரி. எதற்கும் அடையாள அட்டையை ஒருமுறை வாங்கிப்பார்த்துக்கொள்'' என்றார், ராமமூர்த்தி மாஸ்ரர்.

பொத்துவிலுக்கு போனமுறை போன போதும் கடைசி பஸ்சை விட்டுவிட்டதால் கல்முனையில் ஓர் ஆசிரியருடன் தங்கியதாகக் கூறியவன். தனது அடையாள அட்டையை நீட்டினான். அன்று அந்த ஆசிரியர் தனது அடையாள அட்டையைக் காட்டும்படி கேட்டதாகவும் சொன்னான்.

அடையாள அட்டையில் சதீஸ்குமார், பருத்தித்துறை என்றிருந்தது.

''ஏன் பொத்துவிலுக்குப் போறீங்கள்?''

''மாமா ஒருவர் மிருகவைத்தியராக இருக்கிறார். அவரிடம் போறன்.''

அப்போது நேரம் ஏழுமணி இருக்கும் அக்கரைப்பற்றில் திரைப்படங்கள் மாலையில் ஏழுமுப்பதுக்கே ஆரம்பிக்கும். அப்படி ஆரம்பித்தால்தான் பத்து இருபது மைல் தூரங்களிலிருந்து வயல் வேலைகளை முடித்துவிட்டு வருபவர்களுக்கு, படம் பார்க்க வசதியாக இருக்கும். ஏற்கெனவே படம் பார்க்க வருவதாகக் கூறியிருந்த நண்பரும் வந்து சேர்ந்தார்.

வாலிபனை யாரென நண்பர் கேட்க ''எங்களூர் பையன். நாளைக்குக் காலையில் அம்பாறையில் ஒரு இன்ரவியு. என்னுடன் தங்கியிருந்து போகவந்துள்ளான்,, என்றேன்.

வாலிபனைப் பார்த்து ''படத்துக்கு வருவீர்களா?'' எனக்கேட்டேன்.

''தங்க்யூ. நீங்கள் போய்விட்டு வாருங்கள். எனக்குக் களைப்பாக இருக்கிறது நான் படுக்கப் போகிறேன்.''

நல்ல வேளை, நாங்கள் முதலாம் காட்சிக்கே போனது. அன்றுதான் முத்துராமன் நடித்த 'தாகம்' வெளியிடப்பட்டிருந்தும்கூட நாம் படம்முடிந்து வெளியேவந்தபோது, விளம்பரப்பலகையின்மேல் 'அலாவுதீனும் அற்புதவிளக்கும்' பட விளம்பரம் ஒட்டப்பட்டுக்கொண்டிருந்தது. அதைப்பார்க்க நீண்ட கியூவில் மக்கள் நின்றனர்.

அன்று நானும் நண்பனும் கடையில் சாப்பிட்டோம். ஏற்கெனவே தான் இரவு உணவு அருந்திவிட்டு வந்ததாக இளைஞன் கூறியிருந்தும். ஒரு கொத்துரொட்டிப்பார்சலுடன் அறைக்கு வந்தேன்.

விளக்கைப் போட்டபோது சேட்டைக் கழற்றிவிட்டு பெனியனுடன் படுத்திருந்தவனது கழுத்தில் கறுத்தக்கயிறு ஒன்று தெரிந்தது. பொலிஸ்காரரின் நோட்டம் என்மேல் இருக்கிறது என ஏற்கெனவே தெரிந்திருந்தால் நான் பயந்து விட்டேன்.

இளைஞனை எழுப்பி கொத்துரொட்டியைச் சாப்பிடக்கொடுத்தேன்.

அவனைக் கட்டிலிலேயே படுத்திருக்கும் படி கூறிவிட்டு, பாயை எடுத்துக்கொண்டு வெளியே போனேன்.

விறாந்தையில் படுக்கையை விரித்த நான் படுக்காமல், இரவு இரண்டு மணி வரை, அங்கிருந்த கதிரையில் நித்திரையில்லாமல் அமர்ந்திருந்தேன்.

இளைஞன் எந்தக் கடையில் இரவு உணவை முடித்துக்கொண்டு வந்தானோ அந்தக் கடைக்காரனை நம்பவே முடியாது. என்னுடன் படம் பார்க்க வந்த நண்பன் ஆபத்தில்லாதவன்.

மாலையில் இரசாயன ஆசிரியரிடம் ரியூசன் எடுத்துக்கொண்டிருந்தவர்களில் பலவகையானோர் இருந்தனர.

அக்கரைப்பற்றில் 'சாரதா' விலும் 'வெலிங்டனி' லும் இரண்டாம் காட்சி முடிந்த பின் சந்தடிகள் அடங்கி, பின் மீண்டும் அதிகாலை நான்குமணிக்கு உழவு இயந்திரங்கள் செல்லும் சத்தங்கள் கேட்கத்தொடங்கிவிடும். இதற்கு இடைப்பட்ட நேரத்திலும் சாகாமம், கஞ்சிக்குடியாறு போன்ற இடங்களிலிருந்து ஏதாவது உழவு இயந்திரங்கள் வந்தால், அவை அக்கரைப்பற்றுச் சந்தியில் நிற்பாட்டும் சத்தம் கேட்கும். இரண்டு நிமிடத்தில் அங்கிருக்கும் 'நைற் கடை'யில் கொத்துரொட்டிபோடுபவன், தட்டில் அடிக்கத்தொடங்கிவிடுவான். களைப்புடன் வரும் 'ட்ரைவர்கள்' இரண்டு முட்டை போட்ட ஸ்பெசல் 'கொத்துரொட்டி' சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். அதற்குமேல் பெரிய கிளாஸ்களில் தோடம்பழச்சாறு குடிப்பார்கள்.

அக்கரைப்பற்று மார்க்கட் இரவுக்காவற்காரன் இரண்டு முறை மணி அடித்தான். அதன்பின் என்னால் தூங்காமல் இருக்க முடியவில்லை. கதிரையில் அப்படியே தூங்கிவிட்ட எனக்கு நான் வாசித்துக்கொண்டிருந்த 'போர் இல்லாத இருபது நாட்கள்' என்ற புத்தகம் கையிலிருந்து நழுவி விழுந்ததுகூடத் தெரியவில்லை. (போர்நாட்களில் ரஷ்ய மக்கள் ரயர்களினாலான சப்பாத்துக்களை அணிந்திருந்தார்கள் என்று வாசித்தது இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது.)

பிள்ளையார் கோவில் மணி ஐந்து மணிக்கு அடித்தது. விழித்தெழுந்தவன் அறைக்குள் சென்றேன். இளைஞன் படுக்



கையில் சப்பாணி கட்டி அமர்ந்திருந்தான். ''முதல் பஸ்சில் போகப்போகிறேன்'' என்றான்.

''முகம் கழுவி விட்டு வாருங்கள். ரீ வைக்கிறேன். குடித்துவிட்டுப் போகலாம்'' என்றேன். சாரத்தை களைந்து விட்டு 'கொட்ரொயில்' காற்சட்டையை அணிந்துகொண்டான்.

''உங்கள் உதவிக்கு நன்றி'' என்று கூறியவன் அக்கரைப்பற்று பஸ் நிலையத்தை நோக்கி நடக்கத்தொடங்கினான்.

□ □ □

அந்தப் 'பிக்கப்' நகரை நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போதும் ட்ரைவர் ஆசனத்தில் அவனே இருந்தான்.

நான் சுன்னாகம் சென்று 'அங்கு இலக்கிய ஏடு ஒன்றை நடத்தும் நண்பர் ஒருவருடன் கதைத்துக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

ஏழுமணிக்கு வீடு திரும்பியபோது ஒரு 'பிக்கப்' பொன்னாலைப்பக்கமாக சென்று கொண்டிருந்தது. வாகனத்தின் பின்'லைற்' றின் ஒளியில் அதனது இலக்கப் தெரிந்தது.

''நாளைக்காலையில் சமையலுக்கு விறகு இல்லை. காய்ந்த விறகாக வாங்கிப் போடுங்கோ'' என மனைவி காலையில் கூறியது ஞாபகத்துக்கு வந்தது.

வீட்டுக்குப்போனதும் மனைவி ''விறகு வாங்கவில்லையா?'' எனக் கேட்டாள்.

''நாளைக்காலைக்கு பாணும் மத்தியானத்திற்கு தோசையும் வாங்கலாம்'' என்றேன்.

அன்று அமாவாசை நாள். ''ஏன்தான் இந்த இருட்டிலெல்லாம் திரிகிறீர்களோ? நண்பர்களிடம் சென்று அவர்களையும் குழப்பிக்கொண்டு'' என்றாள் மனைவி.

இரவு பத்துமணிக்கு சத்தங்கள் கேட்கத் தொடங்கின. காரைநகர் கடற்படை முகாமிலிருந்து' நிலவில்லாத நாட்களில் இப்படித்தான் இடைவிட்டு விட்டு ஷெல் அடித்தபடி இருப்பார்கள். அன்று தொடர்ந்து ஷெல் அடித்துக்கொண்டும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டுமிருந்தனர்.

நித்திரையாக இருந்த எனது மனைவி எழுந்து விளக்கேற்றினாள். முக்கிய சாமான்களைப் பைக்குள் வைத்து அடுக்கினாள். இரவுவேளைகளில் பெரிய சத்தங்கள் கேட்டால் ஓடுவதற்கு ஆயத்தமாகி விடுவாள்.

''இந்த இருட்டில் ஒரு இடமும் போக முடியாது. படுங்கோ'' என்றேன். பின்பு சத்தங்கள் அடங்கிவிட்டன. முக்கிய சாமான்களை பையில் அடுக்கி வைத்து விட்டால் மனைவி அமைதியாகி விடுவாள்.


படுத்தவள் பின் திடீரென எழும்பி ''சைக்கிளில் காற்று இருக்கிறதா?'' எனக் கேட்டாள். ''இருக்கிறது'' என்றேன். அதன் பின் அவளில் இருந்து மெல்லிய குறட்டைச் சத்தம் கேட்டது.

ஒரு ஹெலி கொப்ரர் பலாலியில் இருந்து காரைநகர் நோக்கிச் சென்றது. வெளியே சென்று பார்த்தேன். வானத்தில் ஒரு நட்சத்திரம் கூட இல்லை. பூனைவந்து காலை வருடியது. சில நெத்தலிகளை எடுத்து அதற்குப் போட்டேன். நெத்தலிக்குள் ஐக்கியமானது அது. தண்ணீர் குடித்து விட்டுப் படுக்கைக்குப் போனேன். போன 'ஹெலி' பலாலி நோக்கிச் செல்வது கேட்டது. போனபோது அது எழுப்பிய சத்தத்தைப்போல் இப்போது அதன் சத்தம் இருக்கவில்லை. தூக்கமுடியாத பாரத்தைச் சுமந்துகொண்டு செல்வது போன்ற சத்தத்துடன் அது சென்றுகொண்டிருந்தது. சிறிது நேரத்தின்பின் மீண்டும் தொடங்கிய 'ஷெல் அடி' விடியும்வரை விட்டு விட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது. காலையில் பாணும் தோசையும் பேப்பரும் வாங்கக் கடைக்குப்போனேன்.

கடையில் ,நேற்று இரவு' காரைநகரில் பெரிய கண்ணிவெடித்தாக்குதல் நடைபெற்றதாகக் கதைத்துக்கொண்டார்கள்.

அவன் உபயோகிக்கும் பிக்கப் வந்து கொண்டிருந்தது. அதில் அவன் இல்லை. சிவந்த நிறத்தையுடைய வேறொரு போராளி ட்ரைவர் சீற்றில் இருந்தான். பின் சீற்றுகளில் இருக்கும் இளம் போராளிகள் எப்போதும் சிரித்துக் கதைத்துச் செல்பவர்கள்' அன்று இறுகிய முகங்களுடன் அமர்ந்திருந்தனர்.

□□



# புத்தகக் கனவு

□ வவுனியா திலீபன் □

என்னவோ தெரியவில்லை, நீண்ட காலமாக திலகன் அவர்களுடன் ஒட்டுவதில்லை. அவர்களின் சினேகிதம் தேவையற்றதாகவோ - அவர்களுடன் சம்பாசிப்பது வீண் என்றோ அவன் கருதியிருக்கலாம்.

ஆம். இப்படித்தான் அதோ அந்த கடைத் தெருவிற்கு முன்னே விழுதுவிட்ட ஆலமரம் ஒன்றின் கீழ், ஊர்ச் செய்திகளை அலசிக் கொண்டு நிற்கும் அந்த நண்பர்களும் திலகனைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பார்களோ தெரியவில்லை.

ஒரு விஷயம் உண்மை.

நாவல்களிலோ... சிறுகதைகளிலோ... கவிதைகளிலோ திலகனுக்கு ஆழமான பரிச்சயம் வந்த போது, அல்லது வந்துள்ளது என அவன் கருதியிருந்த போது அந்த நண்பர்களின் தொடர்பு தேவையற்றது என அவன் நினைத்தான்.

அந்த நட்புச் சமுத்திரத்தில் ஒரு துளியாகச் சேர்ந்திருந்தது-

ஊர் வம்புகளையும், வாழ்க்கையுடன் சம்பந்தப்படாத விஷயங்களையும் சம்பாஷித்துக் கொண்டிருப்பதற்கு திலகன் சம்மதிக்கவில்லை.

வீட்டில் தனிமையில்- அவன் புத்தகங்களுடன் சினேகம் கொள்ள ஆரம்பித்தான். கதை, கவிதைகளுடன் பேசுவான். குதிப்பான். திமிறுவான். வாய்விட்டு அழுவான்.

எத்தனை வகையான புத்தகங்கள்... வண்ண வண்ண அட்டைகளுடன் எழுத்தாளர்களின் முகம் பிரகாசிக்கும் வடிவில் சகல நூல்களையும் அடுக்கி வைத்திருக்கிறான்.

அன்று கடைத்தெருப் பக்கம் சென்ற போது-

"காமினிதான் செய்தது......"

"இல்லை. பிரேமதாசாதான் செய்தது......"

"உங்களுக்கு எதுவுமே தெரியாது. செய்ததெல்லாம், ஜே. ஆர். தான்"- இன்

னொருவன் கூறிவிட்டு, திலகனைப் பார்த்தான். திலகனுக்கு எதுவுமே புரியவில்லை.

அதிகமாக மௌனத்துடன் வாழப் பழகிக்கொண்ட திலகனுக்கு, தன் முன்னால் நண்பர்கள் பேசிக் கொள்ளும் விஷயம் பற்றி எதுவும் புலப்படவில்லை.

தன்னுடன் கொஞ்சம் ஒட்டக்கூடிய சேகரை அழைத்தான். மிருதியான ஆர்வத்துடன்-

"என்ன சேகர் இவங்கள் கதைக்கிறாங்கள்" எனக் கேட்டான்.

"அது 'யாழ்ப்பாணம் லைபிறறி'யை எரிச்சது ஆர் எண்டு ஆராய்ச்சி செய்யிறான்கள்."

திலகனுக்கு, சேகர் சொன்னதன் தொனி சிரிப்பை வரவழைத்தது. சேகரைப் பார்த்துக் கேட்டான்.

"உண்மையா ஆர் செய்தது?"

"என்ன உனக்குக் கூடவா தெரியாது... சிறில் மத்தியூதான் செய்தது ....."

இதைக் கூட திலகன் நம்பத் தயாராக இல்லை. யாரோ ஒரு சிங்கள இனவாதி திட்டமிட்டுச் செய்திருக்கலாம். ஒரு இனத்தை அழிப்பதற்கு முன்னர்-அந்த இனத்தின் கலாசார பதிவுகளை, ஆவணங்களை அழித்துவிட்டால் எல்லாமே வெற்றியாக முடிந்துவிடும் என அவன் கருதியிருக்கலாம்.

"திலகன் என்ன இவ்வளவு விஷயங்கள் வாசிக்கின்றாய் இதைப் பற்றி எதுவுமே தெரியாதா .. ?"

"தெரியாது... செய்தி மட்டும் தான் தெரியும்."

"சுஜாதா இச் சம்பவத்தை வைத்து ஒரு சிறுகதை எழுதியிருக்கிறார் .."

"கதையின் பெயர் என்ன?"

"தெரியாது மறந்து போனேன்."

"எப்ப... என்னத்தில வெளிவந்தது."

"தெரியாது தெரியாது"

'சேகரைப் போன்றவர்களுக்கெல்லாம் இவையெல்லாம் தெரியாது. கண்ணில்படும் கதை, அதை வாசிப்பதுடன் சரி. ஆனால் எனக்கு ஒரு கதாசிரியன் எப்போது கல்யாணம் செய்தான். அவன் முதல் பிள்ளையின் பெயர் என்ன? என்பதெல்லாம் தெரியும்' என்று எண்ணிக் கொண்டவன்.

கலை, இலக்கியங்களை ஆரம்பத்தில் தனக்கு பரிச்சயம் செய்து வைத்த சுந்தரமூர்த்தி வீட்டிற்கு சென்றான்.

அவர் நின்றார்; வரவேற்றார்.

இதயத்தில் சந்தோஷம் பூத்தது. கேட்டான்.

"நீ அதை வாசிக்கவில்லையோ..."

"இல்லை."

"என்னிடம் இருக்கு... புத்தகமாக பல சிறுகதைகளுடன் சேர்த்து வைத்திருக்கிறன். உனக்கு அதைச் சொந்தமாகவே தாறன்."

மனதுள் மகிழ்ச்சி மழையாகக் கொட்டியது.

புத்தகம், அதுதான் புனிதமான உலகம்.

"அந்தக் கதையின்ரை பெயர் என்ன?"

"ஒரு லட்சம் புத்தகங்கள்."

"அருமை... அருமை" என்று திலகன் தன்னை அறியாமலேயே புகழ்ந்தான்.

☐ ☐ ☐

"வந்தவங்கள் திரும்பி விட்டாங்கள் போல கிடக்கு ..." – முதியவர் ஒருவர் சொன்னார்.

திலகன் புதிய ஊரில் நின்று கொண்டு அந்தப் பெரியவரின் பேச்சை கேட்டான்.

சில தினங்களுக்கு முன்னர் - அவன் ஊருக்குள் இராணுவம் கொலை வெறியுடன் திடீர் என்று புகுந்த போது.

திலகன் புத்தகங்களை அப்படியே விட்டு விட்டு, ஓடிவந்து விட்டான்.

"ஆமிக்காரர் திரும்பிப் போட்டாங்களாம். எல்லாச் சனமும் போகுதுகள்.. "

திலகன் சைக்கிளை மிதித்தான.

அவனுடன் சேர்ந்து இன்னும் சிலர்.

அவன் அவசரமாக தன் வீட்டிற்குள் நுழைந்தான். புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்த இடம் சாம்பல் பூத்து .. எரிந்த காகிதங்கள் காற்றிற்கு தள்ளப்பட்டு.. ..

திலகனின் நெஞ்சு விம்மியது.

எரிந்த தாள் ஒன்று காற்றில் அள்ளுண்டு, திலகனின் காலடியில் சிக்கியது. அது சிதைந்து போகாமல் .. கையில் எடுத்துப் பார்த்தான்.

சாம்பல் காகிதத்தில்— 'ஒரு லட்சம் புத்தகங்கள்' என்று தெளிவாகத் தெரிந்தது. அதை கசக்கி தூளாக்கிவிட்டு .. வாயருகில் வைத்து ஊதினான்.

வெளி வீதியில் நண்பர் குழு சிரித்துப் பேசிச் செல்வது தெளிவாகக் கேட்டது. ☐☐

# நல்லை முருகன் பாடல்கள்

## ஒலி நாடா

— ஒரு குறிப்பு

□ கலாநிதி. சபா. ஜெயராசா □

எலத்திரன் தொடர்பியல் வளர்ச்சியில் இசையும், நடனமும் கையடக்கமான பொதிகளாக்கப்படும் கலைத்துலங்கலை எமது சூழலில அனுபவிக்கும் செயற்பாடாக 'நல்லை முருகன் பாடல்கள்' ஒலி நாடா ஆக்கம் விளங்குகின்றது.

இதன் இன்னொரு பரிமாணம் கூட்டுமுயற்சியை மீளவலியுறுத்தி நிற்றலாகும். கவிதையாக்கம் - அவற்றுக்குரிய இசையமைப்பு - அவற்றை ஆற்றுகைப்படுத்தல். தொழில்நுட்பச் செம்மையுடன் பதிவு செய்தல் என்றவாறு பன்முக ஆற்றல்களை ஒன்றிணைக்கும் எலத்திரன் தொடர்பியல் எமது மண்ணிலே செப்பமாக வளர்வதைக் காட்டும் குறியிடாக இந்த ஒலி நாடா அமைகின்றது.

எமது மரபு முறை ஒப்பீட்டில் கூறுவதானால் வெண்பா யாப்பு எத்துணை சுத்தமானதோ அத்துணை சுத்தமானது எலத்திரன் தொடர்பியல். சிறிதளவு பிசிறல்கள் இருந்தாலும் துல்லியமாகக் காட்டிவிடக் கூடிய தொடர்புக் கோலத்தை எலத்திரன் தொடர்பியல் ஆக்கம் கொண்டிருப்பதனால் மிகுந்த நிதானத்தோடும், தொழில்நுட்பச் செம்மையோடும், செய்யவேண்டிய கலைப்பெறுப்புணர்வினை



நல்லை முருகன் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா வெளியிட்டு விழாவில் வண. பிதா பிரான்ஸிஸ் யோசப் அடிகள் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் இசையமைப்பாளர் கண்ணன் பொன்னாடை போர்த்தப்படுவதை இரண்டாவது படத்திலும், பாடகர் வர்ணராமேஸ்வரனுக்கு பேரரசி வண்ணச்சோலை உரிமையாளர் பொன்னாடை போர்த்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

உணர்ந்து செயற்பட்டுள்ளனர்.

எமது கர்நாடக இசை இன்று இரண்டு திறனாய்வுக் கருத்துக்களுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. அவையாவன:

1. கர்நாடகஇசையூடாக சமகால உணர்வுகளும், சமகால யதார்த்தங்களும் வெளியிடப்படுவதில்லை என்ற கருத்து.

2. ஏற்கனவே வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு "கறாராக"ச் செயற்படுவதனால் கர்நாடக சங்கீதம் என்ற கலைவடிவம் ஒரு 'கைவினை' யாக மாற்றப்பட்டுள்ளது என்ற கருத்து.

மேற்கூறிய இரண்டு முன் வைப்புக்களுக்கும் முகம் கொடுப்பதுபோல் 'நல்லை முருகன் பாடல்கள்' அமைந்துள்ளன. கர்நாடக இசைத்தடத்தில் நின்று சமகால மனவெழுச்சிகளைக் காட்டும் கலையாக்கமாக இந்த ஒலிநாடா விளங்குகின்றது. கைவினைத்தடத்தைமீறும் கற்பனைகளும், ஆக்கமுனைப்பும் முன்னெடுக்கப்படுகின்றன. எமது மரபில் முருகன் பல்வேறு உணர்வுகளுக்கு குறியீடாக விளங்கும் பாண்மையாகக்காணலாம். காதலில் இருந்து வீரமும் ஞானமும் வரை முருகன் சமூக அடுக்கமைப்பில் அனைத்துமட்டங்களுக்குமுரிய உருவப்பொருளாயும் அருவப்பொருளாயும் விளங்கும் பக்திப் பண்பாட்டுத்தளத்தில் ஆழ வேரூன்றிய கவிதையாக்கத்தைக் காணமுடியும். நீக்ரோ கவிஞர்களது கறுப்புக் கவிதைகளில் இதற்கு ஒப்புமை காணலாம். ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட தமது உணர்வுகளை தமது பண்பாட்டுக் குறியீடுகளைப்பயன்படுத்தி வீராவேசப்படுத்தும் கலையாக்கங்களைக் கறுப்புக்கவிதைகளிலே காணலாம். அவ்வாறான கோலங்களை நல்லை முருகன் பாடல்களும் புலப்படுகின்றன. ☐☐

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

---

வெளிச்சம்
கலை, இலக்கிய சமூக இதழ்

வெளியீடு:
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

அச்சமைப்பு:
ம. மரியதாஸ்

ஒவியங்கள்:
தயா
கோபாலி

இன்னும் சில நாளில் ...

- தமிழோசை
- இது எங்கள் தேசம்
- தாயகக்கனவு
- சின்னவிழிகள்

போன்ற வெற்றிப் படைப்புகளைத் தந்த

## பொ. தாசனின் மற்றுமோர் சிறந்த படைப்பு

# இன்னும் ஒரு நாடு

### இன்னும் ஒரு நாடு

பாடல் : புதுவை இரத்தினதுரை
இசை : முரளி
பாடியவர்கள் : சாந்தன், சுகுமார்
தயாரிப்பு : முல்லை மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகம்
நெறியாள்கை : பொ, தாசன்

வெளிச்சத்தின் சிறுகதைச் சிறப்பிதழை
வாழ்த்துகிறோம்

மக்கள் நலனில் முழு
அக்கறை கொண்டு
எங்கள் கூட்டுறவுச் சங்கம்
செயலாற்றி வருகின்றது.
கூட்டுறவுச் சங்கத்துக்கு
ஆதரவளிப்பதன் மூலம்
மேலும் மேலும் நன்மைகளை
நீங்கள் பெற்றுக்கொள்ள
முடியும்.
உங்களுக்குத் தேவையான
சகலவிதமான
பொருட்களையும்
வரையறுக்கப்பட்ட விலையில்
இலாபகரமாக
எங்கள் கிளைகளில்
பெற்றுக்கொள்ளுங்கள்.

# பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்
பளை.